
திருவாசகம் - 05

# திருசதகம் கதைவழியில்



கே. வி. குணசேகரம்

வைத்திலிங்கம். எனது தாயார் எனக்கு 10 வயதில் காலமானதால் அவரது விபரங்கள் கிடைக்கவில்லை.



தந்தையின் தந்தையும், தாயும்.



உ

சிவமயம்

# திருச்சதகம் கதை வடிவில்

# மெய் உணர்தல்

# திருப்பெருந்துறையில் அருளியது

**மெய்தான் அரும்பி விதிர் விதிர்த்து உன் விரை ஆர் கழற்கு என்**

**கைதான் தலை வைத்துக் கண்ணீர் ததும்பி வெதும்பி ள்ளம்**

**பொய்தான் தவிர்ந்து உன்னைப் போற்றி சய சய போற்றி என்னும்**

**கைதான் நெகிழவிடேன் உடையாய் என்னைக் கண்டு கொள்ளே 01**

அன்று பிரதோச நாள். ஆச்சிரமத்தில் ஏராளமான பக்தர்கள் கூடியிருந்தனர். அருள்தாசன் ஆச்சிரமத்தில் இருந்த சிவனுக்கு மாலைசூட வந்தபோது கதிரேசன் அதைத் தடுத்தார், "அருள் நீ வர்த்தகன். பணக்காரன் தானதர்மம் செய்பவன். அத்துடன் படித்தவன். நீ சில தினங்களுக்கு முன் மதுவருந்தியுள்ளாய். மது அருந்துபவன். மாமிசம் உண்பான். அவ்விரண்டும் மகாபாவங்கள். அதைச் செய்துவிட்டு சிவனுக்கு மாலை சூடுவதால் உனக்கு அவனது அருள் கிடைக்கப்போவதில்லை. சிவபூசை செய்வோர் உள்ளத்தாலும் உடலாலும் புனிதர்களாக இருத்தல் வேண்டும். பூசை முடியத் திருவாசகம் பாடுதல் வேண்டும். அதைப் பாடுவோரின் நிலை பற்றி மாணிக்கவாசக சுவாமிகள் கூறியது உனக்குத் தெரியும். இருப்பினும் இப்போ உனக்குச் சொல்ல வேண்டியுள்ளது, ''நறுமணம் கமழ்கின்ற மலர்களைச் சூடிய உனது திருவடியை நாடும் எனக்கு உடல் புளாங்கிதமடைகிறது. உணர்ச்சி மிகுதியால் நடுநடுங்குகிறது. கைகள் தலையின் மேல் கூப்பப்படுகின்றன. கண்ணீர் பெருகுகிறது. உடலின் வெப்பம் அதிகரிக்கிறது. உள்ளத்தில் இருந்த உலகப் பற்றுக்கள் யாவும் தலைதெறிக்க ஓடுகின்றன. நா உனது பெருமைகளைப் பாடுகிறது. ஈசா நான் உன்னை நம்பியிருக்கிறேன். உன்னை ஒரு கணமும் மறக்கமாட்டேன். நீ சர்வமும் அறிந்தவன். அதனால் எனது பக்தியின் நிலை உனக்குத் தெரியும். அதனால் உனது திருவுளப்படி வாழ்வது தான் முறையான வாழ்க்கையாகும்" என்கிறார் அதனால் உன்னைப் பற்றிய வரலாறு முழுவதும் சிவனுக்குத் தெரியும். நீ கற்றவன். எனது உறவினன். நீ ஏன் சிவனை வணங்குகிறாய்….? ஒரு செயலைச் செய்வது பயன்கருதி. நீ உனது நல்வாழ்வு கருதிச் சிவனை வணங்குவதானால் முறைப்படி வணங்கு. நீ வர்த்தகன். முறைப்படி வியாபாரம் செய்யாவிட்டால் நட்டமடைவாய். அதுபோல முறைப்படி வணங்காவிட்டால்

பாவம் தான் வந்து சேரும். நீ சேர்ந்திருப்பவர்கள் நீறு பூசி, வெள்ளை உடுப்புக்களை உடுத்துச் சமயத்தொண்டு செய்வதுபோலப் பிழைப்பு நடத்துகின்றனர். அது சிவனுக்கும் தெரியும். மக்களுக்கும் தெரியும். மக்கள் பாவத்தைக் கதைகளாலும் தேடலாம் என்பதற்காகப் பேசாதிருக்கின்றனர்” என்றார் கதிரேசன்.

**கொள்ளேன் புரந்தரன் மால் அயன் வாழ்வு குடிகெடினும்**

**நள்ளேன் நினது அடியாரொடு அல்லால் நரகம் புகினும் எள்ளேன்**

**திருஅருளாலே இருக்கப் பெறின் இறைவா**

**உள்ளேன் பிற தெய்வம் உன்னை அல்லாது எங்கள் உத்தமனே. 02**

“அருள், சிவனடியான் எளிமையுடையவனாகவும், வசதிகள் இருந்தாலும் அவை அற்றவனாகவும், பிற உயிர்கள் மீது அன்புள்ளவனாகவும், அவற்றைக் கொடுமைப்படுத்தாதவனாகவும் வாழவேண்டும். மாணிக்கவாசக சுவாமிகள் சொல்கிறார்; “ஈசா நான் உனது திருவருளுக்குப் பாத்திரமானால், இந்திரன், விஸ்ணு, பிரமா முதலிய பதவிகளை நீ எனக்குத் தந்தாலும் நான் ஏற்றுக்கொள்ள மாட்டேன். எனது குடிகெட்டாலும் சிவனடியார்களை அல்லாது மற்றவர்களை மதிக்க மாட்டேன். நரகத்திற்குச் சென்றாலும் அங்கே நான் மகிழ்வுடன் வாழ்வேன். அதுபோல உன்னைத்தவிர வேறு எந்தத் தெய்வத்தையும் வணங்க மாட்டேன்” என்கிறார். சிவன் தான் தெய்வம். ஏனைய தெய்வங்கள் சிவனின் ஏவலைச் செய்பவர்கள்; பலர் அவர்களை வணங்குகின்றனர்; நீ சில தினங்களுக்கு முன் உனது வியாபாரம் விருத்தியடைய வேண்டும் என்பதற்காகப் பூசாரி ஒருவன்மூலம் உயிர்ப்பலி கொடுத்துப் பூசை செய்தாய். அது உனது விருப்பம். எதையும் நீ செய். ஆனால் சிவன் கூறியதற்கு மாறாக நடப்போர் சிவத்துரோகிகள். அவர்கள் சிவனை வணங்குவதைத் தவிர்க்க வேண்டும். சிவன் எல்லாம் தருவான். அதை நம்பாது உயிர்ப்பலி கொடுத்துத் தேவதையை வணங்கிய நீ எப்படிச் சிவபக்தனாவாய்…? நீ உனது கோரிக்கையைச் சிவனுக்குச் சொல்லியிருக்க வேண்டும். அவனுக்குப் பூசை செய்திருத்தல் வேண்டும். போலிச்சாமியார்களின் வழிகாட்டலுக்கு அமைவாக பாவம் செய்திருக்கிறாய். ஊரில் சிவனை நம்பியவர் யாராவது ஒருவர் கெட்டழிந்திருக்கிறார்களா..? நீ பணக்காரன், மக்களால் மதிக்கப்படுபவன். நீ அப்பூசையைச் செய்தமையால் இப்போ பலரும் அப்பூசையைச் செய்ய விரும்புகின்றனர். சிவபக்தன் மாணிக்கவாசக சுவாமிகள் கூறுவதுபோலப் பொன், பொருள், பதவிகளுக்கு ஆசை கொள்ளக்கூடாது. சிவன் எல்லாம் அறிந்தவர். எல்லோரைப் பற்றியும் தெரிந்தவர். அவர் உரியவேளையில் யாவும்

கொடுப்பார். இப்போ சிவன் உனக்கு என்ன குறை வைத்தாரென்று தேவதைக்குப் பூசை செய்தாய்.?" என்று கேட்டார் கதிரேசன்.

**உத்தமன் அத்தன் உடையான் அடியே நினைந்து உருகி**

**மத்த மனத்தொடு மால் இவன் என்ன மனம் நினைவில்**

**ஒத்தன ஒத்தன சொல்லிட ஊரூர் திரிந்து எவரும்**

**தம் தம் மனத்தன பேச எஞ்ஞான்று கொல் சாவதுவே 03**

"அருள், மனிதனுக்குப் பல பருவங்கள் உள்ளன. ஒவ்வொரு பருவங்களிலும் ஒவ்வொரு செயலைச் செய்ய வேண்டும். உதாரணமாக இளமைப்பருவம் கல்விக்குரியது. அதுபோல முதுமைப்பருவம் துறவுக்குரியது. துறவென்றவுடன் வீடு வாசல், மனைவி, மக்கள், உற்றார், உறவினர், பொருள் பண்டங்களைவிட்டுக் காட்டுக்குப் போவதென்றே பலரும் பொருள் கொள்வர். அதல்ல துறவு. நீ வீட்டில் சகல வசதிகளோடும் இருந்து வசதியான பொருட்களின் மீதுள்ள பற்றை நீக்கி வாழ்வது தான் துறவு. உனக்கு எழுபது வயது. பிள்ளைகளைக் கரைசேர்த்துவிட்டாய். எல்லாப் பிள்ளைகளும் வசதியுடன் வாழ்கின்றனர். தற்போதைய நிலையில் நீ பற்றுக்களைப் படிப்படியாகக் குறைத்தல் வேண்டும். மதுவருந்துகிறாய். அதை விடு. உனது இளையமகனின் பொறுப்பில் வியாபாரத்தை விடு. நீ எல்லாவற்றிற்கும் தடையாக இருக்கின்றாய் என்று உனது இளையமகன் குறைப்படுகின்றான். அவனுக்கு நாற்பது வயது. அவனை அவனது விருப்பப்படி வாழ அனுமதி. அதனால் உனது மனப்பாரம் குறையப் பற்றுக்கள் அகலும். ஒருவன் தீயவழியில் நடந்தால்தான் புத்திமதி கூறுதல் வேண்டும். உனது இளையமகன் மாதவராசன் அறிவாளி, சிவபக்தன், ஒழுக்கமானவன். மாணிக்கவாசக சுவாமிகள் சொல்கிறார்; "இறைவா நீ எல்லோருக்கும் மேலானவன். எல்லோரினதும் உள்ளத்தில் இருப்பவன். அதுபோல எல்லோரும் உன் உள்ளத்திலும் இருக்கின்றனர். ஆதலால் நான் உனது அடியவன் என்று கூறிக்கொண்டு நீ வீற்றிருக்கும் கோவில்களுக்கெல்லாம் செல்ல வேண்டும். உனது நினைவால் நான் பித்துப்பிடித்தவனாக வேண்டும். நான் உன்மீது மோகங் கொண்டிருப்பதால் ஊரவர் தமது மனம்போன போக்கிற்கமையப் பேசுவர். செத்தவன் போல நான் அவற்றைப் பொருட்படுத்தாது உன் நினைவோடு வாழ வேண்டும். இது தான் எனது விருப்பம்" என்கிறார். இதன்படி நீ வியாபாரத்தை மாதவராசனிடம் ஒப்படைத்துவிட்டுச் சிவத்தலங்களுக்கு மனைவியுடன் சென்று வழிபடு. மூடநம்பிக்கை கொண்டு கொடுமைமிக்க பூசைகளைச் செய்யாதே. அதனால் பாவம் வந்து சேரும். தற்போதைய நிலையில் உன்னிடம் எல்லாச் செல்வங்களும் உள்ளன.

அவாமிகக் கொண்டு பொருள் தேடும் ஆசையை விட்டுவிட்டு முறைப்படி சிவனை வணங்கி மறுமையைச் சீராக்கு. நீ பூமியில் வாழ்ந்ததுபோலச் சௌகரியமாக மறுமையில் வாழ அல்லது மறுபிறவி செழிக்க வேண்டியவற்றிற்கான செயல்களில் ஈடுபடு" என்றார் கதிரேசன்.

**சாவ முன் நாள் தக்கன் வேள்வித் தகர் தின்று நஞ்சம் அஞ்சி**

**ஆவ எந்தாய் என்று அவிதா இடும் நம்மவர் அவரே மூவர்**

**என்றே எம்பிரானொடும் எண்ணி விண் ஆண்டு மண்மேல்**

**தேவர் என்றே இறுமாந்து என்ன பாவம் திரதவரே. 04**

"அருள், படைத்தல், காத்தல், அழித்தல் ஆகிய முத்தொழில்களையும் செய்கின்ற மும்மூர்த்திகளும் தக்கன் செய்த வேள்விக்குச் சென்று பலியிட்ட மிருகங்களின் ஊனைத் தின்று மகிழ்ந்தனர். அப்போது அங்கு தோன்றிய வீரபத்திரனின் மோசமான தாக்குதலைக் கண்டு அஞ்சி ஓடோடிச் சென்று சிவனிடம் முறையிட்டனர். பாற்கடலைக் கடைந்தபோது மகிழ்வுற்றிருந்த தேவர்கள் அதில் விஷம் கலந்தபோது தம்மைக் காத்தருளும்படி சிவனை வேண்டினர். ஆதலால் இவர்களும் சாதாரணமான சீவன்கள்தான். எப்போதும் சிவனை மெய்யன்புடன் வணங்குபவர்கள், சிவனைத் துதியாது எக்கருமங்களையும் செய்யமாட்டார்கள். வணங்கிவிட்டு ஒரு செயலைச் செய்தால் தான் அதிலிருந்து வரும் நன்மை, தீமைகளுக்குச் சிவன் பங்காளியாக இருப்பான். மெய்யடியார்கள் அதனால்தான் துணிவுடன் செயற்பட்டனர். தம்மால் இயலாது சிவனே உதவி செய் என்று நினைத்துத் தேவாரம் பாடிச் சிவனைத் துதித்துவிட்டுச் சம்பந்தர் ஆண்பனைகளையெல்லாம் பெண்பனைகளாக்கும்படி வேண்டியமையால் ஆண்பனைகள் அத்தனையும் பெண்பனைகளாகின. ஆனால் தேவர்கள் பாற்கடலைக் கடந்து அமுதத்தைத் தாம் பெறுவோம் என்றும், அசுரர்கள் தாம் பெறுவோம் என்றும் எண்ணியமையால்தான் நஞ்சு வெளிப்பட்டது. கடலைக் கடைய முன் சிவனை வேண்டியிருந்தால் நஞ்சு தோன்ற வாய்ப்பில்லை. ஏனென்றால் தோன்றும் நஞ்சை சிவன் எடுத்து உண்டு விடுவான். பிள்ளை தகப்பன் அருகில் இருக்கும் நம்பிக்கையால் அவரை நம்பி எதையும் செய்யும். அதுபோலக் குழந்தை தன் தந்தையை நம்பியதைப்போல் இறைவனின் குழந்தைகளாகிய நாம் இறைவனை நம்ப வேண்டும். நம்பினார் கைவிடப்படுவதில்லை. என்றொரு உபநிடத வாக்கியம் உண்டு" என்றார் கதிரேசன்.

**தவமே புரிந்திலன் தண்மலர் இட்டுமுட்டாது இறைஞ்சேன்**

**அவமே பிறந்த அருவினையேன் உனக்கு அன்பர் உள்ளாம்**

**சிவமே பெறும் திரு எய்திற்றிலேன் நின் திருவடிக்கு ஆம்**

**பவமே அருளு கண்டபாய் அடியேற்கு எம்பரம்பரனே. 05**

அருள், எம்போன்ற மெய்யுணர்வில்லாத அடியவர்களுக்காக மாணிக்கவாசக சுவாமிகள், "ஈசனே நான் தவம் செய்யவில்லை. நறுமணம்மிக்க மலர்களைத் தூவி வழிபட்டவனும் அல்ல. வீணாக வாழ்கின்ற பாதகன் நான். சிவனடியார் அடையும் சிவபோதம் என்னும் அழியாச் சொத்தையும் நான் பெறவில்லை. ஆனால் உன்னை அடைய விரும்புகின்றேன். நல்ல பிறவியை எனக்குத் தா" என்கிறார்.

"இது சாதாரணமான பக்தர்களுக்குச் சொல்லப்பட்டது. தவம் செய்யத் தேவையில்லை. மாலைசூடத் தேவையில்லை. பிறந்த குழந்தை பற்றிக் கவலைப்படத் தேவையில்லை. ஒழுக்கம் மிக்கவனாக வாழ்ந்து சிவனை மறவாது மனதில் நினைத்திரு. செய்வதெல்லாவற்றையும் சிவனுக்கற்பணி. உனது நாளாந்த கடமைகளைச் செய். சிவன் உன்னைத் தேடிவந்து ஆட்கொள்வான். கௌசீக முனிவரின் குரு ஒரு கசாப்புக் கடைக்காரன். மன்னன் ஆடம்பரமாகப் பெரும் கோவில் கட்டச் சிவன் விரும்பியது பூசலாரின் மனதை. இவ்வாறு புராணங்களில் பல கதைகள் உண்டு. அவற்றைப் படித்தும் எம்மவர் அதை நம்பாது நிற்கின்றனர். அதனால்தான் பொருட்களைத் தேடுகின்றனர். மிருகங்கள், பறவைகள், வேறு கோடிக்கணக்கான உயிரினங்கள் கடவுளை நம்பியுள்ளன. அவற்றிற்கெல்லாம் உணவு நேரம் தவறாமல் கிடைக்கிறது. அவைபோல ஒரு நாளென்றாலும் நீ வாழ்ந்து பார். இந்தப் பருவத்தில் நீ சிவனையே நினைத்துக் கொண்டிரு. உனது பிள்ளைகள் உனது தேவைகள் அனைத்தையும் பூர்த்தி செய்வர்" என்றார் கதிரேசன்.

**பரந்து பல் ஆய்மலர் இட்டு முட்டாது அடியே இறைஞ்சி**

**இரந்த எல்லாம் எமக்கே பெறலாம் என்னும் அன்பர் உள்ளம்**

**கரந்து நில்லாக் கள்வனே நின்தன் வார்கழற்கு அன்பு னக்கும்**

**நிரந்தரமாய் அருளாய் நின்னை ஏத்த முழுவதுமே. 06**

அன்று பிரதோசவிரதமிருக்கும் சிவனடியானான சிவசங்கரன் பூசைகள் முடிந்தபின்பே ஆச்சிரமத்திற்கு மிக்க கவலையுடன் வந்து கதிரேசனுக்குச் சொன்னான்; "அண்ணை, சிவனடியார்கள் பலவித விதமான அழகான மலர்களைச் சிவனது பாதங்களில் சமர்ப்பிக்கின்றனர். வாசைன மிக்க மலர்களால் மாலைகளைக் கட்டிச் சூட்டுகின்றனர். அதனால் அவனது அருள் பெருகி அவ்வருளால் வேண்டியவற்றை-யெல்லாம் வேண்டியவாறு பெறலாம் என்ற எண்ணம் அவர்களுக்கு உண்டாகியது. அதனால் அவர்களின் உள்ளத்தில் அவன் ஒளிர்கின்றான். ஏனையோரின் உள்ளத்தில் சிவன் கள்வன் போன்று மறைந்திருக்கின்றான்" என்று மாணிக்கவாசக சுவாமிகள் சொல்கிறார். எனக்குச் சிவனை வணங்க நேரங்கிடைப்பதில்லை. இன்று ஆச்சிரமத்திற்கு வர முயன்றேன் முடியவில்லை" என்று கலங்கினான்.

"சிவசங்கரா, எல்லோரையும் அறிந்தவன் சிவன். நீ இங்கு வரமுடியாவிட்டாலும் உனது நினைவுகள் ஆச்சிரமத்திலேயே இருந்திருக்கும். மரங்களில் மலரும் மலர்களை விட உள்ளத்தில் மலர்ந்திருக்கும் தாமரையையே இறைவன் விரும்புவான் என்று உனக்குத் தெரியாதா…? உள்ளத் தாமரையில் வீற்றிருக்கும் சிவன் உள்ளத்தில் உள்ள புனிதமான நினைவுகளையே விரும்புவான். சிவபக்தரான ஆறுமுகத்தின் பிள்ளைகள் அமெரிக்காவில் இருக்கின்றனர். ஆனால் அவர் பிள்ளைகளோடு அங்கு செல்ல விரும்பவில்லை. அதற்குக் காரணம் அவரது முன்னோர் ஸ்தாபித்த சிவனை விட்டுப் பிரியமுடியாமையேயாகும். நாம் அவரை வற்புறுத்திச் சில நாட்களாவது அங்கிருக்கும்படி வேண்டினோம். அதன்படி ஒரு வாரம் தங்கியிருக்கச் சென்றார். இப்போ ஒரு வருடம் முடிந்து விட்டது. அங்கிருந்து வர அவருக்கு விருப்பமில்லை. ஏனென்றால் அவர் நினைத்ததும் சிவன் அவருக்குக் காட்சி கொடுத்து, நீ உனது அன்பான பிள்ளைகளோடு இரு. நீ விரும்பியவேளையெல்லாம் நான் வந்து அருள்வேன் என்றானாம். அண்டங்கள் எங்கும் உள்ள சிவன் அமெரிக்காவுக்கு வந்தது புதுமையல்ல. அங்கு பழைய காலத்துச் சிவன்கோவில் ஒன்று உண்டு என்கிறார் ஆறுமுகம்" என்றார் கதிரேசன்.

**முழுவதும் கண்டவனைப் படைத்தான் முடிசாய்ந்து முன்னாள்**

**செழு மலர் கொண்டு எங்கும் தேட அப்பாலன் இப்பால் எம்பிரான்**

**கழுதொடு காட்டிடை நாடகம் ஆடிக் கதி இலியாய் உழுவையின்**

**தோல் எடுத்து உன் மத்தம் மேல் கொண்டு உழிதருமே. 07**

“சிவசங்கரா, சிவனைப்பற்றி முழுமையாகத் தெரிந்திருந்தும் கவலைப்படுவது நியாயமா…? ஆறுமுகம் அமெரிக்காவில் இருந்து கொண்டு ஊரில் உள்ள சிவனைக் கண்டு கதைத்து மகிழ்வதால் தனக்குப் பிள்ளைகளோடு இருந்து சிவனைக் காண்பது பெருமகிழ்வைத் தருகிறது என்கிறார்” என்றபோது சிவசங்கரன் சொன்னான்; “அங்கிருந்து காண்பது வேறு. அருகில் இருந்தும் காணாமல் வாழ்வது துன்பமானது”.

“மகனே, பிரபஞ்சம் முழுவதையும் சிருட்டித்த பிரமதேவன் தந்தையாகிய திருமால் தலைகீழாகச் சென்று பாதாளம் முழுவதையும் தேடியும் அவனுக்கு அவனது திருப்பாதம் தென்படவில்லை. அத்தகைய சிவன் எங்களுக்கு உதவி செய்பவனாய்ச் சுடுகாட்டில் பேய்களுடன் கூடித் தாண்டவமாடும் நீ உனது திருப்பாதத்தைக் காட்டி வருகிறாய். தெய்வ அம்சமில்லாதவனாய்ப் புலித்தோலை அணிந்து கொண்டு பித்துப்பிடித்தவன் போன்று அலைகிறாய். இது என்ன வித்தை” என்று மாணிக்கவாசக சுவாமிகள் அதிசயப்படுகிறார். அதிசயமான அவன் அதிசயமிக்க செயல்களை விளையாட்டாகக் கொண்டவன். இன்று உன்னை ஆச்சிரமத்திற்கு வராமற்பண்ணி உனது இதயத்துடிப்பை அளந்து பார்த்திருப்பான். அண்டம் முழுவதிலும் இருக்கும் அவனை உன்னுள்ளத்தில் காண்பது தான் மெய்யான பக்தி” என்றார் கதிரேசன்.

**உழிதரு காலுங் கனலும் புனலொடு மண்ணுவிண்ணும்**

**இழிதரு காலமெக் காலம் வருவது வந்ததற்பின்**

**உழிதரு காலத்த உன்னடி யேன்செய்த வல்வினையக்**

**கழிதரு காலமு மாயவை காத்தெம்மைக் காப்பவனே. 08**

“எல்லாவற்றையும் படிக்கும்போது நாம் செய்வதெல்லாம் பிழை. சிவனைப் பற்றின்றித் தரிசிக்க வேண்டும் என்ற நினைவு உண்டாகும். பின் ஒரு செயலைச் செய்யத் தொடங்கியதும் என்னை அறியாது பற்றுக்கள் மனதுள்ப் புகுந்துவிடும். இதைத்தடை செய்ய முடியவில்லை” என்றார் அருள்தாசன்.

“பற்றுக்கள் உண்டாவதற்குப் பற்றுக்கள் தான் காரணம். பற்றை முழுமையாக மனதில் இருந்து அகற்றுதல் வேண்டும். ஒரு முட்செடியை முற்றாக அகற்ற வேண்டுமானால் அதை வேரோடு களைய வேண்டும். சில நாட்களின் பின் அம் முட்செடியின் விதைகள் முளைத்திருந்தால் அவற்றையும் அகற்ற வேண்டும். நீ

மகனிடம் பொறுப்பை ஒப்படைத்தால் அதைப்பற்றி யாருடனும் கதைக்கக்கூடாது. ஆலோசனை, புத்திமதி கூறல் என்பன விதை. அவைபற்றை உண்டாக்கும். அதனால் முழுமையாக ஒதுங்கிச் சிவநினைவாக இருத்தல் வேண்டும், "காற்றும், தீயும், நீரும், மண்ணும், ஆகாயமும் பிரளயம் ஏற்படும்போது சிவனில் ஒடுங்கும். படைப்பையும், பிரளயத்தையும் உண்டுபண்ணும் தன்மையை நீ கொண்டிருக்கிறாய். அப்படியான நீ எனது கொடிய வினையை அழிக்கும் மகாகாலனாக நீ இருப்பாயாக. வினையும், காலமும் என்னை வந்து பாதிக்காதபடி காப்பாற்றுவாயாக" என்று மாணிக்கவாசக சுவாமிகள் கேட்கிறார். வினை என்பது பற்றுக்களால் செய்யும் செயல்கள். அதை அழிக்கவல்லவன் சிவன். அவன்தான் பிரளய காலத்தில் எல்லாவற்றையும் தன்னுள் ஒடுக்கிப் பின் அவற்றைப் பிரசவிக்கிறான். அவனால் தான் எதையும் ஆக்கவும், அழிக்கவும் முடியும். பற்றுக்கள் தான் உலகில் உள்ள எல்லாக் கொடிய மிருகங்களிலும் பார்க்கக் கொடியவை. அவற்றைத் தேவர்களால்கூட அழிக்க முடியவில்லை. பாமரரான நாம் எப்படி அழிப்போம். அவற்றை அழிக்க வேண்டும் என்று நீ விரும்பினால் உன்னை நீ முழுமையாகச் சிவனிடம் ஒப்படை" என்றார் கதிரேசன்.

**பவனெம் பிரான்பனி மாமதிக் கண்ணிவிண்ணோர் பெருமான்**

**சிவனெம் பிரான்என்னை ஆண்டுகொண்டான் என்**

**சிறுமைகண்டும் அவனெம் பிரானென்ன நானடி யேனென்ன**

**இப்பரிசே புவனெம் பிரான்தெரி யும்பரிசாவ தியம்புகவே. 09**

அவர்கள் பேசிக்கொண்டிருக்கும் இடத்திற்குச் சுந்தரமூர்த்தி சுவாமிகள் வந்து சொன்னார்; "சிவசங்கரன், நேற்று முழுவதும் இன்று நடைபெறும் விழாவில் தன்னால் கலந்து கொள்ள முடியாது என்று வருந்தியவன். "சிவன் உலகையும் உயிர்களையும் தன்னிடமிருந்தே தோற்றுவித்தவன். அதனால் அவனைப் பவன் என்றும், அன்னையைப் பவானி என்றும் சொல்வர். உயிர்களுக்கெல்லாம் அவன் தந்தை. அதனால் அவன் தலைவனுமாகிறான். அவன் எப்போதும் உயிர்களை மேல்நிலைப்படுத்தவே விரும்புவான். உயிர்களை உய்வித்து மேல்நிலைப்படுத்துவது அவனது அருள். அவன் அருளால் சகலவற்றையும் உணரும் தன்மை வாய்ந்தவன். அவன் அண்டங்களெங்கும் இருப்பவன். அத்தோடு உயிர்க்குள்ளும் இருப்பவன். இதை உணராதவர்கள் தான் கவலை கொள்வர். அவன் உலகிற்கெல்லாம் தலைவன். சந்திரசேகரன், தேவர்களின் தலைவன், எல்லோருக்கும் இன்பத்தை அள்ளிக் கொடுப்பவன். அத்துடன் அறிவுப் பெருவெளியாகவும் இருப்பவன். அப்படியான சிவன்

அற்பமானவனாகிய என்னைத் தனக்குச் சொந்தமானவன் என்று எண்ணி ஆட்கொண்டருளினான். அவன் ஆண்டான் நான் அடிமை. அப்படியான நிலையில் எனக்கருளியது பெருவியப்பாகும்” என்று மாணிக்கவாசக சுவாமிகள் கூறுகிறார். இன்னும் பிரதோசவேளை முடியவில்லை. நீ கொண்டுவந்த மாலையைச் சிவனுக்குச் சூட்டிப் பூசை செய். சிவன் ஒவ்வொருவரும் தாமே தனக்குப் பூசை செய்யவேண்டும் என்று விரும்புபவன். பலரின் மத்தியில் பூசை செய்வதும், தனித்துப் பூசை செய்வதும் ஒன்றுதான். அதில் வேறுபாடு இல்லை. உன்போன்றவர்களுக்காகத் தான் சிவபூசை செய்யும் முறையை அவன் அறிமுகப்படுத்தியுள்ளான். இன்னொருவர் பூசை செய்வதைப் பார்த்து மகிழ்வதைவிடத் தான் பூசை செய்வது தான் மகிமையானது” என்றார்.

**புகவே தகேன்உனக் கன்பருள் யானென்பொல் லாமணியே**

**தகவே யெனையுனக் காட்கொண்ட தன்மையெப்புன்மையரை**

**மிகவே உயர்த்திவிண் ணோரைப் பணித்திஅண் ணாவமுதே**

**நகவே தகும்எம் பிரானென்னை நீசெய்த நாடகமே. 10**

சிவசங்கரன் சிவனுக்கு மாலை சூட்டிவிட்டு வந்து மண்டபத்தில் அமர்ந்தான்; “சிவனே, என்னால் உன்னை விழாக்கோலத்தில் தரிசிக்க முடியாமையால் மிக்க துன்பப்படுகிறேன். எனது மனைவியைத் தினமும் பார்க்கிறேன். அவள் ஒரு மங்கள வைபவத்திற்கு அலங்கரித்தாள் என்றால் அவள் விலகிப்போகும் வரை ஆசையாகப் பார்த்து ரசிப்பேன். அதுபோலத்தான் விழா நேரங்களில் உன்னைக்கண்டு ரசிக்க விரும்புகிறேன். மாணிக்கவாசக சுவாமிகள் கூறுவதுபோல, “பூரணனே, சிவனடியார் கூட்டத்துடன் சேர நான் தகுதியில்லாதவன். அத்தகைய என்னை நீ ஆட்கொண்டது உன் தயாளத் தன்மையாகும். மண்ணுலகத்தில் வசிக்கும் கீழானவர்களை உனது அருளால் மேலானவர்களாக்குகின்றாய். விண்ணுலகில் இருப்பவர்களுக்கு உனது அருளில்லாமையால் அவர்கள் கீழானவர்களாகவே இருக்கின்றனர். அப்பனே, அமிர்தம் போன்றவனே உனது இத்தகைய திருவிளையாடல்கள் வியப்புக்குரியன” என்கிறார். உண்மையில் நீ வியப்புக்குரியவன் தான். ஆச்சிரமத்திற்கு வரும் சிவனடியார்களோடு நான் சேரத் தகுதியில்லாதவன்தான். அதற்காகத் தான் நான் உனது விழாவின்போது எனக்குத் தொழிலைத்தந்து விடுகிறாய். இது பெரும் மனவருத்தத்தைத் தருகிறது. தேவர்கள் சாகாவரம் பெற்றும், அமிழ்தைக் குடித்தபோதும் அவர்களுக்குப் பரஞானம் கிட்டுவதில்லை. ஆனால் துன்பங்கள் யாவும் நிறைந்த மனிதர்களுக்கு உனது மேலான

அருள் கிட்டுகிறது. அதனால் சிவஞானத்தையும், முத்தியையும் பெறுகின்றனர். அதனால் என்னையும் உனது பக்தனாக ஏற்று அருள்புரி" என்று மனமுருகினான் சிவசங்கரன்.

**2. அறிவுறுத்தல் (தரவு கொச்சகக் கலிப்பா)**

**நாடகத்தால் உன் அடியார் போல் நடித்து நான் நடுவே**

**வீடு அகத்தே புகுந்திடுவான் மிகப்பெரிதும் விரைகின்றேன்**

**ஆடகம் சீர் மணிக்குன்றே இடை அறா அன்பு உனக்கு என்**

**ஊடு அகத் தேநின்று உருகத் தந்தருள் எம் உடையானே. 11**

வீட்டுக்குச் சென்ற அருள்தாசன் வெகுநேரமாகச் சிந்தித்தார். அவரது மனைவி பார்வதி சொன்னாள்; "ஊரவர்கள் எல்லோரும் கதிரேசனை நடமாடும் சிவன் என்று அழைப்பார்கள். அவரின் ஆலோசனையைத்தான் கற்றவர்களும் ஏற்று நடப்பர். செல்வரத்தினம் திறமையான கல்வியாளர். கல்விப்பணிப்பாளர். ஆறாயிரத்திற்கு மேற்பட்ட ஆசிரியர்களுக்குப் பொறுப்பானவர். அவர் தனது மகனோடு சொத்துப் பிரச்சினையில் முரண்பட அதைத் தீர்த்து வைத்தவர் கதிரேசன். அவர் சிவனோடு கதைத்துத்தானாம் முக்கிய முடிவுகளை எடுப்பாராம். இப்போ அவர் எமது இளைய மகனான மாதவராசாவிடம் வியாபாரப் பொறுப்புக்களை ஒப்படைத்துவிட்டு உங்களைச் சிவனடியாராகும்படி கூறுகிறார். அதன்படி நடவுங்கள். உங்களுக்கு வயது வந்தமையால் தடுமாறுகிறீர்கள். சில நேரங்களில் மகனுடன் முரண்படுகிறீர்கள். நாம் இன்னும் எவ்வளவு காலம் உயிர் வாழப்போகிறோம். அதனால் அவன் வியாபாரத்தைத் தனித்து நின்று செய்யட்டும்" என்றபின் அருள்தாசன் வியாபாரப் பொறுப்புக்களை மாதவராசாவிடம் ஒப்படைத்துவிட்டு கதிரேசனிடம் வந்தார்.

"அருள், மாணிக்கவாசக சுவாமிகள், "நான் பக்தி பண்ணுவது நாடகத்தில் நடிப்பது போன்று நிலையற்றது. எனது இயல்பில் மாறானவையும் இருக்கின்றன. அப்படியிருக்க நான் முத்தியடைய வேண்டுமென்று விரும்புகின்றேன். நான் உன்மீது பேரன்பு பூண்டு இடையறாது உன்னை வணங்கி வந்திருந்தால் என் உள்ளம் தூய்மைப்பட்டிருக்கும். அப்படியிருந்திருந்தால் என்னுள்ளத்தில் வீற்றிருக்கும் உன்னை நான் கண்டு களித்திருப்பேன். இறைவா எனது பாசாங்கைப் பொருட்படுத்தாது முறைப்படி என்னைப் பக்குவப்படுத்துவாயாக" என்று சொல்கிறார். இது எம் போன்றவர்களுக்காக

மாணிக்கவாசக சுவாமிகள் சொன்னது. இதையே நீயும் சிவனுக்குச் சொல். "நான் உண்மையான பக்தன் அல்ல, பற்றுக்கள் என்னைச் சூழ்கின்றன. அவற்றை விலக்கி என்னைத் தூயவனாக்கு" என்று வணங்கு. அப்படி வணங்கிவர உனது உள்ளம் தூய்மைப்படும். சிவனின் அருளும் கிடைக்கும்" என்றார் கதிரேசன்.

**யான் ஏதும் பிறப்பு அஞ்சேன் இறப்பு அதனுக்கு என கடவேன்**

**வான் ஏயும் பெறல் வேண்டேன் மண் ஆள்வான் மதித்தும் இரேன்**

**தேன்ஏயும் மலர்கொன்றைச் சிவனேஎம்பெருமான் எம்**

**மானே உன் அருள் பெறும் நாதன் என்று என்றே வருந்துவனே. 12**

"அருள், மனிதரில் சிலர் எல்லா இன்பங்களையும் அனுபவிக்க விரும்புபவர், அவற்றில் பல பெரும் துன்பத்தைத் தந்தபோதும் அதையும் அனுபவித்துவிட்டுத் துன்பங்கள் வந்தவற்றையே விரும்பி அதைச் செயற்படுத்த முனைவர். மகாலிங்கம் உனது இனத்தவன். நண்பன். இருவரும் சேர்ந்து பல தீய செயல்களைச் செய்தீர்கள். அவன் கலையரசி மீது கொண்ட மோகத்தால் பெரும் துன்பப்பட்டபோதும் அவளையே நாடிச் சென்று மேலும் துன்பப்பட்டவன். இறுதியில் அவன் திருவாசகத்தைப் படித்துச் சிவனை வணங்கத் தொடங்கிய பின்பு மாணிக்கவாசகர் சொன்ன வார்த்தைகளைச் சொல்லிச் சொல்லி வணங்கியவன்; " இறைவா, பிறப்பைப் பற்றியோ அல்லது இறப்பைப் பற்றியோ நான் கவலைப்படவில்லை. எனக்குப் பதவிகளோ, சன்மானங்களோ, புகழோ தேவையில்லை. தேன் சொரியும் கொன்றை மாலை அணிந்த சிவனே எம்பெருமானே, எம்மானே உனது அருள் ஒன்றையே நான் வேண்டுகிறேன்" என்கிறார். இறைவனின் அருள் இருந்தால் எல்லாம் கிடைக்கும். ஆனால் பற்றுள்ளவற்றை விரும்பினால் அதில் பற்றேற்பட்டு பற்றுக்கள் அதிகரிக்கும். அதனால் சிவனடியார்கள் பற்றற்ற அருளையே வேண்ட வேண்டும். நிலையற்றவற்றை வேண்டாது நிலைபேறு உடையவற்றைத் தான் அருளாளர்கள் வேண்டுவர். அதனால் மனதில் ஒன்றை நினைத்துக் கொண்டு இன்னொன்றை வேண்டும் போலியான செயலைச் செய்யாதே. அப்படிச் செய்தால் ஏனையோர் போல உன்னை நீயே ஏமாற்றுபவனாவாய்" என்றார் கதிரேசன்.

**வருந்துவன்நின் மலர்ப்பாதம் அவைகாண்பான் நாய்அடியேன்**

**இருந்து நலம் மலர் புனையேன் ஏத்தேன் நாத்தழும்பு ஏறப்**

**பொருந்திய பொன் சிலை குனித்தாய் அருள் அமுதம் புரியாயேல்**

**வருந்துவன் அத்தமியேன் மற்று என்னேநான் ஆமாறே. 13**

"அருள் நீ பெரும் பணக்காரன். அதனால் மிக மிக ஆடம்பரமாகச் சிவனுக்கு திருவிழா செய்துள்ளாய். நீ எடுக்கும் விழாக்களை உனது கையாட்கள் போற்றிப் புகழ நீ பெருமகிழ்வுற்று அவர்களுக்கு மதுபானம் வாங்கிக் கொடுப்பாய். வாங்கியவுடன் நீ இன்று திருவிழாச் செய்கிறேன் என்று குடிக்காமல் விடுவாய். தர்ப்பையைக் கழற்றிய பின் குடிப்பாய்; மறுநாள் இன்னொரு வர்த்தகனின் திருவிழா. அதில் குழப்பம் செய்வதற்காக உனது அடியாட்களுக்கு மது வாங்கிக் கொடுப்பாய். அவர்கள் திருவிழாவைக் குழப்புவர். அதனால் மக்கள் பயந்து திருவிழாவைப் பாராது சென்று விடுவர். திருவிழாச் செய்வது சிவனுக்கு விருப்பமென்றா நினைக்கிறாய். ஒரு சுவாமியார் ஆச்சிரமத்திற்கு வந்து ஒரு கதை சொன்னவர். அது எனது மனதில் ஆழப்பதிந்து இன்னும் உள்ளது. ஒரு விவசாயி ஒவ்வொரு நாளும் தனது விவசாயப் பொருட்களை விற்றுவிட்டு இரவு பத்து மணிக்கு மேல் தான் கோவிலுக்கு வந்து அங்குள்ள உண்டியலில் சில்லறைக் காசு போடுவானாம். அந்நேரம் சிவன் பக்தர்களுக்கு அருளிக் கொண்டோ அல்லது உமாதேவியாருடன் மகிழ்வாக இருப்பாராம். இவன் காசு போடும் சத்தம் பெரிதாகக் கேட்பதால் அது சிவனுக்கு இடைஞ்சலாக இருந்ததாம். அதனால் ஒரு சித்தராக வேடமணிந்து விவசாயியிடம் சென்று தினமும் அதிகாலையில் பணம் போடும்படி சொன்னவராம். சிவனுக்குக் காசு பணம் பொருள் தேவையில்லை. ஏனென்றால் அவன் தானே அவற்றைப் படைப்பவன். அதனால் இனிமேல் பூந்தோட்டத்தில் மலர் பறித்து அவனது திருவடியில் போடு மாலை கட்டிக் கொடு. ஒவ்வொருவனும் தனித்தனியாகச் செய்வதையே சிவன் விரும்புவான். பிறர் கூலிக்கு மாலை கட்டுவோர் இப்போ கண்ட இடங்களிலெல்லாம் பூக்களைப் பறிக்கின்றனர். தூய்மையில்லாமல் கட்டுகின்றனர். சிவனின் நினைவில்லாமல் கட்டுகின்றனர். நீ ஒரு பூவையென்றாலும் பறித்துச் சிவனது திருவடியில் வைத்தாயா..? துறவென்பது தன்னைத் தான் துறப்பது. சிவனுக்கு அடிமையாவது. சிவசேவை செய்வது. அதனால் நீயே அவற்றைச் செய்" என்றார் கதிரேசன்.

**ஆம்ஆறு உன் திருவடிக்கே அகம்குழையேன் அன்பு உருகேன்**

**பூமாலை புனைந்து ஏத்தேன் புகழ்ந்து உரையேன் புத்தேளிர்க்**

**கேமான் நின் திருக்கோயில் தூகேன் மெழுகேன் கூத்து ஆடேன்**

**சாம் ஆறேவிரைக்கின்றேன் சதுராலே சார்வோனே. 14**

அப்போது அங்கு நின்ற மகாலிங்கம் சொன்னான்; "அருள், பயப்படாதை நானும் உன்னைப் போன்றவன் தான். இரண்டு பேருக்கும் இடையில் ஒரு சில வித்தியாசங்கள் உண்டு. நான் பகிரங்கமாகக் குடித்துவிட்டுச் சிவநிந்தனை செய்வேன். குழப்பம் விளைவிப்பேன். நீ இரகசியமாகக் குடிப்பாய், ஆட்களை ஏவிக் குழப்பம் விளைவிப்பாய். நான் முன்பு சிவனைப் பற்றி நினைத்ததும் இல்லை. மனம் நெகிழ்ந்ததும் இல்லை. அன்பு பூணவில்லை. பூப் போடவில்லை. பூமாலை கட்டிச் சூடவும் இல்லை. புகழ்ந்து பாடவும் இல்லை. தொண்டுகள் துரவுகள் எதுவும் செய்யவும் இல்லை. அத்துடன் மெய்மறந்து ஆடியதும் இல்லை. வாழ்க்கையை வீணடித்துக் கொண்டிருந்தேன். ஆனால் சிவனில் பற்று உண்டான பின்பு அவையெல்லாம் தலைகீழாக மாறிவிட்டன. மகாதேவா யோகசாதனத்தால் அறியப்படுபவனே, தேவர்களின் தலைவனே என்று பாடுகிறேன்; முன்பு செய்யாத திருத்தொண்டுகள் யாவும் செய்கிறேன்; சிவனுக்கு மாலை கட்டிச் சூடத் தொடங்கிய பின் என்னை விட்டுச் சென்ற சொந்தங்கள் யாவும் திரும்ப வந்துவிட்டன. சொத்துக்களையெல்லாம் பிள்ளைகளுக்கு கொடுத்த பின்பு மனதில் ஓர் அமைதி. மகிழ்ச்சி, பொலிவு யாவும் வந்து குடி கொண்டு விட்டன. பொருட்களை இழந்தமையால் தான் இவற்றைப் பெற முடிந்தது. சொத்துக்கள் எங்கே சென்றன. எமது பிள்ளைகளிடம் தானே. எம்மிடம் இருப்பதும் ஒன்று தான். பிள்ளைகளிடம் இருப்பதும் ஒன்று தான் என்ற நிலை சிவனருளால் உண்டாகும்.அதன் பின் பிள்ளைகளைப் பற்றிய நினைவும் வராது" என்றான்.

**வானாகி மண்ணாகி வளிஆகி ஒளிஆகி**

**ஊனாகி உயிராகி உண்மையுமாய் இன்மையுமாய்**

**கோனாகி யான் எனது என்று அவரவரைக் கூத்தாட்டு**

**வானாகி நின்றாயை என் சொல்லி வாழ்த்துவனே. 15**

பறைமேளம் அடிக்கும் வரதன் ஆச்சிரமத்திற்கு வந்து சுந்தரமூர்த்தி சுவாமிகளிடமும் கதிரேசனிடமும் தமது ஊரில் கடந்த ஒரு வருட காலமாக மழை பெய்யவில்லையென்றும் சுவாமிகள் அடியார்களுடன் கூட வந்து பிரார்த்தனை செய்தால் மழை பெய்யும் என்று கூறியதால் அவர்கள் அவ்வூர்ச் சிவன் கோவிலுக்கு வந்திருந்தனர். அவர்கள் பலமுறை அவ்வூருக்கு வந்தமையால் அவ்வூரவரில் சிலர் அவர்களை வரவேற்று உபசரித்தனர். வரதனின் இனத்தவர்கள் பலர் வந்து வரதனையும், அவனோடு கூடி வந்த அவர்களது இனத்தவர்களையும் பறைமேளம் அடிக்கக் கூடாதென்று தடுத்ததோடு அவர்கள் கைகளில் ஆயுதங்களையும் வைத்திருந்தனர். வரதனின் மாமனின் மகனான மகாதேவன் வந்து சொன்னான்; “ஐயா, நீங்கள் பெரியவர். சிவபக்தர், நீங்கள் வந்தமையால் இங்கு மழை பெய்யும் என்ற நம்பிக்கை எமக்குண்டு. ஆனால் மாமாவும் அவரோடு சேர்ந்த எனது இனத்தவர்களும் இந்தக் கேவலமான தொழிலைச் செய்வதை நாங்கள் விரும்பவில்லை. அதனால் யாரும் எம்மை மதிப்பதில்லை” என்றான்.

“மகாதேவா, நீ கற்றவன். ஆசிரியராகப் பணிபுரிபவன். இப்போ உன்னை யார் மதிக்கின்றனர். உன்னைத் தமது பிள்ளைகளுக்குக் கற்பிக்க விடக்கூடாது என்று பலர் சொல்வது உனது காதுக்கு எட்டவில்லையா…? தொழிலைக் கொண்டு ஒருவனை மதிப்பிடுவதனால் புனிதமான ஆசிரியத் தொழிலைச் செய்யும் உன்னை மதிக்க வேண்டும். யார் மதிக்கிறார்கள் சொல் பார்ப்போம். இந்த இழிந்த பிறப்பை அழிக்கும்படி வேண்டித்தான் நான் சிவனை வணங்குகிறேன். பக்த நந்தனாரைச் சிவன் அழைத்தபோது என்னையும் அழைப்பான். நட்டுவமேளம் அடிப்பவன், சங்கு ஊதுபவன், ஓதுவார்கள், மடப்பள்ளிச் சமையல்காரன், பூமாலை கட்டுபவன், போலப்பறை அடிப்பவனும் சிவனின் விருப்புக்குரியவன். எல்லா இசைக்கருவிகளையும் விடச் சிவன் பறையிலும் உடுக்கிலும் தான் திருநடனம் புரிகிறான். அதன் ஓசையை விரும்புகிறான். யார் மதித்தாலென்ன மதிக்காவிட்டாலென்ன எனது குலத்தொழிலை செய்ய விடு” என்றான் வரதன்.

“வரதன் சொல்வது உண்மை. நாதத்தில் தான் உலகம் பிறந்தது. அது பறையின் நாதம். இதை விளங்காதவர்களுக்குப் புரிய வைக்க முடியாது. இது இறைவன் விரும்பும்  இசை வேண்டுமானால் நான் அடிக்கிறேன்” என்றார் கதிரேசன். அதனால் அவர்கள் எதுவும் பேசவில்லை. எல்லோரும் பறையை அடித்தனர். மேகம் கறுத்தது. குளிர்காற்று வீசியது. மின்னல் மின்னியது. மழைத்துளிகள் விழ ஆரம்பித்தன. அன்று இரவு பெருமழை பொழிந்தது.

**வாழ்த்துவதும் வானவர்கள் தாம் வாழ்வான் மனம் நின்பால்**

**தாழ்த்துவதும் தாம் உயர்ந்து தம்மை எல்லாம் தொழ**

**வேண்டிக் சூழ்த்த மதுகரம்  முரலும் தாரோயை நாய் அடியேன்**

**பாழ்த்த பிறப்பு அறுத்திடுவான் யானும் உன்னைப் பரவுவனே. 16**

மழை பொழிவதைக் கண்ட பொதுமக்கள் "அரோகரா என்றும் சிவனே போற்றி என்றும் பெரிதாக சொன்னார்கள். வரதன் அழுதான். பின் சொன்னான்; "தேனீக்கள் ரீங்காரமிட்டு மொய்த்துக் கொண்டிருக்கும் அழகான மலர்களைச் சூடிய சிவனே, தேவர்களும், மற்றும் அனைவரும் தாம் இன்பமாக வாழும் பொருட்டு உன்னை வணங்குகின்றனர். ஆனால் நான் எனக்கிடப்பட்ட பிறவித்தளையிலிருந்து விடுபட உன்னை வணங்குகின்றேன். பறைமேளத்தை அடிப்பது சிவசேவையென நான் நினைத்துச் செய்கிறேன். எனது உறவினர்களும் ஏனையோரும் இது தாழ்த்தப்பட்ட தொழில் என்கின்றனர். சிவசேவையில் தாழ்த்தப்பட்டது உயர்வுடையது என்ற பாகுபாடு உண்டா? இதை உணர மறுப்போர் உனது சிவனடியார்களாக முடியுமா..? உயர்வு என்று நினைத்தாலே பல்வேறு விதமான பற்றுக்கள் பற்றி விடுகின்றனவே. இவற்றை இவர்கள் உணர்ந்தால் தான் பிறவியை அறுப்பர். அவற்றை இழக்காதவரை பிறவிகள் பெருகத்தான் செய்யும் என்று உணரும்வரை சிவனை வணங்குவதால் எந்தப் பயனும் வராது. இது தெரியாதவர்களான அவர்கள் வாழும்வரை உனது அன்பும் இவாகளுக்குக் கிடையாது" என்றான். கதிரேசன் சிரித்தார்.

**பரவுவார் இமையோர்கள் பாடுவன நால்வேதம்**

**குரவுவார் குழல் மடவாள் கூறு உடையாள் ஒரு பாகம்**

**விரவுவார் மெய் அன்பின் அடியார்கள் மேன்மேல் உன்**

**அரவுவார் கழல்  இணைகள் காண்பாரோ அரியானே. 17**

"வரதன் சொன்னது அனைத்தும் உண்மை. கோவிலில் சாதியையும், தராதரத்தையும், பொருளாதாரத்தையும் பார்த்து ஒருவனைக் கணிப்பிட்டு மதிக்கும்வரை சிவனின் அருள் ஒருபோதும் கிடையாது. பற்றற்றவன் கல்லையும் பொன்னையும் சமமாக மதிப்பான். அவன் எல்லோரையும் சிவனடியார்களாகக் காண்பான். இதை நாம் புராணத்தில் காண்கிறோம். சேரமான் பெருமான் நாயனார் ஒரு சலவைத் தொழிலாளி தனது தொழிலுக்காக உவர்மண் கொண்டு வந்தபோது மழை பெய்தமையால் உவர்மண்

கரைந்து அவனது உடலில் பட்டது. சேரமான் பெருமான் நாயனார் அப்போது யானையில் பரிவாரங்கள் புடைசூழ வந்தார். அந்தச் சலவைத் தொழிலாளி மேல் முழுவதும் நீறு பூசியிருக்கிறான் என நினைத்து யானையால் இறங்கி அவனது பாதத்தைத் தொட்டு வணங்கியவர். இது தான் சிவனடியாரின் தன்மை".

"யாராலும் அறியப்பட முடியாத சிவனைத் தேவர்கள் முன்னால் கண்டு வணங்குகின்றனர். வேதங்கள் படர்க்கையில் வைத்துப் பூசிக்கின்றன. குராமலரை அணிந்த உமாதேவியாரை உனது இடப்பாகத்தில் வைத்திருப்பவனே, உன்னிடம் பேரன்பு பூண்ட அடியவர்கள் திரும்பத் திரும்ப உன்னோடு கலக்கின்றனர். ஒலிக்கின்ற வீரக்கழல்களை அணிந்திருக்கின்ற உனது திருவடிகளை யார் தான் கண்டுள்ளனர்" என்று மாணிக்கவாசக சுவாமிகள் காரணமில்லாமலா கூறியுள்ளார். ஒரு குடம் பாலுக்கு ஒரு துளி விஷம் கலப்பது போல நிறைந்த பக்தியுள்ளவர்களாகக் காட்டிக் கொள்வோர் இவ்வாறான தகுதிகளைப் பார்த்துத் தம்மை இழக்கின்றனர். அதனால் தான் சிவனின் திருவடிகளைக் காணாதிருக்கின்றனர்" என்றார் கதிரேசன்.

**அரியானே யாவரக்கும் அம்பரவா அம்பலத்து எம்**

**பெரியானே சிறியேனை ஆட்கொண்ட பெய்கழல் கீழ்**

**விரைஆர்ந்த மலர்தூவேன் வியந்து அலறேன்நயந்து உருகேன்**

**தரியேன் நான் ஆம்ஆறுஎன் சாவேன் நான் சாவேனே 18**

"ஐயா, "சிவன் சிதம்பர ரகசியமாக அல்லது நிர்க்குண வடிவமாக இருப்பது யாருக்கும் விளங்காது அத்துடன் நீ சபாபதியாக இருந்து அந்தணான என்னை ஆட்கொண்டாய் அதற்காக நான் உனது திருவடிகளில் வாசம் நிறைந்த அழகான மலர்களைக் குவிக்கவில்லை. உன்னைப்பற்றிப் பெருமையாகப் பேசவில்லை. அன்பால் நெஞ்சம் உருகவில்லை. பொருந்தாத இல்வாழ்க்கை தேவையில்லை. நான் உய்யும் வழியைக் கூறு. நான் செத்தவனாகவே இருக்கிறேன்" என்று மாணிக்கவாசக சுவாமிகள் சொல்கிறார். மாணிக்கவாசக சுவாமிகள் சொல்லாதவற்றைத் தான் சிவனடியார்கள் செய்கிறார்கள். ஆனால் அவர் சொல்பவற்றைச் செய்வதில்லை. மாலைகட்டிச் சூடும்போதும் மற்றவர்களின் மாலைகளைவிட அழகானதாகச் சூடவேண்டும் என்று தான் பலரும் நினைக்கின்றனர். எதுவும் செய்யாது கல்லைப்போல உணர்ச்சியற்றிருந்தால் மாலை சூடவோ, பூக்களைப் போடவோ, புகழ்ந்து பாடவோ தேவையில்லை. இவற்றில்

எல்லாம் பற்று நிறைந்துள்ளது. பாடும் பாடல்களில் யாரின் பாடல் இனிமையானது என்ற நினைவு பாடுபவர்களுக்கு இருக்கும்வரை பற்று அகலாது. பற்று என்பது மனதில் அணுவாகத் தோன்றி மலையாக உருவாவது. அதனால் தான் மாணிக்கவாசக சுவாமிகள் எதையும் செய்யாது மௌனமாக இருந்தார். பல்வேறு குறைகளுடன் செய்வதைவிடச் செய்யாதிருப்பது மேலானது. எதையும் சிவனை அறியாது செய்ய முடியாது. பிறகேன் அதை விளம்பரப்படுத்துவான்" என்று கேட்டான் வரதன்.

**வேனில் வேள் மலர்க்கணைக்கும் வெள் நகைசெவ்வாய்க்கரிய**
**பானல் ஆர் கண்ணியர்க்கும் பதைத்து உருகும் பாழ் நெஞ்சே**
**ஊன் எலாம் நின்று உருகப் புகுந்து ஆண்டான் இன்றுபோய்**
**வான் உளான் காணாய் நீ மாளா வாழ்கின்றாயே. 19**

கதிரேசனும் கூட வந்தவர்களும் அன்று புறப்படத் தயாரானபோது வரதன் வந்து சொன்னான்; "ஐயா, இனி எப்போது நீங்கள் வருவீர்களோ தெரியாது. சிவன் மழையைப் பொழிந்தமைக்காக ஒரு பொங்கல் பொங்குகிறோம். அதை முடித்துவிட்டுப் புறப்படுங்கள்"

கதிரேசனால் அதை மறுக்க முடியவில்லை. அதனால் அவர் நின்றுவிட்டார். அன்று கலையரசி அவ்வூருக்கு வந்தாள். அவ்வூரில் அவளது சகோதரன் குடும்பமாக வாழ்கிறான். கலையரசியைக் கண்ட நல்லைநாதன் வந்து மகாலிங்கத்திற்குச் சொன்னார்; "மகா, கலையரசி கோவிலில் நிற்கிறாள். இப்போ உனக்கும் அவளுக்கும் எந்தத் தொடர்பும் இல்லையென்று நீ சொன்னாலும் எம்முடன் வந்த சிலர் நம்பமாட்டார்கள். மன்மதபாணத்துக்கும் காமத்துக்கும் வசப்பட்ட மனம் சம்பந்தப்பட்டவர்களைக் கண்டால் சலனப்படும் என்று எம்முடன் வந்தவர்கள் நம்புவர். அவள் சகோதரனிடம் வந்தவள் என்று சொன்னால் நம்பமாட்டார்கள். அதனால் நீ கோவில் மடப்பள்ளியில் இரு. வெளியே வராதே. உருவம் எடுத்து எம்மை ஆட்கொள்ளவந்த ஈசன் இன்று அருவமாக இருக்கிறான். அவனை நினைத்து உருகியபடி மடப்பள்ளியில் இரு. அவள் சென்றதும் நான் வந்து அழைத்துச் செல்கிறேன்'' என்று கூறிவிட்டுச் சென்றார் நல்லைநாதன்.

**வாழ்கின்றாய் வாழாத நெஞ்சமே வல்வினைப்பட்டு**
**ஆழ்கின்றாய் ஆழாமல் காப்பானை ஏத்தாதே**
**சூழ்கின்றாய் கேடு உனக்குச் சொல்கின்றேன் பல்காலும்**
**வீழ்கின்றாய் நீ அவலக் கடல் ஆய வெள்ளத்தே.** **20**

''அப்பனே, நீ என்னைக் காப்பாற்றிவிட்டாய். பற்றென்பது சிறுபொறியாக இருந்தாலும் அது சந்தர்ப்பவசத்தால் பெருநெருப்பாக மாறிவிடும். இது நல்லைநாதனுக்குத் தெரியும். அதனால்தான் நல்லைநாதன் நல்ல மனதுடன் என்னை மறைந்திருக்கச் சொன்னவர். ''பாழாய்ப்போன நெஞ்சமே, பெருவாழ்வு வாழத்தெரியாது புல்லிய வாழ்வு வாழ்கிறாய். அவள் தீயவள். பலருடன் சேர்ந்திருப்பவள். பணத்திற்காக மோகிப்பாள் என்று தெரிந்தும் அவளை நினைந்து வருந்தினாய். தீவினையுள் அகப்பட்டு அதிலிருந்து விடுபட முடியாது அழுந்துகின்றாய். அவ்வாறு அழுந்தாது காப்பாற்றக்கூடிய கடவுளான சிவனை நம்பாது உனக்கு நீயே கேட்டைத் தேடிக் கொள்ள விரும்புகிறாய். உனக்கு நான் திரும்பத் திரும்ப இடித்துரைத்தும் உன்னால் அதைப் புரிந்து கொள்ள முடியாமையால் பெருந்துன்பத்தை அனுபவிக்கிறாய். இது நியாயமானதல்ல. தர்மமும் அல்ல'' என்று மாணிக்கவாசக சுவாமிகள் சொன்னது உண்மை. எனது மனதுள் அவளின் நினைவுகள் உன்னருளால் அற்றுப்போய்விட்டன. அது எனக்கும் உனக்கும் நல்லைநாதனுக்கும் கதிரேசனுக்கும் இன்னும் சிலருக்கும்தான் தெரியும். அதனால்தான் நல்லைநாதன் அவ்வாறு சொன்னார்; வல்லிபுரம் கடைசிவரையும் நம்பமாட்டான். இடத்திற்குத் தக்கதுபோலக் கதைப்பான். நாளை ஊரவர்களுக்கு நான்தான் கலையரசியை வரச் சொன்னதாகச் சொல்வான். என் தந்தையே, நீ இரக்கம் மிக்கவன். கருணை வள்ளல், உள்ளத்தில் உள்ளவற்றையும் அறிபவன். நான் உன்னருளால் தப்பிவிட்டேன்'' என்று நினைத்தான் மகாலிங்கம்.

### 3. சுட்டறுத்தல் (எண் சீர் ஆசிரிய விருத்தம்)

**வெள்ளம் தாழ் விரிசடையாய் விடையாய் விண்ணோர்**
**பெருமானே எனக்கேட்டு வெட்ட நெஞ்சாய்**
**பள்ளம் தாழ் உறு புனலில் கீழ் மேல் ஆகப்**
**பதைத்து உருகும் அவ நிற்க என்னை ஆண்டாய்க்கு**

**உள்ளம்தான் நின்று உச்சி அளவும் நெஞ்சாய்**

**உருகாதால் உடம்பு எல்லாம் கண்ணாய் அண்ணா**

**வெள்ளம்தான் பாயாதால் நெஞ்சம் கல் ஆம்**

**கண் இணையும் மரம் ஆம் தீ வினையினேற்கே. 21**

''வா போகலாம். அவள் சென்றுவிட்டாள்'' என்றார் நல்லைநாதன்.

''இவ்வளவு நேரமும் நான் மாணிக்கவாசக சுவாமிகள் சொன்னதையே நினைத்திருந்தேன். அவர் "கங்காதரர் என்றும், சடாதரரென்றும், ரிஷபவாகனரென்றும், மகாதேவர் என்றும் உன்னை அழைப்பதைக் கேட்ட மாத்திரத்தில் உனது அன்பர்கள் பரவசமடைகின்றனர். பெரும் அருவி வீழ்கின்ற மடுவில் தலைகீழாக மாட்டிக் கொண்டவர்கள் உயிர் தப்பிக்கத்திணறுவது போன்று உனது அன்பர்கள் உனது அருளைப்பெற அவாப்படுகின்றனர்'' என்கிறார். அப்படியான ஒரு நிலையில்தான் நான் இருந்தேன். கங்காதரா, சடாதரா, மகாதேவா, ரிஷபவாகனா, நான் பேரருவிபாயும் மடுவில் சிக்கியவனைப்போல இப்போது இருக்கிறேன். என்னைக் காப்பாற்று என்று அழுதேன். எனக்கு உன்னை நினைக்க மாணிக்கவாசக சுவாமிகள் கூறுவதுபோல, "இச்சிறு நெஞ்சு போதாது எனது உள்ளங்கால்முதல் உச்சிவரை நெஞ்சு வளர வேண்டும். உன்னைக் காண்பதற்கு எனக்கு இரண்டு கண்கள் போதாது. உடம்பெல்லாம் கண்களாகி அவை உன்னைக்கண்டு கண்ணீர் வெள்ளத்தைப் பெருக்க வேண்டும். அத்துடன் எனது சிறு நெஞ்சு இப்போது கல்லாகி மரத்துவிட்டது. கண்கள் உலர்ந்த மரக்கட்டையால் செய்ததுபோல் வறண்டு கிடக்கின்றன. என்னைக் காப்பாற்று'' என்று அழுதேன். சிவன் எனக்காக இரங்கி விட்டான். அது போதும். தற்செயலான விடயமென்று யார் நம்பப் போகிறார்கள்'' என்று கலங்கினான் மகாலிங்கம்.

**வினையிலே கிடந்தேனைப் புகுந்து நின்று**

**போதுநான் வினைக் கேடன் என்பாய் போல**

**இனையன் நான் என்று உன்னை அறிவித்து என்னை**

**ஆட்கொண்டு எம்பிரான் ஆனாய்க்கு இரும்பின் பாவை**

**அனைய நான் பாடேன் நின்று ஆடேன் அந்தோ**

**அலறிடேன் உலறிடேன் ஆவி சோரேன்**

**முனைவனே முறையோ நான் ஆனவாறு**

**முடிவு அறியேன் முதல் அந்தம் ஆயினானோ? 22**

பறைமேளம் அடிக்கும் வரதனின் மருமகனான மகாதேவன் கதிரேசனது வீட்டுக்குவந்தபோது அவர் அவனை உள்ளே அழைத்துச் சென்று ஆசனத்தில் இருத்தினார். வந்தவன் தானாகவே பேச்சைத் தொடங்கட்டும் என்று காத்திருந்தார்; ‘‘ஐயா, எனக்குச் சைவசமயத்தின்மீது பெரும் வெறுப்பு இருந்தது. அதற்குக் காரணம் கோவில் தலைவரும் அவரது கையாட்களும் தான். அவர்கள் தாம் சிவனிலும் பார்க்க மேலானவர்கள் என்று நினைத்து ஆணவத்தோடு செயற்படுகின்றனர். மாமா, நீங்களும் உங்கள் நண்பர்களும்தான் உண்மையான சிவபக்தர்களென்றும், ஏனைய பலர் சமயத்தைக் காட்டிப் பிழைப்பு நடத்துகின்றனர் என்றும் சொல்வார். மாமா சொன்னதுபோல் எமது பரம்பரையினர் பறைமேளம் அடிப்பதால் பிறர் மதிக்காமல் விடுவதில்லை. என்ற பின் எனது மனம் மாறிவிட்டது. நீங்களும் சிவனின் அருள் பெற்றவர். அதனால் தான் மழை பெய்தது. முன்பும் மழைபெய்யாவிட்டால் உங்களை அழைத்துவந்தால் மழை பெய்யுமாம். உங்களோடு பழகிய பின்பு சிவன் என்னை அழைப்பது போன்ற பிரமை என்னுள் ஏற்படுகிறது. மாமாவிடம் சொன்னேன் அவர் உங்களைச் சென்று சந்திக்குமாறு சொன்னார். எனக்குச் சிவன்மீது அக்கறை இல்லை. அவனை நினைப்பதும் இல்லை. அவனைப் போற்றிப் புகழ்ந்து பாடுவதும் இல்லை. வணங்கவும் இல்லை. ஆடுவதும் இல்லை. அப்படியிருக்க என்னையறியாமல் என்னுள் ஓர் உணர்வு எழுகிறது. அது சிவசிவ என்கிறது. இது ஏன் எனக்குப் பயமாக இருக்கிறது. எனக்கு மனக்குழப்பம் ஏற்பட்டுவிட்டதோ என்று கலக்கமாக இருக்கிறது’’ என்றான் மகாதேவன்.

‘‘மகனே. சிவனின் அருள் கிடைப்பது அரிதிலும் அரிது. சிவனை வெறுத்த நீ, நான் வந்ததும் மழை பெய்தது. அதனால் உணர்ச்சி வசப்பட்டுவிட்டாய். சிவனை வணங்காது நிந்திப்பதால் உனக்கு ஏதாவது நிகழ்ந்துவிடுமோ என்று பயப்படுகிறாய். மாணிக்கவாசக சுவாமிகள் நீ சொன்னவற்றைத்தான் திருவாசகத்தில் சொல்லியுள்ளார். சிவன் தன்மீது பற்று வைக்கும் தன் அடியவனைத் தன்மயப்படுத்திவிடுவார். நீ அவனை வணங்கு. சிவபூசை செய். உன்மீது சிவனுக்கு விருப்பம் உண்டாகிவிட்டது. அதனால் பயப்படாமல் சிவனை வணங்கி உனக்குத் தேவையானவற்றைக் கேள்’’ என்றார் கதிரேசன்.

**ஆயநான் மறையவனும் நீயே ஆதல்**

**அறிந்து யான் யாவரினும் கடையேன் ஆய**

**நாயினேன் ஆதலையும் நோக்கிக் கண்டும்**

**நாதனே நான் உனக்கு ஓர் அன்பன் என்பேன்**

**ஆயினேன் ஆதலால் ஆண்டு கொண்டாய்**

**அடியார் தாம் இல்லையே அன்றி மற்று ஓர்**

**பேயனேன் இதுதான் நின்பெருமை அன்றே**

**எம்பெருமான் என் சொல்லிப் பேசுகேனே. 23**

''மகனே, மாணிக்கவாசக சுவாமிகள், ''ஆராய்ந்து பார்க்குமிடத்து நீயே எல்லோருக்கும் பெரியவனென்று நான்கு வேதங்களும் சொல்கின்றன. நான் எல்லோரிலும் பார்க்கக் கடையவன் என்று எனக்குத் தெரியும். இருப்பினும் நான் உனக்குப் புறம்பானவனில்லை என்பதும் புரியும். நாயையும் பேயையும் ஒத்த என்னை உன் அடியவனாக ஏற்றுக் கொண்டாய். உனக்குக் கோடிக்கணக்கான மெய்யன்பர்கள் இருந்தும் என்மீதுள்ள கருணையினால் இவ்வாறு செய்தாய். உனது மகிமையை யாராலும் சொல்லி முடிக்க முடியாது'' என்கிறார். உனக்குள் ஏற்பட்ட மாற்றம் சிவனை உணரச் செய்துள்ளது. அவனை உணர்ந்தவர்கள் அவனின் மயமாகிவிடுவர். இது இயல்பு. எந்நேரமும் சிவனை நிந்தித்துக் கொண்டும், கோவில்களில் குடித்துவிட்டுக் குழப்பம் செய்து கொண்டும் இருந்த மகாலிங்கம் இப்போ பெரும் சிவபக்தன். இவையெல்லாம் தற்செயலாக நடக்கும் சம்பவங்களல்ல. முன்வினைப் பயனாக ஏற்படுபவை. நீ புண்ணியவான். சிவனின் அருளைப் பெற்றவன். அதனால் எதைப்பற்றியும், பிறர் கூறுவதைப்பற்றியும் நினையாது உனது மாமனாரான வரதனைப்போல வாழ். வரதன் பெரும் சிவபக்தன். அவனோடு, முரண்பட்டால் பல துன்பங்கள் சிவனின் அருளால் உண்டாகும் என்று எல்லோருக்கும் தெரியும். அதனால் தான் கோவில் தலைவர் மிகமிகப் பண்புடனும், அன்புடனும் வரதனுடன் உரையாடுவது உனக்குத் தெரியும்'' என்றார் கதிரேசன்.

**பேசின் தாம் ஈசனே எந்தாய் எந்தை**

**பெருமானே என்று என்றே பேசிப் பேசிப்**

**பூசின்தான் திருமேனி நிறைப் பூசி**

**போற்றி எம்பெருமானே என்று பின்றா**

**நேசத்தால் பிறப்பு இறப்பைக் கடந்தார் தம்மை**

**ஆண்டானே அவா வெள்ளம் கள்வனேனை**

**மாசு அற்ற மணிக்குன்றே எந்தாய் அந்தோ**

**என்னை நீ ஆட்கொண்ட வண்ணம் தானே.** **24**

“ஊரில் உன்னை நான் பார்த்தபோது நீ வீபூதியை அணியவில்லை. இப்போது நெற்றி நிறைய வீபூதியை அணிந்திருக்கிறாய். வீபூதி மனதையும் உடலையும் தூய்மைப்படுத்தும். சிவன் என் தந்தை என்ற நினைப்பை உண்டு பண்ணும். தந்தை அருகில் இருக்கிறார் என்ற தைரியத்தில் குழந்தைப்பிள்ளை மற்றவர்களை மதியாதும், பயமில்லாதும் செயற்படுவதுபோலச் சிவனடியார்களும் தம்மைப் பாதுகாக்கத் தந்தையான சிவன் இருக்கிறார் என்ற தைரியத்தில் வாழ்வர். “அவர்கள், ஈசா, எந்தாய், எம் தந்தையே, எம்பெருமானே என்று ஓயாது உன்நாமத்தை உச்சரிப்பர். உன் நினைவாகவே எவ்வேளையிலும் வாழ்வர். திருநீற்றைப் பூசுவர். சிவனிடத்தில் திடமான மாறாத அன்பைக் கொண்டிருப்பதால் அவர்கள் கூற்றுவனுக்கும் அஞ்சமாட்டார்கள். அதனால் நீயும் அவர்களை ஆட்கொண்டாய். அதன்பின் உலகத்தின்மீது பற்றுக் கொண்ட கள்வனான என்னையும் ஆட்கொண்டாய்” என்று மாணிக்கவாசக சுவாமிகள் கூறுகிறார். இது அவரது அனுபவம். ஒரு கொடிய பிராணி மீது அன்பு வைத்தால் அது அன்பு வைத்தவனுக்குத் தீமை செய்யாது. அன்பே மயமான சிவன்மீது அன்பு வைத்தால் அவன் தன்னால் முடிந்தளவு அன்பை தன்மீது அன்பு வைப்பவர்கள் மீது வைப்பான். அதனால் தான் அவன் உன்மீது அன்பு வைத்துள்ளான். அதைத் தவறாக எண்ணாதே” என்றார் கதிரேசன்.

**வண்ணம்தான் சேயது அன்று வெளிதே அன்று**

**அநேகன் ஏகன் அனு அனுவில் இறந்தாய் என்று அங்கு**

**எண்ணம்தான் தடுமாறி இமையோர் கூட்டம்**

**எய்துமாறு அறியாத எந்தாய் உன் தன்**

**வண்ணம்தான் அது காட்டி வடிவு காட்டி**

**மலர்க்கழல்கள் அவைகாட்டி வழி அற்றேனைத்**

**திண்ணம்தான் பிறவாமல் காத்து ஆட்கொண்டாய்**

**எம்பெருமான் என் சொல்லிச் சிந்திக்கேனே.** **25**

“மகனே, முன்பு நீ சிவனைப்பற்றி ஆராய்ந்தாய். அவை சரியாகவும் இருக்கலாம். தவறாகவும் இருக்கலாம். இனி எதையும் ஆராயாதே. ஏனென்றால் தேவர்கள், “சிவனே நீ சிவந்தவனா…? வெளுத்தவனா…? அனேகனா…? ஏகனா…? நீ அணுவடிவினனா…? பெரியவனா என்றெல்லாம் ஆராய்ந்ததால் மிக்க குழப்பம் அடைந்தனர். இது தேவையில்லாத ஆராய்ச்சி. அது குழப்பத்தையே உண்டுபண்ணும். அதனால் எதைப்பற்றியும் சிந்திக்காது அவனைச் சரணடை. பின் நீ வேண்டியவற்றைக் கேள். மாணிக்கவாசக சுவாமிகள் சொல்கிறார்; “உன்னை அடையும் மார்க்கம் அறியாதிருந்த எனக்கு, அதைக் காட்டியருளி, உனது நிசஉருவம் இவற்றிற்கெல்லாம் அப்பாற்பட்டதென்று எனக்கு விளக்கினாய். அதனால் எனது ஐயங்கள் அகன்று போயின. நான் பிறப்பு இறப்புக்கு அப்பாற்பட்டவன் என்பதை உணர்ந்து கொண்டேன். சொல்லாலும், சிந்தனையாலும் உன்னைப் போற்றுவது குறைபட்ட வழிபாடாகும்” என்கிறார். இறைவன் இந்திரியங்களுக்குப் புலனாகாதவன். மனதாலும் அவனை உருவகிக்க முடியாது. இந்திரியங்களையும், மனதையும் அடக்கிய ஜீவாத்மாதான் பரமார்த்மாவை உணர்ந்து கொள்ளும். இருந்தபோதும் அதனால் ஏற்பட்ட அனுபவத்தைச் சொற்களால்கூற முடியாது. இந்திரியங்களையும், மனதையும் அடக்குதல் வைராக்கியம் எனப்படும். அதனால் எதையும் நினைக்காது சிவனைப் பற்றின்றி நினைத்தால் நினைப்பவனுக்கு அவன் இலகுவில் அகப்படுவான்” என்றார் கதிரேசன்.

**சிந்தனை நின்தனக்கு ஆக்கி நாயினேன் தன்**
**கண் இனை நின் திருப்பாதப் போதுக்கு ஆக்கி**
**வந்தனையும் அம்மலர்க்கே ஆக்கி வாக்கு உன்**
**மணிவார்த்தைக்கு ஆக்கி ஐம்புலன்கள் ஆர**
**வந்தனை ஆட்கொண்டு உள்ளே புகுந்து விச்சை**
**மால் அமுதப் பெரும் கடலே மலையே உன்னைத்**
**தந்தனை செந் தாமரைக்காடு அனைய மேனித்**
**தனிச்சுடரே இரண்டுமிலி இத்தனிய னேற்க. 26**

“மகாதேவா, இறைவன் தனது அடியார்களின் நெஞ்சில் புகுவதற்குக் காரணம் எதுவும் தேவையில்லை. ஏனென்றால் அவர் உயிர் படைக்கப்பட்டன்றே உயிருடன் கலந்திருக்கிறார். வினைகாரணமாக உயிரின் தன்மை மாறுவதில்லை. அதனால் உயிர் எடுக்கும் பிறவிகளின் போதும் இறைவன் உயிருடனே பிரியாது

இருக்கிறார். இந்த உண்மையைப் பலர் புரிந்து கொள்வதில்லை. “மாணிக்கவாசக சுவாமிகள், சுயஞ்சோதியான நீ எனது மனதை உன்வசப்படுத்தினாய். கண்கள் இரண்டையும் உன் எழிலைக் காணுமாறு அருள் செய்தாய். எனது வழிபாட்டை உனது திருவடிக்குரியதாக்கினாய். எனது பேச்சை உன் திருவடிகளின் பெருமைகளைப் பற்றியதாக்கினாய். ஐம்பொறிகளுக்கும் உனது பெருமைகளை விளக்கினாய். அதனால் என்னுள்ளே நீ பிரவேசித்தாய். அது வியப்புக்குரிய செயலாகும். காரணங்களை ஒடுக்குதல், காரணங்களை வழிபாட்டுக்குப் பயன்படுத்துதல் ஆகிய இரண்டு நெறிகளையும் அறியாத என்னை நீ ஆட்கொண்டது வியப்புக்குரியது” என்கிறார். இந்தநிலை இறைவன் தன்னுள் ஒளிமயமாக இருக்கிறான் என்பதை உணர்ந்த நிலையாகும். ஆலயத்திற்குச் சென்று இறைவனை வழிபடும்போது ஐம்பொறிகளும் இறை வழிபாட்டில் ஈடுபடுதல் வேண்டும். கண்கள் அவனது அழகை ரசித்தல் வேண்டும். காதுகள் அவனது புகழைக் கேட்க வேண்டும். மூக்கு ஆராதனையின்போது அர்ச்சிக்கப்படும் திரவியங்களை முகர வேண்டும். நாக்கு அவனது பிரசாதத்தைச் சுவைக்க வேண்டும். அத்துடன் இறைவனின் புகழைப் பாடுதல் வேண்டும். உடம்பில் நீறு, சந்தனம், பூக்கள் என்பன படுதல் வேண்டும். இவ்வாறு அர்ச்சிக்கப்பட்டவை ஐம்பொறிகளோடு சேர்வது உடன்பாட்டு முறையாகும். இப்போ நீ அதைச் செய்யத் தொடங்கியுள்ளாய். இது இறைவனின் அருள் உனக்குக் கிட்டியமைக்கு உதாரணமாகும்” என்றார் கதிரேசன்.

**தனியேனன் பெரும் பிறவிப் பௌவத்து எவ்வம்**
**தடம் திரையால் எற்றுண்டு பற்று ஒன்று இன்றிக்**
**கனியைநேர் துவர்வாயார் என்னும் காலால்**
**கலக்குண்டு காம வான் சுறவின் வாய்ப்பட்டு**
**இனி என்னே உய்யும் ஆற என்று என்று எண்ணி**
**அஞ்சு எழுத்தின் புணை பிடித்துக் கிடக்கின்றேனை**
**முனைவனே முதல் அந்தம் இல்லா மல்லற்**
**கரைகாட்டி ஆட்கொண்டாய் மூர்க்கனேற்கே** **27**

“ஐயா, மனதில் உள்ளவற்றை மறைக்காமல் ஒரு சிவபக்தன் கூறுதல் வேண்டும். நான் ஒரு பெண்ணை விரும்பினேன். அவள் உயர்சாதிப் பெண். அவளைத்

தனிமையில் பலமுறை சந்தித்தேன். அந்தச் சந்திப்பு என்னைப் பெரும் மகிழ்ச்சிக்குட்படுத்தியது. அந்த மகிழ்ச்சி நெடுநாட்கள் நீடிக்கவில்லை. அவளது பெற்றோருக்கு அது தெரிய வர அவர்கள் அவளுக்கு வெளிநாட்டில் மாப்பிள்ளை பார்த்துத் திருமணத்தை முடித்து வைத்துவிட்டனர். இப்போ அவளுக்கு இரண்டு பிள்ளைகள். அவள் சென்ற மாதம் ஊருக்கு வந்தபோது சிவன்கோவிலில் அவளைக் கண்டேன். மிக்க மகிழ்ச்சியுடன் தனது கணவனுடன் பேசிச் சிரித்தாள். என்னைக் கண்டதாகக் காட்டிக் கொள்ளவேயில்லை. அது எனக்குப் பெரிய கவலையைக் கொடுத்தது. எந்த நினைவும் இல்லாத எனக்கு அவளின் நினைவு பெரும் தொல்லையைத் தருகிறது. நான் எப்படி அதை நீக்குவது" என்று கேட்டான் மகாதேவன்.

"மகனே, உன் போன்றவர்கள் மனநிம்மதி பெற்றுச் சிவனை அடைய வேண்டும் என்ற நோக்கில்தான் மாணிக்கவாசக சுவாமிகள் திருவாசகத்தைப் பாடினார். அவர் சொல்கிறார்; "துணை எதுவுமில்லாத நான் பிறவிப் பெருங்கடலில் தத்தளிக்கிறேன். துன்பம் என்னும் பேரலை வந்து என்னை மோதுகிறது. மாதர் மயக்கம் என்னும் பெருங்காற்று எனது மனதைக் கலக்குகிறது. ஆசை என்னும் சுறாமீன் என்னை விழுங்க வருகிறது. அதனால் பொருந் துன்பப்படுகிறேன். அதிலிருந்து மீள வழிதெரியாது அல்லற்படுகின்றேன். இந்த நெருக்கடியில் பஞ்சாட்சரமாகிய 'நமசிவய' என்னும் மரக்கலம் உனது அருளால் எனக்குக் கிடைத்துள்ளது. அறிவிலியான என்னை நீ முத்தி என்னும் பெருநிலத்தில் கொண்டு சேர்த்துள்ளாய்" என்கிறார். மனிதர்கள் ஒவ்வொருவரும் வெவ்வேறு விதமான துன்பங்களுக்குட்பட்டதால் தான் சிவனை நினைக்கின்றனர். ஒரு பெண்ணில் காதல் கொண்டபின் அவளை இழப்பது போன்ற துன்பம் உலகில் எதுவும் இல்லை. பெண் ஐம்பொறிகளாலும் அனுபவிக்கப்படுபவள். அவளது உறவு ஐம்பொறிகளையும் பேரானந்தப்படுத்தும். அந்தப் பேரானந்தம் வாழ்நாள் முழுவதும் நிலைத்து நிற்கும். அது சேர்ந்திருந்தால் தித்திக்கும். பிரிந்திருந்தால் உயிரை வாட்டும். அதை மறக்க ஒரே வழி பஞ்சாட்சர மந்திரத்தை ஓதுதல் என்று மாணிக்கவாசக சுவாமிகள் கூறுகிறார். அவர் ஞானி. இறைவனோடு உரையாடுபவர். அவர் இவற்றையல்லாம் மனிதரின் மேம்பாட்டுக்காகத்தான் சொல்கிறார். அதைப் பின்பற்றுவதைத் தவிர வேறு வழியில்லை" என்றார் கதிரேசன்.

**கேட்டு ஆரும் அறியாதான் கேடு ஒன்று இல்லான்**

**கிளை இலான் கேளாதே எல்லாம் கேட்டான்**

**நாட்டார்கள் விழித்திருப்ப ஞாலத்து உள்ளே**

**நாயினுக்கு தவிசு இட்டு நாயினேற்கே**

**காட்டாதன எல்லாம் காட்டிப் பின்னும்**

**கேளாதான எல்லாம் கேட்பித்து என்னை**

**மீட்டேயும் பிறவாமல் காத்து ஆட்கொண்டான்**

**எம்பெருமான் செய்திட்ட விச்சைதானே. 28**

“மகனே, சிவனின் பெருமைகளைக் காதால்கேட்டு அறிய முடியாது. அவன் நிர்காவி. அதாவது உருவமில்லாதவன். அவயங்கள் இல்லாத பூரணன். செவிகள் இல்லாமலே அவன் அனைத்தையும் கேட்கிறான். அதனால்தான் யார் எதை நினைத்தாலும் அதை அறிந்து கொள்கிறான். தீயவற்றை நினைத்தால் அது உடனே அவனுக்குத் தெரியவரும். இதைப் பெரியவர்கள் நினைப்பால் வரும் பாவம் என்பர். நினைவால் மனம் இன்பத்தை ருசித்து, ரசித்து இன்பம் காண்கிறது. அதனால்தான் மனம் தனக்கு இன்பம் என்று கருதியவற்றை நினைவில் வைத்து அசை போடுகிறது. இதுவும் மகாபாவம் தான். நீ அந்தப் பெண்ணின் அழகை அணுவணுவாக ரசித்துச் சுவைத்திருப்பாய். தொட்டும் மகிழ்ந்திருப்பாய். இப்போ அந்த நினைவு உனக்கு வரும்போது முன்பு அனுபவித்த இன்பம் மனதில் எழுந்து ஆர்ப்பரிக்கும். அதனால் மனம் பரவசப்படும். அந்த பரவசம் தினமும் நடந்தால் அது வாழ்க்கையை நரகமாக்கும். அதனால் மனதிலுள்ள சிவசிந்தனை அகன்றுவிடும். இதைத்தான் மாணிக்கவாசக சுவாமிகள் சொல்கிறார்; “உலகத்தவர்கள் போகங்களுக்காக விழித்திருக்கையில் சிவன் எனக்கு அவர்களுக்கிடையில் ஆசனம் தந்து என்னை இருத்திப் பரபோதத்தை அருளினான். அதனால் கரணங்களின் துணையில்லாது சிவபோதத்தை நான் பெறலானேன். அதனால் பிறப்பிறப்பற்ற ஆத்மசொரூபம் நான் என உணர்ந்து கொண்டேன். இறைவன் தந்த அந்தச் சிவஞானத்தை என்னால் விளக்கிக்கூற முடியவில்லை” என்கிறார். சிவனை உடல் சொரூபமாக உணர்பவன் பொய்யன். அவனைத் தனது ஆத்மாவால் உணர்பவன் தான் சிவபோதத்தை அடையும் தகுதியுள்ளவன். நூல் அறிவோ, பொறிகளின் உதவியோ அந்நிலையை உருவாக்காது. அதனால் அப்பெண்ணின் நினைவை அகற்றிவிடு. இல்லாவிட்டால் அந்த நினைவு

மனதில் வரும்போது முன்பு அனுபவித்த இன்பங்களும் கூட வந்து மனதைக் கெடுத்து ஆத்மசொரூப நிலையைக் குலைக்கும்" என்றார் கதிரேசன்.

**விச்சைதான் இது ஒப்பது உண்டோ கேட்கின்**

**மிகுகாதல் அடியார்தம் அடியேன் ஆக்கி**

**அச்சம் தீர்த்து ஆட்கொண்டான் அமுதம் ஊறி**

**அகம் நெகவே புகுந்து ஆண்டான் அன்பு கூர**

**அச்சன் ஆண் பெண் அலி ஆகாசம் ஆகி**

**ஆர் அழல் ஆய் அந்தம் ஆய் அப்பால் நின்ற**

**செச்சை மலர் புரையும்மேனி எங்கள்**

**சிவபெருமான் எம்பெருமான் தேவா கோவே. 29**

"மகனே, எண்ணங்கள் தான் பற்றை உண்டாக்கி அதை அதிகரிக்கச் செய்து பாவங்களைச் செய்ய வைக்கின்றன". "தந்தை, ஆண், பெண், அலி, பஞ்சபூங்கள் ஆகியவையாக இருப்பவன் சிவன். இவையாவும் சிவனிடத்துத்தான் ஒடுங்குகின்றன. அத்துடன் இவற்றிற்கு அப்பால் இருப்பவனும் சிவனே. அழகிய வெட்சிப்பூப்போன்ற சிவந்த மேனியை உடைய அவன், பேரன்பே வடிவெடுத்துள்ளவன் அன்பர்களின் கூட்டத்தில் என்னையும் சேர்த்து வைத்தான். அவர்களோடு சேர்ந்திருக்கும்போது உலகப்பற்று வந்துவிடும் என்று பயப்படத் தேவையில்லை. அப்படியான அமிர்த சொரூபியான அவன் என் நெஞ்சுள் இருக்கிறான். இதுபோன்ற அதிசயம் நிகழ்ந்ததுமில்லை. அதைப்பற்றி யாரும் கேட்டறிந்ததும் இல்லை" என்று மாணிக்கவாசக சுவாமிகள் சொல்கிறார்; பழைய எண்ணங்களை அழிக்கவும், அதனால் ஏற்பட்ட வினையை அகற்றவும் அவனால்தான் முடியும். மாணிக்கவாசக சுவாமிகள் அதை மறப்பிப்பதற்காகத் தன்னை அடியார் கூட்டத்தோடு சேர்த்து வைத்ததாகக் கூறுகிறார். அதனால் ஓய்வான வேளைகளில் சிவனடியார்களுடன் கூடியிரு. அவர்கள் சிவனின் பெருமைகளைப் பாடும்போது சேர்ந்துபாடு. அவனின் அருளால் உனது துயரங்கள் நீங்கும். மனதில் வைராக்கியம் ஏற்படும். உலகப்பற்று அகலும்" என்றார் கதிரேசன்.

**தேவர்க்கோ அறியாத தேவ தேவன்**

**செழும் பொழில்கள் பயந்து காத்து அழிக்கும் மற்றை**

**மூவர் கோனாய் நின்ற முதல்வன் மூர்த்தி**

**மூதாதை மாது ஆளும் பாகத்து எந்தை**

**யாவர் கோன் என்னையும் வந்து ஆண்டு கொண்டான்**

**யாம் ஆர்க்கும் குடி அல்லோம் யாதும் அஞ்சோம்**

**மேவினோம் அவன் அடியார் அடியரோடும்**

**மேன்மேலும் குடைந்து ஆடி ஆடுவோமே. 30**

"மகனே, மனதில் உள்ள கட்டுக்களையெல்லாம் அறுப்பதால் பூரணமான வைராக்கியம் உண்டாகும். அது உண்டானால் எந்தப் பற்றும் எதையும் செய்யமாட்டாது. அதற்குரிய தைரியம் என்று சொல்லப்படும் அஞ்சாமை அல்லது அபயம் சிவனருளால் கிடைக்கிறது. இத்தன்மை தேவர்களுக்கில்லாமையால் தான் தேவேந்திரனால் கூடச் சிவனை அறிய முடியவில்லை. சிவன் தான் முதற்பொருள். உலகின் தலைவன் அத்துடன் உமாதேவியாரைத் தனது இடப்பாகத்தில் வைத்திருக்கும் தந்தையானவன். அவன் மெய்யடியார்களை வலியச் சென்று ஆட்கொள்பவன், அவனைச் சரணடைந்தால் சரணடைபவர்கள் வேறு யாருக்கும் அஞ்சத் தேவையில்லை. ஏனென்றால் அவர்கள் யாருக்கும் குடியானவர் அல்ல. அப்பர் சொல்வதுபோல, "நாம் யார்க்கும் குடியல்லோம், யமனுக்கும் அஞ்சமாட்டோம்" என்ற நிலை உருவாகும். அதனால் அவனையே நினைத்திரு" என்றார் கதிரேசன்.

### 4. ஆத்ம சுத்தி (அறுசீர் ஆசிரிய விருத்தம்)

ஆத்மா என்ற சொல்லானது உடல், மனம், உயிர், பரம்பொருள் என்ற நான்கையும் குறிப்பதாகும்.

**ஆடுகின்றிலை கூத்து உடையான் கழற்கு அன்பு இலை**

**என்புஉருகிப் பாடுகின்றிலை பதைப்பதும் செய்கிலை**

**பணிகிலை பாதமலர் சூடுகின்றிலை சூட்டுகின்றதும் இலை**

**துணை இலி பிண நெஞ்சே தேடிகின்றிலை தெருவுதோறு**

**அலறிலை செய்வதொன்று அறியேனே? 31**

அன்று சுவாமியார் முதியவர்களுக்கு உரையாற்றினார்; “பெரியவர்களே, நாம் முதுமையடைந்த பின்பு நெஞ்சு செயலற்றுப் பிணம்போலக் கிடக்கும். அதனால் ஆனந்தக்கூத்தன் மீது அன்பு உண்டாகாது. அன்பின் மேலீட்டால் ஆடமுடியாது. எலும்பு உருகப் பாட முடியாது. உணர்ச்சியின் வேகத்தால் படபடப்பு அடைவதில்லை, வணங்குவதில்லை, பாத கமலத்தைத் தலையில் தரிப்பதில்லை. மலர்தூவிப் பாதங்களை அலங்கரிப்பதில்லை. கடவுளின் மேல் நாட்டம் கொள்வதில்லை. வீதி, வீதியாகக் கடவுளைப் போற்றிப் புகழ்ந்து பாடிச் செல்வதில்லை. இறைவனது துணையைத் தேடாத உன்னை வைத்துக்கொண்டு என்ன செய்வதென்று எனக்குப் புரியவில்லை” என்று சில தினங்களுக்கு முன்பு சிவனைத் தரிசிக்க வந்த ஒரு தொண்ணூறு வயது கடந்த முதியவர் கூறிக் கவலைப்பட்டார். இங்கு இன்று ஏராளமான முதியவர்கள் இங்கு வந்திருக்கிறார்கள். அவர்களது நிலையும் அதுதான். பூப்பறித்து மாலை கட்டிச் சிவனுக்குச் சூட முடியவில்லையென்று பலர் துன்பப்படுகின்றனர். இதைப்பற்றிக் கவலைப்படாதீர்கள். மாணிக்கவாசக சுவாமிகள் இளவயதிலேயே இவற்றையெல்லாம் செய்ய முடியவில்லை என்கிறார். அதற்குக் காரணம் இவை மட்டும் சிவனைச் சென்றடைய வைப்பதில்லை. பின் இவற்றையெல்லாம் கடனுக்காகச் செய்வதுபோலச் செய்துவிட்டு அதன் பின் தீயசெயல்களைச் செய்கிறார்கள். நீங்கள் அமைதியாக இருங்கள். வேறு எண்ணங்களின்றி அமைதியாக இருந்தால் உங்களுக்குத் துணையாகச் சிவன் வந்துவிடுவான். அவனுக்கு உங்களது கதைகள் சலிப்பை உண்டாக்காது. அதனால் மனம்விட்டுப் பேசுங்கள். பாடமுடியாவிட்டால் ஏனையோர் பாடுவதைக் கேளுங்கள். ஒலிநாடாவில் பதிவுசெய்யப்பட்ட திருவாசகத்தைக் கேளுங்கள். அது மிகவும் பயனுள்ளதாக இருக்கும். வித்துவத்திறமை மிக்கவர்கள் தான் அதைப் பாடிப் பதிவுசெய்துள்ளனர். சிவனது பெருமைகளை நினைப்பவர்கள். அதை விரும்பியவற்றோடு ஒப்பிடுங்கள். வீதிவழியாகத் திருவெம்பாவைப் பாட்டைப் பாடியபடி செல்வதாக நினையுங்கள். நினைவுதான் செயல்வடிவமாவது. அதனால் இருந்த இடத்தில் இருந்து கொண்டே உலகை வலம் வரலாம்” என்றார் சுந்தரமூர்த்தி சுவாமிகள்.

**அறிவு இலாத எனைப்புகுந்து ஆண்டு கொண்டு அறிவதை**
**அருளிமேல் நெறிஎலாம் புலம் ஆக்கிய எந்தையைப் பந்தனை**
**அறுப் பானைப் பிறிவு இலாத இன் அருள் கண் பெற்றிருந்தும் மாறி**
**ஆடுதி பிண நெஞ்சே கிறி எலாம் மிகக் கீழ்ப்படுத்தாய் கெடுத்தாய்**
**என்னைக் கெடுமாறே. 32**

"சிவனடியார்களே, காலையில் வந்த ஒரு சிவனடியார் தனக்கு நிம்மதியில்லை, மகிழ்ச்சியில்லை, மனம் பரபரப்படைவதால் இறைவனை வணங்க முடியவில்லை. மனைவி, பிள்ளைகள் அன்பாகப் பராமரித்தாலும் அதனால் மகிழ்வடைய முடியவில்லை. அதனால் எல்லோரிடமும் குறைகேட்க வேண்டியுள்ளது. நான் என்ன செய்வது" என்று கேட்டார். நீங்கள் அல்ல உலகத்தவர்கள் முழுப்பேரும் உங்களைப் போன்ற நிலையில் தான் உள்ளனர். மனம் நிம்மதியடைய, மகிழ்ச்சியடைய இறைவனை வேண்டுங்கள். உங்களைப் போன்றவர்களுக்காகத்தான் மாணிக்கவாசக சுவாமிகள் பல திருவாசகங்களைப் பாடியுள்ளார், "ஞானமில்லாத எனது மனதில் எழுந்தருளி எனக்கு ஞானத்தை அருளினான். அத்துடன் மேலான மார்க்கங்களையெல்லாம் எனக்குத் தெரியப்படுத்தினான். அவன் பிறவியை அகற்றியவன். அவனது திருவிளையாடல்கள் பல உண்டு. இவற்றை அறிந்திருந்தும் அற்பமான மனது தடுமாறுகிறது. பொய்யான செயல்கள் உன்னிடத்தில் மிகுந்திருக்கின்றன. தீயவற்றைச் செய்யும்படி ஏவி என்னைத் துன்புறுத்துகின்றாய்" என்கிறார். நல்லதைத் தேடுவதும் மனம்தான். தீயதைத் தேடுவதும் மனம்தான். இரண்டையும் தேடினாலும் தீயவற்றை எண்ணியே மனம் மகிழும். அதனால் தான் வேண்டாத நினைவுகளை அகற்றுங்கள். அதற்காக இறைவனை நாடுங்கள். இல்லாதவற்றைத்தானே நாம் வாங்குதல் வேண்டும். இருப்பவற்றை யாராவது வாங்குவார்களா? எமது மனதில் ஞானம் இல்லை, அன்பு இல்லை, பொறுமை இல்லை, அடக்கம் இல்லை. இவ்வாறு பல நல்ல செயல்கள் இல்லாதிருக்கும்போது கிடைக்காதவற்றை ஏன் எண்ணுகிறீர்கள். மகிழ்ச்சியும் நிம்மதியும் இறைவனிடம் தான் தாராளமாக உள்ளன. அவற்றைக் கேட்டுப் பெறுங்கள். அப்படிப் பெற்றீர்களானால் நீங்கள் விரும்பியவை யாவும் வந்து சேரும். காலையில் வந்து குறைப்பட்ட முதியவர் பெரும் பணக்கார வர்த்தகர். புதுத்தொழில் ஆரம்பித்து நட்டமடைந்து போனாராம். அதனால் தான் அவர் அவ்வாறு சொன்னார். அதனால் இறைவனிடம் உங்களிடம் இல்லாதவற்றைக் கேளுங்கள். உள்ளவற்றைக் கேட்டுத் துன்பப்படாதீர்கள்" என்றார் சுவாமியார்.

**மாறிநின்று எனைக் கெடக் கிடந்தனையை எம் மிதி இலிமட**

**நெஞ்சே தேறுகின்றிலம் இனி உனைச் சிக்கனெக் சிவன்**

**அவன் திரங் கோள் மேல் நீறு நின்றது கண்டனை ஆயினும்**

**நெக்கிலை இக்காயம் கீறு நின்றிலை கெடுவது உன் பரிசு இது**

**கேட்கவும் கில்லேனே.** **33**

“சிவனடியார்களே, மனம் தான் எல்லாவற்றிற்கும் காரணம். அதனால் மனதைத் தூய்மைப்படுத்துங்கள். தவறுகள் அறிந்தும் நடைபெறும், அறியாமலும் நடைபெறும். மாணிக்கவாசக சுவாமிகள் சொல்கிறார்; “அறிவு கெட்ட மூட மனதே, கூட இருந்து பகையை உண்டாக்கி என்னைக் கெடுக்கிறாய். உன்னை நான் இனி ஒருபோதும் நம்பமாட்டேன். எனது சிவந்த தோள் மீது சிவனார் திருநீறு அணிந்தது உனக்குத் தெரியும் அப்படியிருந்தும் இரக்கமில்லாது செயற்பட்டு என்னை வருத்துகிறாய். உடலில் உள்ள பாசம் இன்னும் உனக்கு நீங்கவில்லை. அழிந்து பட்டுப் போவது உனது போக்கு. இதனைக் கேட்டுச் சகிக்க முடியவில்லை” என்கிறார். சிவன் ஆட்கொண்ட போதும் மனம் தடுமாற்றம் அடையக் கூடியது. உடல் சுத்தம் பெறுவதற்காகக் குளிக்கிறோம். குளித்த பின்பும் உடலில் அழுக்கிருக்கும். அதுபோல சிவனை முழுமையாக உணர்ந்த பின்பும் பற்று இருக்கும். அது சிவப்பற்று, சிவனை அடைய வேண்டும், அவனோடு கூடிப் பேரின்பமடைய வேண்டும் என்ற அவசரம் மனதிற்கு இருக்கும். அதுவும் பற்றுத்தான். அது தூய்மையான பற்று. மனம் எதைச் சார்கிறதோ அதையே உண்மையென்று நம்பும். காலையில் வந்த ஒரு முதியவர் தனது மகனின் மனைவி தனக்குத் தரும் சாப்பாட்டிற்குக் குறைவாக உப்பிடுகிறாள் என்று அவளுடன் தினமும் பிரச்சினைப்படுகிறார். அவள் வேண்டுமென்றே செய்வதாகக் கூறுகிறார். அது அவர்களது குடும்ப உறவைப் பாதிக்கிறது. உப்புக் காணாவிட்டால் சிறிது உப்பைச் சேர்த்தால் எல்லாக் குழப்பமும் தீரும். இதற்காக ஏன் பிரச்சினைப்படுவான். அவரை அவரது மகள் தன்னுடன் வந்து இருக்கும்படி கேட்கிறாள். அதற்கு அவர் மருமகன் குடிகாரனாம். குடித்து விட்டுச் சண்டை பிடிப்பானாம். அவரது சகோதரி தன்னுடன் வந்திருக்குமாறு கேட்கிறாள். அதை, அவள் தன்னிடமுள்ள சொத்தைக் கவர்வதற்காக அவ்வாறு நடிக்கிறாள் என்கிறார். இதற்கு எப்படித் தீர்வு காண்பது மாணிக்கவாசகர் கூறுவது போல அறிவுகெட்ட மூட மனது மற்றவர்களுடன் இணங்கிப் போகாது என்னைப் பகைவனாக்குகிறது என்பது தான் உண்மை. இதற்குக் காரணம் மனம் தூய்மையடையாமையே. அவர் தினமும் ஆச்சிரமத்திற்கு வந்து திருவாசகத்தைப் படிக்கிறார். எல்லோரும் படிக்கிறார்கள். அதனால் நானும் படிக்க வேண்டுமென்று எண்ணித் திருவாசகத்தைத் தயவுசெய்து படிக்காதீர்கள். மாணிக்கவாசகர் சிவபுராணத்தின், பொருள் உணர்ந்து சொல்பவர்களே சிவபுரத்திற்குச் சென்று சிவனோடு கலப்பர் என்கிறார். அதைப் படிக்கிறார்களே தவிர உணர்ந்து கொண்டால் இவ்வாறான சிக்கல்கள் வராது” என்றார் சுந்தரமூர்த்தி சுவாமிகள்.

**கிற்றவா மனமே கெடுவாய் உடையான் அடி நாயேனை விற்று**

**எலாம் மிக ஆள்வதற்கு உரியவன் விரைமலர் திருப் பாதம்**

**முற்று இலா இளந்தளிர் பிரிந்திருந்து நீ உண்டன எல்லாம்**

**அற்றவாறும் நின் அறிவும் நின்பெருமையும் அளவு அறுக்**

**கில்லேனே. 34**

அருள்தாசன் கதிரேசனது வீட்டுக்கு வந்து அவருக்குச் சொன்னார்; "ஐயா, நீங்கள் கூறிய ஆலோசனைப்படி நான் எனது இளைய மகனிடம் எனது வர்த்தகப் பொறுப்புக்களை ஒப்படைத்த பின்பு அவன் என்னை மதிப்பதில்லை. அதன் பின் அவனை ஒரு நடுத்தரவயதுப் பெண் அடிக்கடி வந்து சந்திக்கிறாள். அது எனக்குச் சந்தேகத்தை உண்டு பண்ணுகிறது. நான் மிகவும் குழம்பிப் போயிருக்கிறேன். எனது மனைவி அவனின் பக்கம் தான் கதைக்கிறாள். அவள் ஒரு வர்த்தகனின் மனைவியாம். அவன் மாதவராசாவுடன் சேர்ந்து வியாபாரம் செய்பவனாம். தற்பொழுது அவன் விபத்துக்குள்ளானமையால் அவள் தானாம் வியாபாரத்தைக் கவனிக்கிறாள். அதற்காக அப்படிப் பழகுவது எனக்குப் பிடிக்கவில்லை" என்றார்.

கதிரேசனுக்கு அதைக் கேட்கக் கடுங் கோபம் வந்தது; "அருள், எதையும் ஆராயாது கதைக்காதே. அதைவிட வியாபாரத்தை ஒப்படைத்த பின் அதில் ஏன் தலையிடுகிறாய். உனது மனைவி எனக்கு எல்லாவற்றையும் ஏற்கனவே சொல்லி விட்டாள். அந்த வர்த்தகனின் மனைவிக்கு ஐம்பது வயதிற்கு மேலிருக்கும். கணவன் முடங்கியதால் கணவனின் தொழிலைச் செய்கிறாள். அவளுக்கு ஐந்து பிள்ளைகள். அவளது பெற்றோர், கணவனின் பெற்றோர் எல்லோரும் கூட இருக்கின்றனர். அவர்கள் பெரும் வசதியானவர்கள் அல்ல. அதனால் தான் குடும்பத்தைக் காப்பாற்ற அவள் உழைக்கிறாள். மாணிக்கவாசக சுவாமிகள்; "சலிப்பில்லாது இந்திரிய விசயங்களில் ஈடுபட்டுக் கொண்டிருக்கும் மனமே, நீ தீயதை எண்ணி அழிந்து கொண்டிருக்கிறாய். எப்பொழுதும் இளமையாக வீற்றிருக்கும் சிவனின் திருவடிகளை ஆராதிக்கிறேன். என்னை விற்கவோ அல்லது வேறு எதையும் செய்யவோ அவனுக்கு உரிமை உண்டு. அந்த இறைவனைப் புறக்கணித்து விட்டு அற்ப சுகங்களை நீ அனுபவிக்கிறாய். அதற்கேற்ற சிற்றறிவுதான் உன்னிடத்தில் உள்ளது. அதனால் நீ பெற்ற பெருமையெல்லாம் மாயமாகி விட்டதை எண்ணிப்பார்" என்கிறார். இது அவர் உன் போன்றவர்களின் மனதைப் பற்றிக் கூறியது. ஒவ்வொரு திருவாசகத்திலும் அவர் தனது ஆன்மாவைக் குறைசொல்லி, மற்றவர்களைத் திருத்துகிறார். நீ உனது பிள்ளையை

நம்பவில்லை. உனது மனைவியை நம்பவில்லை. உனது மருமகளையும் நம்பவில்லை. அவர்கள் மாதவராசாவை நம்புகின்றனர். நான் அந்தப் பெண்ணைப் பற்றி விசாரித்தேன். அவள் உத்தமி. சிவபக்தை. அதைவிட உனது மகனுக்கு நாற்பது வயது கூட ஆகவில்லை; அப்பெண்ணுக்கு ஐம்பது வயதிருக்கும். எப்படி நீ ஒரு வயோதிபப் பெண்ணைக் குற்றவாளியாக்குவாய். பணம் இருந்ததால் அதைச் செலவு செய்து தீய செயல்களைச் செய்தாய். இப்போ மனம் இருப்பதால் மாணிக்கவாசக சுவாமிகள் சொல்வது போல இறைவனைப் புறக்கணித்துவிட்டு உனது சிற்றறிவின் மூலம் குற்றங் காண்கிறாய். இது நல்லதற்கல்ல. அதனால் தீமைகளும் பாவமும் தான் வந்துசேரும்" என்றார் கதிரேசன்.

**அளவு அறுப்பதற்கு அரியவன் இமையவர்க்கு அடியவர்க்கு**

**எளியான் நம் களவு அறுத்து நின்று ஆண்டமை கருத்தினுள்**

**கசிந்து உணர்ந்து இருந்தேயும் உள கறுத்து உனைநினைந்து**

**உளம் பெரும் களன் செய்ததும் இலை நெஞ்சே பளகு அறுத்து**

**உடையான் கழல் பணிந்திலை பரகதி குவானே** **35**

"அருள், உனது போக்கு எனக்கு வெறுப்பைத் தருகிறது. மாணிக்கவாசக சுவாமிகள் மனதைப் பற்றி இவ்வாறு சொல்கிறார்; "தேவர்களாலும் அறியமுடியாத எம் இறைவன் அடியார்களுக்கு எளியவன். தன்னைக் காட்டியும் கொள்பவன். அவன் உயிர்களது தீமைகளை அகற்றி எம்மை ஆட்கொள்ள வேண்டும் என்று உறுதியாக உள்ளான். அதை உணர்ந்து நாம் அவனை வணங்குதல் வேண்டும். முத்தியடைதற் பொருட்டு இந்திரியங்களுக்கு இலக்காகியுள்ள விசயங்களை வெறுத்து ஒதுக்குதல் வேண்டும். அப்படி ஒதுக்கினால் தான் இறைவனை முழுமையாக மனதில் இருத்தலாம். தீய சிந்தனைகளை விலக்கி இறைவன் திருவடியை வணங்குதல் வேண்டும். மனமே இவ்வாறு செய்யாத உனது இயல்பு எத்தகையது?" என்று கேட்கிறார். மனம் பற்றுக்களைத் துறந்து விட்டேன் என்று கூறினாலும் துறக்காது. கட்டுப்பாட்டுக்குள் வராது. தீயவற்றை நினைத்துப் பழகிய அதைத் திருத்துவது மிகக் கடினமானது. நீ வாழ்க்கையில் வெறுப்பேற்பட்டதால் இறைவனை வணங்க முடிவு செய்தாய். அதில் உறுதியாக இரு. உறுதியாக இருப்பவன் உலகம் அழிந்தாலும் கலங்கமாட்டான். முதலில் உனது மனதை உறுதிப்படுத்து. இப்போ எல்லாவற்றையும் ஒப்படைத்த நீ அதைப் பற்றிக் கவலை கொள்ளாது இறைவனைப் பற்றிப்பிடி. உனது குறைகளை

அவனுக்குச் சொல். அவன் அதைக் கவனிக்கட்டும். நீ எல்லாவற்றையும் மறந்து இறைவனை வணங்கு. இதைவிட எதையும் என்னால் சொல்ல முடியாது” என்றார் கதிரேசன்.

**புகுவ தாவதும் போதர வில்லதும் பொன்னகர் புகப்போதற்**

**குகுவ தாவதும் எந்தையெம் பிரானென்னை யாண்டவன்**

**சுழற்கன்பு நெகுவ தாவதும் நித்தலும் அமுதொடு தேனொடு**

**பால்கட்டி மிகுவ தாவதும் இன்றெனின் மற்றிதற் கன்செய்கேன்**

**வினையேனே. 36**

“அருள், உனக்கு முதலில் கடவுளின் மீது நம்பிக்கை உண்டாக வேண்டும். சிலர் சிலரின் வீட்டுக்குச் சென்றால் அவர்களின் வீட்டில் எதையும் வாங்கி உண்ணமாட்டார்கள். ஏனென்றால் குடிக்கும் பானத்திலோ உண்ணும் உணவிலோ மருந்திட்டுத் தம்மை நோயாளியாக்கி விடுவார்கள் என்ற பயம். அது இறை நம்பிக்கை இன்மையால் உண்டாகிறது, “சிவன் தனது அன்பர்களுக்குச் சிவசாயுச்சியம் அல்லது பரமார்திகப் பெருநிலையை அளிப்பான். பின்பு அது இழக்கப்படமாட்டாது. அதை அடைய உலகப்பற்றுக்களை நீக்க வேண்டும். என் தந்தை, என் தலைவன், என்னை ஆட்கொள்பவன் என்று நினைத்து உருகுதல் வேண்டும். அப்படிச் செய்வதனால் பேரானந்தம் மனதில் வளரும் அத்தகைய அருட்பேறு எனக்குக் கிடைக்காதது எனது வினையின் பயனாகும்” என்று மாணிக்கவாசக சுவாமிகள் கூறுகிறார். நாம் இறுதிக் கட்டத்தில் இருக்கிறோம். இன்றோ நாளையோ அல்லது சில மாதங்கள் கழித்தோ மரணம் அடையப் போகிறோம். அதுவரை மகிழ்வாக இருக்க வேண்டாமா? முதுமையில் வசதியுள்ள ஒருவனுக்கு மன அமைதியைக் கொடுப்பது இறைவணக்கம். “இறைவா உன்னோடு கூடியிருக்க அருள்செய்! என்று மட்டும் இறைவனை வணங்கு. உனது பிள்ளைகளில் நம்பிக்கை இல்லாமையால் பெருந்தொகையான பணத்தை வங்கியில் வைப்பிலிட்டுள்ளாய். அன்றன்று பிச்சை எடுத்துண்ணும் சரவணபவனுக்கு பிள்ளைகள் இல்லை. உற்றார் உறவினர் கவனிப்பதில்லை. அவன் திடீரென்று இறந்தபோது ஊரவர் சுகாதாரப்பகுதிக்கு அதை அறிவித்தனர். அதையறிந்த வெளிநாட்டில் இருந்து வந்த பாலசுந்தரத்தின் மகன் தனது தந்தை யுத்தவேளையில் வீதியில் சுட்டுக் கொல்லப்பட்டதால் அவருக்குத்தான் வெளிநாட்டில் உள்ளபோது வந்து கிரியை செய்யாததால் சரவணபவனின் உடலைப் பொறுப்பேற்று உரிய கிரியைகளை முறைப்படி

செய்தான். இவையெல்லாம் என்றோ தீர்மானிக்கப்பட்டவை. அதற்காகக் கவலைப்படுவோர் அறிவிலிகள்” என்றார் கதிரேசன்.

**வினையென் போலுடை யார்பிற ராருடை யானடி நாயேனைத்**

**திசையின் பாகமும் பிரிவது திருக்குறிப் பன்றுமற் றதனாலே**

**முனைவன் பாதநன் மலர்பிரிந் திருந்தும்நான்முட்டிலேன்**

**தலைகீறேன் இனையன் பாவனை யிரும்புகல் மனஞ்செவி**

**யின்னதென் றறியேனே.** **37**

“அருள், ஒவ்வொருவரும் தன்னைப் போன்றவர்கள் என்று மற்றவர்களைக் கருதுகின்றனர். குடிப்பவன் எல்லோரும் குடிகாரர் என்று நினைக்கிறான். திருடன் எல்லோரும் திருடர்கள் என்று தான் நினைக்கிறான். நீ முன்பு பல பெண்களுடன் தொடர்பு கொண்டிருந்தமையால் உனது மகளையும் அவ்வாறு நினைக்கிறாய். அது தவறு. மாணிக்கவாசக சுவாமிகள்; “என்னைப்போல் கொடிய வினையை உடையவன் வேறு யாருமில்லை. அதனால் என்னை இறைவன் தன்னை விட்டு விலக்கி வைக்கமாட்டான். எனது வினைகள் அவனிடமிருந்து என்னைப் பிரித்து வைத்திருக்கின்றனவே தவிர என்னை இறைவன் விட்டுப் பிரியவில்லை. அதையிட்டும் நான் வருத்தமடையவில்லை. அதை விலக்கவும் முயலவில்லை. இரும்பைப் போல நான் உணர்ச்சியில்லாதவன். அத்துடன் எனது மனம் கல். அது இளகாது, இனிக்காது. அது எத்தகையது என்று எனக்கே தெரியாது” என்கிறார். அது தான் உண்மை. நாம் நாத்திகம் பேசினாலோ அல்லது ஓயாது தீய செயல்களைச் செய்தாலோ இறைவன் எம்மை விட்டுப் பிரியமாட்டான். நாம் தான் இறைவனை விட்டுப் பிரிந்திருக்கிறோம். பிரிந்திருக்கும் நாம் ஒரு நாள் துன்பம் பெருகத் தன்னை தஞ்சமடைவோம் என்று அவனுக்குத் தெரியும். பலரது மனம் இரும்பு போன்றது. அது பிள்ளைகள், உறவினர்கள், சகோதரங்களுக்குக் கூட இரங்குவதில்லை. நீ இளகிய மனம் படைத்தவனாயிருந்தால், உனது மகளைக் குறை சொல்லியிருக்கமாட்டாய். மனைவியை வெறுத்திருக்கமாட்டாய். அதைவிட இன்னொரு பெண்ணுக்குக் களங்கத்தை உண்டாக்கி இருக்கமடாட்டாய். உனது மனதை உனக்கே தெரியாது. அப்படி இருக்க அதை எப்படிக் கட்டுப்படுத்துவாய்?” என்று கேட்டார் கதிரேசன்.

**ஏனை யாவரும் எய்திட லுற்றமற் றின்ன தென் றறியாத**

**தேனை ஆன்நெயைக் கரும்பின் இன் தேறலைச்**

**சிவனையென் சிவலோகக் கோனை மான்அன நோக்கிதன்**

**கூறனைக் குறுகிலேன் நெடுங்காலம் ஊனை யானிருந்**

**தோம்புகின் றேன்கெடு வேனுயி ரோயாதே. 38**

"பலர் சிவனை வணங்க வேண்டும் என்பதற்காக வணங்குகின்றனரே தவிர உள்ளன்போடு வணங்குவதில்லை. ஒரு மரத்தை நட்டால் அதை நல்ல முறையில் பராமரித்தால் தான் அதிலிருந்து பலன் பெறலாம். நட்டுவிட்டு பராமரிக்காது விட்டால் பயன் பெறமுடியுமா? பலர் பொழுதுபோக்கிற்காகக் கோவில்களுக்கு வருகின்றனர். சிலர் கதைத்துச் சிரிக்க வருகின்றனர். கோவிலினுள் சென்று பார்த்தால் ஒரே கதை. தீபம் காட்டும்போது கையைக் கூப்பி அரோகரா என்கின்றனர். அன்போடு வணங்காத பக்தர்கள் அல்லாதவர்களுக்குச் சிவசொரூபம் எப்படியானது என்பது பிடிபடாது. அதை நாடுகின்றவர்களுக்கு அது தேன், பசுநெய், கருப்பஞ்சாறு போலச் சிவானந்தம் சுவைக்கும். சிவன் மங்களத்தை உண்டு பண்ணுபவன். சிவலோகத்து இறைவன். மானின் விழிகளை ஒத்த உமாதேவியாரின் வலப்பாகத்தில் இருப்பவன் அப்படியானவனை நான் பக்தியுடன் வணங்கவில்லை. அதைச் செய்யாது உனது உடலைக் கவனிப்பதிலேயே கருத்தாக இருந்தேன். இவ்வாறிருப்பதை விட நான் இறப்பது மேலானது" என்று மாணிக்கவாசக சுவாமிகள் சொல்கிறார். ஐந்து நிமிடங்கள் மனதை அடக்கி அவனை வழிபட முடியாதவர்களாகவே பலர் இருக்கின்றனர். ஐந்து நிமிடம் மனதை அடக்கி எந்தச் சிந்தனையுமில்லாமல் அவனை நினைத்துப் பார் அவன் உன்னுள்ளத்துள் விழித்திடுவான். விழித்த அவனின் அருள் உன்னை ஆட்கொள்ளும். அது கரும்பு, தேன், பசுநெய் போலச் சுவை தரும். பின் அது நீடிக்கும். அதை விட்டு விட்டுப் பல்வேறுபட்ட சிந்தனைகளுடன் வணங்கினால் பயன் ஏற்படாது. மனமும் அடங்காது. இது எனது அனுபவம்" என்றான் மகாலிங்கம்.

**ஓய்வி லாதன உவமனில் இறந்தன ஒண்மலர்த் தாள்தந்து**

**நாயி லாகிய குலத்தினுங் கடைப்படும் என்னைநன்**

**னெறிகாட்டித் தாயி லாகிய இன்னருள் புரிந்தஎன் தலைவனை**

**நனிகாணேன் தீயில் வீழ்கிலேன் திண்வரை உருள்கிலேன்**

**செழுங்கடல் புகுவேனே. 39**

“உங்களிடம் அமைதியை நாடி வந்தால் ஏதேதோ சொல்கிறீர்கள். மனம் அமைதியடைந்தால் நான் ஏன் உங்களிடம் வரப் போகிறேன்” என்றார் அருள்தாசன்.

“அருள், வரவும் செலவும் உழைப்பவனின் கையில் தான் தங்யியுள்ளது. அதை இன்னொருவனால் சொல்ல முடியாது. அளந்து செலவு செய்பவன் முன்னேறுகிறான். பயனடைகிறான். மதிக்கப்படுகிறான். வரவுக்கு மீறிச் செலவு செய்பவன் கடன்காரனாகிறான். துன்பப்படுகிறான். அவமானப்படுகிறான். இதுதான் இயல்பு. ஒவ்வொருவரும் தம்மைத்தாம் தான் மேம்படுத்த வேண்டும். தனக்காக உண்பது போலவும் உடுப்பது போலவும் நீரைப் பருகுவது போலவும் தான் தான் அமைதியைத் தேடிக் கொள்ள வேண்டும். இதை வேறு எவராலும் செய்ய முடியாது. மாணிக்கவாசக சுவாமிகள் கூறுவதுபோல; “உமாதேவியாரின் தலைவனான பரமேசுவரனை. ஆண்டவனை முக்கண்ணனை, நீலகண்டனை மெய்யன்போடு வணங்கினால் அழிவில்லாத ஒப்புவமையில்லாத ஞானஒளி வீசவும் தனது திருவடிகளை இறைவன் தந்துதவுவான். நாயினும் கடைப்பட்ட எனக்கு அவன் ஞானநெறியைக் காட்டினான். தாயைப் போல அன்பு செலுத்தி என்னை ஆட்கொண்டான். அவனைக் காண்பதற்காகத்தான் நான் தீயில் விழுந்தோ, செங்குத்தான மலையில் உருண்டோ, ஆழ்கடலில் மூழ்கியோ உயிரை விடாதிருக்கிறேன்” என்கிறார். அவனை மெய்யன்புடன் வணங்கு என்பதைத்தவிர வேறு எதையும் என்னாலல்ல வேறு யாராலும் கூற முடியாது. பசித்தவன் உணவைத் தேடுவது போலவும், தாகமேற்பட்டவன் நீரைத் தேடுவது போலவும், மனதில் அமைதி ஏற்பட வேண்டும் என்பவன் அவனின் அருளைத் தேட வேண்டும்” என்றார் கதிரேசன்.

**வேனில் வேள்கணை கிழித்திட மதிகெடும் அதுதனை**

**நினையாதே மான்நி லாவிய நோக்கியர் படிறிடை மத்திடு**

**தயிராகித் தேன்நி லாவிய திருவருள் புரிந்தவென் சிவனகர்**

**புகப்போகேன் ஊனில் ஆவியை ஓம்புதற் பொருட்டினும்**

**உண்டுடுத் திருந்தேனே.** **40**

“அருள், உனது நிலையில் தான் உலகில் பலர் இருக்கின்றனர், என்று மாணிக்கவாசக சுவாமிகள் கூறுகிறார்; “தேன் போன்ற சிவனது அருளை நாடாது நல்ல உணவு வகைகளை உண்டும், அழகிய விலையுயயாந்த உடைகளை உடுத்தும் உடலை மேம்படுத்துவதிலேயே அக்கறை கொண்டிருந்தேன். அதனால் மன்மத பாணத்திற்கு இலக்கானேன். அது என்னை எவ்வேளையிலும் வருத்துகிறது. அதனால் பாதகனின் வலையில் நான் அகப்பட்டுள்ளேன்” என்கிறார். அவர் அவ்வாறு அகப்படவில்லை; உன்போன்றவர்களுக்காகத் தான் இதைச் சொல்கிறார். நீ பெரும் பணக்காரன். மிக மிக ஆடம்பரமாக வாழந்தாய். வாழ்விற்குத் தேவையான யாவற்றையும் நல்ல முறையில் செய்தாய். மறுமை வாழ்வைப் பற்றிச் சிந்தித்தாயா? இளமையில் மதுவும் மாமிசமும் பெண்களின் தொடர்பும் இருந்தது. முன்பு உன்னுடன் தொடர்பில் இருந்த ரஞ்சினி முதுமையடைந்து விட்டாள். அவளது மகள் ரோகிணி நல்ல அழகி. இளமைத் துடிப்புள்ளவள். அவள் இப்போது உன்னிடம் வந்து செல்கிறாள். அவள் வந்து போவது உனது குடும்பத்தினருக்குத் தெரிந்தமையால் இப்போ துன்பப்படுகிறாய். இவையெல்லாம் உனக்குத் தேவையா, அவளின் இளமையும் செழுமையும் உனது மனதை விட்டு நீங்க மறுப்பதால் தான் இவ்வளவு பிரச்சினைகளும் வருகின்றன. மனம் அமைதியடைய மறுக்கிறது. இதை நான் சொல்லமாட்டேன். திரும்பத் திரும்ப வந்து துன்பம் துன்பம் என்று நீ சொல்வதால் சொன்னேன். தீய எண்ணங்கள் இருக்கும் வரை யாருக்கும் மனதில் அமைதி, மகிழ்ச்சி உண்டாகாது” என்றார் கதிரேசன்.

### 5. கைம்மாறு கொடுத்தல் (கலிவிருத்தம்)

ஒருவர் எமக்குச் செய்த உதவிக்கு பிரதியுபகாரமாக எதையாவது கொடுப்பதைக் கைமாறு செய்தல் என்பர். அவ்வாறு செய்ய முடியாதவர்கள் உதவி செய்தவனை நன்றியுடன் நினைவு கூரல் வேண்டும் இது கைம்மாறு கொடுப்பதை ஒக்கும். இறைவனுக்குக் கைம்மாறு கொடுக்கப் பக்தனால் முடியாது. அதனால் இறைவனது அருளை எண்ணிக் கொண்டிருப்பது இறைவனுக்குச் செய்யும் கைமாறாகும். இது வாழ்நாள் முழுவதும் செய்ய வேண்டிய ஒரு நற்செயலாகும்.

**இருகை யானையை ஒத்திருந் தென்னுளக்**

**கருவை யான்கண்டி லேன் கண்ட தெவ்வமே**

**வருக வென்று பணித்தனை வானுளோர்க்கு**

**ஒருவ னேகிற்றி லேன்கிற்பன் உண்ணவே. 41**

அருள்தாசனின் இளைய மகன் கதிரேசனது வீட்டுக்கு வந்து சொன்னான்; “ஐயா அதிகாலையில் எனது தகப்பனார் வீட்டை விட்டுப் புறப்பட்டவர் இன்னும் வீட்டுக்கு வரவில்லை. காலை உணவையும் உண்ணவில்லை” என்றான்.

“இன்று அதிகாலையில் இங்கு வந்தவர். அவரது மனம் குழம்பியிருந்தது. ஆச்சிரமப்பக்கம் சென்றிருப்பார்” என்றார் கதிரேசன்.

“அவரின் போக்கு இப்போ பெரும் பிரச்சினையை எமக்குத் தருகிறது. வர்த்தக நிலையத்தை உன்னிடம் ஒப்படைத்து விட்டு இளைப்பாறப் போகிறேன் என்றவர். அதன் பின் அடிக்கடி வந்து பணத்தை எடுக்கிறார். பணம் எடுப்பதைப் பற்றிப் பிரச்சினை இல்லை. ஏன் அதை எடுக்கிறார் என்று தான் புரியவில்லை. கேட்டால் சண்டைக்கு வருகிறார். அது எனது சொத்து. அதை நான் எடுப்பேன். நீ யார் கேட்பதற்கு என்கிறார். அதனால் அவரது சொத்தை நான் மீண்டும் அவருக்குக் கொடுக்க விரும்புகிறேன். பணத்தை விட நிம்மதி தான் முக்கியம். எனது மனைவி அவரிடம் வர்த்தகநிலையத்தை ஒப்படைக்குமாறு வற்புறுத்துகிறாள். அதைத்தான் அம்மாவும் சொல்கிறா” என்றான் மாதவராசா.

“மகனே, துன்பம் தான் வாழ்வில் நிரந்தரமானது. சாகும்போதும் பலருக்கு ஆசை ஏற்படுவதுண்டு. அதனால் தான் மண்ணை, பொன்னை, முலைப்பாலை நம் முன்னோர் இரப்போருக்குக் கரைத்துக் கொடுத்தனர். மாணிக்கவாசக சுவாமிகள், “யானையின் உடல் பெரியது. எனினும் அது பரஞானத்திற்குத் தகுதியற்றது. எனது அறிவுக்கு அறிவான மூலப்பொருளை என்னால் காண இயலவில்லை. அதனால் நான் இரண்டு கைகளை உடைய யானையைப் போன்றவன். இந்திரிய சுகம் என்னும் பெருந்துன்பத்தையே நான் அனுபவித்து வருகிறேன். சிவன் பேரானந்தத்தைத் தருகிறேன் என்று அழைத்தபோதும் நான் சிற்றின்பத்தை அனுபவிக்கவே விரும்புகிறேன்” என்கிறார். அமுதமான பால் இருக்கும்போது அதைக் குடியாது நஞ்சான மதுவைக் குடிப்பவர்கள் தான் அனேகர். சிலருக்கு எப்படி எடுத்துரைத்தாலும் புரியாது. துன்பங்கள் வந்து தாக்கும்போது “சிவனே சிவனே என்னைக் காப்பாற்று என்பர். துன்பம் முடிந்து இன்பம் வந்துவிட்டால் பின்பு துன்பந் தருபவற்றையே விரும்புவர். இது உலகத்தவரின் இயல்பு. நீ எல்லாப் பொறுப்புக்களையும் சிவனிடம் ஒப்படைத்துவிட்டு உனது தந்தையின் விருப்பப்படி நட. அதனால் உனக்கும் உனது குடும்பத்திற்கும் மகிழ்ச்சியும் கிடைக்கும். உனது பெருமையை நீ பாதுகாப்பது மேலானது. அது உனது தந்தைக்குக் கைம்மாறு கொடுப்பதற்கு ஒப்பானது” என்கிறார் கதிரேசன்.

**உண்டோர் ஒண்பொரு ளென்றுணர் வார்க்கெலாம்**

**பெண்டிர் ஆண்அலி யென்றறி யொண்கிலை**

**தொண்ட னேற்குள்ள வாவந்து தோன்றினாய்**

**கண்டுங் கண்டிலேன் என்னகண் மாயமே. 42**

"ஐயா, நான் உங்கள் மீது பக்தி கொண்டிருக்கக் காரணம் உங்களது ஒழுங்கான வாழ்க்கைமுறை தான். சிவனை நம்பி அவனைத் தொழுத பின் செயலாற்றும் எனக்கு எந்தவிதமான துன்பங்களும் வரச் சிவன் விடமாட்டான் என்று சொல்வீர்கள். அதை நானும் பின்பற்றி வாழ்கிறேன். அதனால் அப்பாவுடன் கதைக்கக்கூட எனக்கு விருப்பமில்லை. கடைசி காலத்தில் ஆன்ம ஈடேற்றத்துக்காகச் சிவனோடு கூடியிருக்க வேண்டும் என்பார்கள். அதன்படி நான் சிறு வயதிலிருந்து சிவனுடன் கூடியிருக்கிறேன். சிவன் இதுவரை எனக்கு எந்தத் துன்பத்தையும் தரவில்லை. தந்தையால் தான் நான் துன்பப்படுகிறேன். அவரது உறவைத் துண்டித்து விட்டால் அந்தத் துன்பமும் என்னைப் பாதிக்காது. அதைச் சொல்லத் தான் வந்தேன்" என்று கலங்கினான் மாதவராசா.

"மகனே, இறைவன் இருக்கிறான் என்று தமது அந்தக்கரணங்கள் மூலம் உணர்ந்து கொள்பவர்கள் இறைவனைப் பெண் என்றோ ஆணென்றோ, அலியென்றோ அறிந்து கொள்ள இயலாதவர்களாகவே இருக்கின்றனர். அத்துடன் உன்னை எனக்கு உள்ளவாறு காட்டியருளினாய். உன்னைக் கண்ட பின்பும் காணாதவனின் நிலையிலேயே நான் இருக்கிறேன். இது எனது மயக்கநிலை" என்கிறார் மாணிக்கவாசக சுவாமிகள். மக்களில் பலர் இவ்வாறான மயக்கநிலையில் தான் இருக்கின்றனர். ஒன்றை முழுமையாகப் பெற்ற பின்பு அது குறைவானது நிறைவில்லாதது. அது இன்னும் வேண்டும் என்றே பலரும் விரும்புகின்றனர். இது அறியாமையால் ஏற்படுவது. அறிவோ முதுமையோ இதற்கு உதவாது. அறிவானவனும் பெரும் தவறுகளை அஞ்சாது செய்கின்றான். முதியவனும் அவ்வாறு செய்கின்றான். அதற்குக் காரணம் ஆசை. ஆசை என்ற அவா பொறிகளைத் தூண்டி தன் இச்சையை நீதி நியாயமின்றித் தீர்க்க முயல்கிறது. உனது தகப்பனின் நிலையும் அதுதான். ஆசையின் விளைவால் வர்த்தக நிலையத்தை உன்னிடமிருந்து பெற நினைக்கிறார். இது ஐம்பொறிகளின் அவாவால் ஏற்பட்டது. அதை எதனாலும் மாற்ற முடியாது. அறிவும் அதனுடன் சேர்ந்து இயங்குவதால் தீமைகளைப்பற்றி மனம் சிந்திப்பதில்லை. இறைவனைப் பற்றியும் நினைப்பதில்லை. நீ எடுத்த முடிவு சரியானது. உறுதியானது. அதன்படி செய் இல்லாவிட்டால் உனது குடும்ப நிம்மதி பறந்துவிடும்" என்றார் கதிரேசன்.

**மேலை வானவ ரும்மறி யாததோர்**

**கோல மேயெனை ஆட்கொண்ட கூத்தனே**

**ஞால மேவிசும் பேயிவை வந்துபோம்**

**கால மேயுனை யென்றுகொல் காண்பதே.** **43**

"ஐயா, எனது மனைவியின் தந்தையான அம்பலவாணரை உங்களுக்குத் தெரியும். அவருக்கு எனது தந்தையின் வயது. வர்த்தகப் பொறுப்புக்களைப் பிள்ளைகளிடம் விட்டுவிட்டுத் தலயாத்திரைக்குப் பல சிவனடியார்களுடன் புறப்பட்டு விட்டார். அவர் புறப்படும்போது என்னை அழைத்துச் சொன்னார்; "மருமகனே, நான் சிவனை மெய்யன்போடு வணங்கியமையால் நல்ல பிள்ளைகளைப் பெற்றேன். அவர்கள் வசதியானவர்கள். சிவனோடு வாழ்கிறார்கள். அதுபோல எனது ஒரே ஒரு மகளுக்கும் ஒழுக்கம் மிக்க சிவபக்தனான நீங்கள் கணவனாகக் கிடைத்தீர்கள். இவையாவும் சிவனின் பேரருளால் வந்தவை. மாணிக்கவாசக சுவாமிகள், "மேலோராகிய தேவர்களினதும் காட்சிக்கு எட்டாத சிவபெருமான் என்னை ஆட்கொண்டான். பிரபஞ்சத்தின் தோற்றத்திற்கும், ஒடுக்கத்திற்கும் காரணமாக இருக்கும் கால சொரூபன் நீ உன்னை நான் எப்போது காணப்போகிறேன்" என்று கேட்கிறார். அதுதான் எனது நிலையும். என்னைச் சார்ந்தோரெல்லாம் ஒழுக்கமானவர்கள், நல்லவர்கள், சிவபக்தர்கள். அதனால் உங்களிடம் எல்லாப் பொறுப்புக்களையும் ஒப்படைத்துவிட்டு நான் தமிழ்நாட்டிற்குச் சென்று சிவத்தலங்களையெல்லாம் தரிசிக்கப் போகிறேன். உலக இன்பங்களை ஒழுக்கமாக அனுபவித்தவன் சிவனது திருவடிகளை அடைய வேண்டும். இப்போ அவனை அடையும் ஆசை மனதில் அளவுக்கதிகமாக எழுகிறது. அதனால் அவனை நான் எப்போ காண்பேன் என்று அவதிப்படுகிறேன். நீங்கள் எனது நிலையை உணர்ந்து வாழுங்கள். அருள்தாசன் உலக இன்பங்களைப் பெரிதாக எண்ணிச் செயற்படுபவன். அதனால் அவனுடன் முரண்படாதீர்கள். ஒத்துப்போகா-விட்டாலும் முரண்படாது மகிழ்வுடன் விலகுங்கள். எல்லாவற்றிற்கும் காரணமாக இருக்கும் அவன் எல்லாவற்றையும் கவனிப்பான். அவனது அருள் இல்லாவிட்டால் அவனையே நினைக்க முடியாது. அருள்தாசன் இன்னும் அந்தநிலையை அடையவில்லை. அதனால் சொல்வதைக் கேட்கும் நிலையில் அவன் இல்லை. பூரணமான, சிவபக்தனான நீங்கள் இவற்றை உணர்ந்து கொள்வீர்கள் என்பதால் சொல்கிறேன்" என்றவர். அவரது மனம் எதைச் சொல்கிறதோ அது தான் சரியென்ற எண்ணம் சிவனை நம்பாதவருக்குண்டு. அதனால் எனது மாமனாரின் சொல்லை வேதவாக்காக எடுத்துச் செயற்பட விரும்புகின்றேன்" என்றார் மாதவராசா.

"நல்லது மகனே, சிவனின் அருள் என்றும் உன்னைக் காக்கும்" என்றார் கதிரேசன்.

**காண லாம்பர மேகட் கிறந்ததோர்**

**வாணி லாப் பொரு ளேயிங்கொர் பார்ப்பெனப்**

**பாண னேன்படிற் றாக்கையை விட்டுனைப்**

**பூணு மாற்றி யேன் புலன் போற்றியே. 44**

அம்பலவாணனை நினைத்துப் பார்த்தான் மாதவராசா. அவரது மகள் சாந்தினியை அவன் காதலித்தான். சாந்தினிக்குத் திருமணம் பேசிவந்தபோது அவள் தான் என்னைக் காதலிப்பதாகக் கூறினாள். அப்படி அவள் கூறுவதற்குக் காரணம் அவர் சிவனை முழுமையாக நம்புபவர். அதனால் சிவனை அறியாது எதுவும் நடைபெறாது என்ற எண்ணத்துடன் அவர் என்னிடம் வந்து சொன்னார்; "நான் முழுமையான சிவபக்தன். சிவன் ஒருபோதும் எனக்குக் கெடுதல் செய்யமாட்டான். அதை முழுமையாக நம்புபவன் நான். சிவன் எனது மகளுக்கு நன்மையில்லாதவற்றைச் செய்யமாட்டான். அவனின் அருளால் அவள் உன்னைக் காதலிக்கிறாள். அவனது விருப்பத்தைத் தடைசெய்ய நான் யார்? சிவன் செயல் எப்படியோ அப்படி நடக்கட்டும்" என்றவர். அந்தளவில் அவர் சிவனின்மீது அன்பு கொண்டவர். அதன்பின் கதிரேசனைச் சந்தித்து இது விடயமாகக் கதைத்து முடிவெடுத்தவர். இதுவரை அவர் எல்லாம் சிவன் செயல் என்று நம்பி வாழ்ந்தவர். அதனாலோ என்னவோ அவர் மனம் வேதனைப்படும்படியாக எதுவும் இதுவரை நடைபெறவில்லை.

"மாதவா, என்ன யோசிக்கிறாய்?" என்று கேட்டார் கதிரேசன்.

"மாமாவை நினைத்தேன் அதனால் என்னால் எதையும் நினைக்க இயலவில்லை. அவர் சிவனின்மீது பேரன்பு பூண்ட மெய்யடியவர். அவர் கவலைப்பட்டதை நான் காணவில்லை. "சிவனடியான் அன்புள்ளம் கொண்டவன். அவன் கோபித்தால் சிவன் அவனைவிட்டுச் சென்று விடுவான். துன்பப்பட்டால் ஓடோடி வந்து உதவுவான்" என்பார். அது உண்மை. அதை அப்பா புரிந்து கொள்கிறாரில்லை. இப்போ அவருக்குச் சிவனின்மீது அன்பு அதிகமாகிவிட்டது. சுவாமியார் அவரைச் சிவப்பித்தன் என்பர். அது உண்மை. அவர் தமிழ்நாட்டுக்குப் புறப்படுமுன் தனது மகளை அழைத்து, "மகளே, பறவைக்குஞ்சு கூட்டைவிட்டுப் பறக்க முடியாதிருப்பதைப்போன்று நான் இந்தப்

பொய் உடலைவிட்டுச் சிவனுடன் சேரும் நிலையை அறியாதிருக்கிறேன். அதற்குக் காரணம் நான் ஐம்புலன்கள் மீதும் வைத்த அதிகளவு பற்றுத்தான். இந்த ஐம்புலன்களின் தொல்லைகளை அழிக்கவே நான் சிவத்தலங்களுக்குச் செல்கிறேன். அவனை ஊனக்கண்களால் காணமுடியாது. அதற்கு ஞானக்கண் வேண்டும். அதனைப் பெறவேண்டும். பெற்று அவனைக்காண வேண்டும். என் உயிர் பொருள் அனைத்தையும் தந்தவன் அவன். அதனால் எனக்கு அவற்றில் அக்கறை இல்லை. மாதவனைப் பேணிப் பாதுகாத்துக் கொள். அருள்தாசனை வெறுக்காதே" என்று கூறிவிட்டுப் புறப்பட்டவர்" கலங்கினான் மாதவராசா.

**போற்றி யென்றும் புரண்டும் புகழ்ந்தும்நின்று**

**ஆற்றன் மிக்கஅன் பாலழைக் கின்றிலேன்**

**ஏற்று வந்தெதிர் தாமரைத் தாளுறுங்**

**கூற்ற மன்னதொர் கொள்கையென் கொள்கையே. 45**

"மாதவா, அம்பலவாணர் பெரும் சிவபக்தர். எது நடந்தாலும் அது சிவனின் அருளென நினைப்பவர். ஒரு முறை குடித்துவிட்டு வந்த ஒருவன் அவரைக் கண்டுவிட்டு, அவர் தனது பகைவன் என நினைத்து அவரை ஒரு பொல்லால் கடுமையாகத் தாக்கிவிட்டான். அவர் வெலவெலத்துப் போனார். மக்கள் கூடிவிட்டனர். சிலர் அவனைத் தாக்கினர். அப்போது அவர் சொன்னார்; "அவனை எதுவும் செய்யாதீர்கள். சிவனுக்கு அரசனின் ஏவலாள் ஏன் அடித்தான். பகையாலா அடித்தான். அரசனின் உத்தரவுப்படி அடித்தான். சிவன் திருப்பி அடிக்கவில்லையே. அது போன்ற அடி தான் இது" என்றவர். மது மயக்கம் தீர்ந்ததும் அடித்தவன் அழுத அழுகையைச் சகிக்க முடியவில்லை. அவன் அன்றுடன் திருந்தி உனது தந்தையிடம் வேலை செய்தவன். அவர் சொல்வார்; "கதிரேசண்ணை, எனக்கு மார்க்கண்டேயரையும், கண்ணப்பனையும் தான் பிடிக்கும். மார்க்கண்டன் யமனுக்கும் அஞ்சாதவன். சிவன் ஒரு துன்பம் வந்தால் அது தனக்கு வந்த துன்பம் என்று நினைத்தவன் கண்ணப்பன். வாழ்ந்தால் அப்படி வாழ வேண்டும். மாணிக்கவாசக சுவாமிகள்; "இறைவா, உன்னை வாயால் வாழ்த்தியும், உடம்பால் அங்கப் பிரதட்சணம் பண்ணியும், பலவிதங்களில் புகழ்ந்துரைத்தும் மனதைப் பக்தியில் நிறுத்தியும் அந்த உறுதியான பக்தியின் வலிமையால் உன்னை நான் அழைக்கவும் இல்லை, வணங்கவும் இல்லை. மார்க்கண்டனைப் பிடிப்பதற்காக உன்னை மதியாது வந்த கூற்றுவன் உனது திருவடியை அடைந்தான். என்னுடைய போக்கும் அது தான்" என்று சொல்கிறார். அது தான் எனது நிலையும்" என்று சொல்கிறார். அந்தளவு உறுதியும், நம்பிக்கையும் அவரிடம் இருந்தது. அவர் மெய்யடியார். அவருக்கு உலகப் பற்றில்லை" என்றார் கதிரேசன்.

**கொள்ளுங் கில்லெனை யன்பரிற் கூய்ப்பணி**

**கள்ளும் வண்டும் அறாமலர்க் கொன்றையான்**

**நள்ளுங் கீழுளும் மேலுளும் யாவுளும்**

**எள்ளும் எண்ணெயும் போல்நின்ற எந்தையே. 46**

“மாதவா, ஒருவன் இறந்த பின்பும் வாழ்வது அவனது ஒழுக்கமான வாழ்வால் என்பதைப் பலரும் அறிவதில்லை. முக்கியமாக உனது தந்தை அதை அறியவில்லை. ஆனால் உனது மாமனார் அதை அறிந்து வைத்துள்ளார். அவர் மாணிக்கவாசக சுவாமிகளின் திருவாசகத்தைத் தனது வாழ்வின் குறிக்கோளாக ஏற்றவர். அதனால் அவர் உலகைப் புரிந்தவர். மாணிக்கவாசகரின் திருவாசக வரிகளையே அவர் எதற்கும் உதாரணமாகச் சொல்வார். அதனால் யாரையும் குறைசொல்லமாட்டார். அத்துடன் யாரையும் நம்பி அவர் வாழ்வதில்லை. அவர் தலயாத்திரை செல்லுமுன் என்னைச் சந்தித்துச் சொன்னார்; “இறைவனை நம்பிச் செல்கிறேன். அதுபோல என்னைச் சார்ந்தவர்களையும், அவனிடம் ஒப்படைத்துவிட்டுச் செல்கிறேன். அதனால் எது நடந்தாலும் அவன் காப்பாற்றுவான் என்ற திடமான மன நம்பிக்கை எப்போதும் மனதில் இருக்கும். மாணிக்கவாசக சுவாமிகள் சொல்கிறார்; “எள்ளில் எண்ணெய் இருப்பதுபோல என் தந்தை எல்லாப் பொருட்களிலும் நடுவிலும் மேலும் கீழும் எங்கும் வியாபித்திருக்கிறான். வண்டுகள் விரும்பித் தேனை உண்ணும் கொன்றை மலர்மாலையை அவன் அணிந்திருக்கின்றான். மெய்யன்பர்களைக் கூவி அழைத்து ஆட்கொள்ளும் அவன் ஆற்றல் இல்லாத என்னையும் வலியவந்து ஆட்கொள்வான்” என்கிறார். அந்த எண்ணம் எனது மனதிலும் உண்டு. அதனால்தான் நான் அவன் இருக்குமிடமெங்கும் தேடித்திரிந்து வணங்குகிறேன். இதைப் பலரும் உணர்வதில்லை. நான் சொல்லப்போனால் கேட்பவர்கள் விலகிச் செல்கின்றனர். எனக்குப் பித்துப்பிடித்துவிட்டது என்றும் சொல்வர். எனது தந்தையும் பித்தன்தானே. அதனால் எனக்குப் பித்துப் பிடித்தது அதிசயமல்ல” என்பார். அவரைப்போல வாழ என்னால் முடியவில்லை” என்றார் கதிரேசன்.

**எந்தை யாயெம் பிரான்மற்றும் யாவர்க்குந்**

**தந்தை தாய்தம் பிரான்தனக் கஃதிலான்**

**முந்தி யென்னுள் புகுந்தனன் யாவருஞ்**

**சிந்தை யாலும் அறிவருஞ் செல்வனே. 47**

“உனது மாமனார் அற்புதமானவர். முழுமையான சிவபக்தர். சைவசித்தாந்தக் கோட்பாடுகளை இறுக்கமாகக் கைக்கொள்பவர். தனது வீட்டுக்கு அடிக்கடி சிவனடியார்களை அழைத்து உணவு கொடுப்பவர். ஒருமுறை பறைமேளமடிக்கும் வரதன் ஆச்சிரமத்திற்கு வந்திருந்தான். அன்று பிரதோச விரதநாள். அதனால் பல சிவனடியார்களை அவர் அங்கு அழைத்திருந்தார். வரதனையும் அழைத்திருந்தார். உனது அம்மாவின் மூத்த சகோதரன் தடித்த சாதிமான். சாதியில் குறைந்தவர்கள் தான் வரும்போது தமது தோளில் சால்வையைப் போட்டிருந்தாலே வெகுண்டெழுபவன். சாப்பாட்டுக்கு வரதன் வந்தபோது அவனை அழைத்து வந்த உனது மாமன் அவருக்கருகில் வரதனை இருத்தினார். அதனால் பெருங்கோபங் கொண்ட உனது தாயாரின் சகோதரன் உனது தந்தைக்கும் வரதனுக்கும் அடித்துவிட்டார். உனது மாமன் பொறுமைசாலி. அவர் சொன்னார்; “ஈசன் எனக்குத் தாயும் தந்தையுமானவன். உயிர்கள் அனைத்திற்கும் தந்தையும் தாயும் தலைவனும் அவனே. அப்படியிருக்கச் சிவனடியானான வரதனின் தந்தையும் ஈசன்தானே. மனதால் மட்டுமல்ல வாக்காலும் அறிய முடியாத ஞான ஐஸ்வரியத்தை உடையவன் சிவன்” என்று மாணிக்கவாசக சுவாமிகள் கூறுகிறார். அதனால் எனக்கு நீயும் வரதனும் ஒன்று. இதை அறியாமல் அடித்த உன்னைச் சிவன் தண்டிப்பான்.” என்றவர். அதன்பின் அவர் உங்கள் உறவைத் துண்டித்து விட்டார். அதற்கு உனது தந்தை சொன்னார்; “எனக்குச் சிவனடியார்கள் தான் முக்கியம். உறவு இடையில் அறும். சிவத்தொடர்பு பிறவிகள் தோறும் தொடர்ந்து வரும். இன்று நீ மைத்துனன். இறந்து பிறந்தால் நீ யார்? சிலவேளை வரதன் எனது உறவினனாகலாம். ஏனென்றால் அவன் பெரும் சிவபக்தன். நல்ல பிறப்பெடுப்பான். நீ சிவத்துரோகி கேவலமான பிறப்புத்தான் உனக்குக் கிடைக்கும்” என்றவர். மற்றவர்களைப் போலச் சொல்வதொன்று செய்வதொன்றல்ல. சொல்லுத்தான் செயல். அப்படி ஒழுக்கமாக வாழ்ந்த ஒரு மெய்மையான சிவனடியார் அவர்” என்றார் கதிரேசன்.

**செல்வம் நல்குர வின்றிவிண் ணோர்புழுப்**
**புல்வரம் பின்றி யார்க்கும் அரும்பொருள்**
**எல்லை யில்கழல் கண்டும் பிரிந்தனன்**
**கல்வ கைமனத் தேன்பட்ட கட்டமே. 48**

“உனது மாமியாருக்கு அது பெரும் மனக்கவலையைக் கொடுத்தபோதும் உனது மாமனார் மீதுள்ள காதல் அவளது வாயை அடைத்தது. எல்லோரிலும் மிகுந்த அன்பை வைத்திருந்த அவர் உனது மாமியாரை அம்மையின் உருவமாகவே நினைத்து

அன்பு செலுத்தினார். உனது மாமியார் எப்போதென்டாலும் கவலைப்பட்டதுண்டா..? இல்லை, யாரையாவது குறைகூறியதுண்டா? தான் சொன்னது பிழையானது அல்லவென்று உனது மாமனாருக்குத் தெரியும். இருந்தும் அவர் தனது மனைவியை உயிராக நேசித்ததால் சொன்னார்; "அம்மா, செல்வர்க்கிடையிலும், வறியவர்-களுக்கிடையிலும், தேவர்களுக்கிடையிலும், புழுப்போன்ற அற்பமான உயிர்களுக்-கிடையிலும், புல்போன்ற தாவரங்களுக்கிடையிலும் சிவனின் அருள் குறைவின்றி நிறைந்திருக்கிறது. அது அகண்ட சொரூபியைக் காணப்பெற்றபின்பு அப்பெருநிலையில் இருந்து வழுவியவனாகிவிட்டேன். அதற்குக் காரணம் முற்றிலும் மனபரிபாகம் அடையாததே இதற்குக் காரணம்" என்று மாணிக்கவாசக சுவாமிகள் சொல்கிறார். அதைத்தான் நான் செய்தேன். அது பிழையாயின் என்னை மன்னித்துக்கொள். உனது சகோதரனுடன் உறவாடு" என்றவர்.

அதைக்கேட்டு உனது மாமியார் பதறிப்போனாள், "ஐயையோ, உங்களை அறியாதவளா நான், நான் அறியாதவளா நீங்கள். எந்தக் குற்றத்தையும் செய்யாத மேலான சிவனடியார். எனக்கு நீங்கள் தான் உலகம், சிவம் உறவினர், நண்பர் எல்லாம் இது என்னோடு கூடிவரும் உங்களுக்குத் தெரியாததா…?" என்று அழுதவள். உண்மையில் அவர்கள் இருவரும் சிவனும் உமையும் போன்ற தம்பதிகள். இல்லாவிட்டால் அவருடன் கூடச் செல்வாளா…?" என்று கேட்டார் கதிரேசன்.

**கட்டறுத்தெனை யாண்டுகண் ணாரநீறு**

**இட்ட அன்பரொ டியாவருங் காணவே**

**பட்டி மண்டபம் ஏற்றினை ஏற்றினை**

**எட்டி னோடிரண் டும் அறி யேனையே** **49**

கதிரேசனும் மாதவராசாவும் பேசிக் கொண்டிருந்தபோது மாதவராசாவின் மாமனான அம்பலவாணர் அங்கு வந்து சொன்னார்; "ஐயா, மாணிக்கவாசக சுவாமிகளின் திருவாசகத்தை ஓதி அவர் கூறிய நன்னெறிகளைப் பேணிச் சிவனடியார்களோடு கூட வாழ்கிறீர்கள். அவர் சொன்னதைத் திரும்பவும் நான் சொல்லத் தேவையில்லை. நான் தமிழ்நாட்டிலுள்ள திருத்தலங்களுக்குத் தங்களையும் அழைத்துச் செல்ல விரும்புகின்றேன். சிவன் நேற்றுஇரவு சித்தரின் வடிவில் கனவில் வந்து, "எனது பக்தனான கதிரேசனையும் அழைத்து வா" என்று சொன்னான். அதைச் சொல்லி அழைத்துப் போகவே" இப்போது வந்தேன்" என்றார்.

கதிரேசன் அதிர்ந்து போனார். அவருக்கு நெடுநாட்களாக அந்த எண்ணம் மனதில் இருந்து வருகிறது, “அண்ணை நினைத்துக் கொண்டிருந்தால் செயல் வடிவமெடுக்காது. செயலில் இறங்க வேண்டும். மாணிக்கவாசக சுவாமிகள் கூறுவதுபோல, “திருநீறு பூசிய மெய்யன்பர் கூட்டத்தில் இருக்க நான் தகுதியானவன் என்று அறிந்து நீ என்னை அடியவர்களுடன் சேர்த்துவைத்தாய்” என்கிறார். நீயும் அவர்களோடு சேரும் காலம் வந்தமையால்தான் அம்பலவாணனின் கனவில் தோன்றி உன்னையும் அழைத்து வருமாறு கூறியுள்ளார். நல்லைநாதனும் வெகுநாட்களாகச் செல்ல வேண்டும் என்று சொல்லிக் கொண்டிருக்கின்றான். இருவரும் செல்ல இது நல்ல சந்தர்ப்பம். நீங்கள் புறப்படத் தயாரானால் நானும் வருகிறேன்” என்றார் மகாலிங்கம்.

கதிரேசன் திகைத்துப் போனார். அம்பலவாணர் மீது பெரு நம்பிக்கை வைத்திருப்பவர் கதிரேசன். அதனால் அம்பலவாணரைப் பார்த்தார்; “பார்த்து நேரத்தைக் கழிக்காது உடனே புறப்படு. நான் தனியே சென்றால் சிவன் தனது விருப்பத்தைப் பூர்த்தி செய்யவில்லை என்று நினைப்பார். இது சிவனின் அருள்” என்றார் அம்பலவாணர்.

“சரி, நானும் வருகிறேன்” என்றார் கதிரேசன்.

**அறிவ னேயமு தேஅடி நாயினேன்**
**அறிவ னாகக் கொண்டோ எனை ஆண்டது**
**அறிவி லாமையன் றேகண்ட தாண்டநாள்**
**அறிவ னோவல்ல னோஅரு ளீசனே. 50**

“கதிரேசண்ணை, மாணிக்கவாசக சுவாமிகள்; “பேரறிவுச் சொரூபியே, அமிர்த சொரூபியே அற்பனாகிய என்னை ஒரு சிவனடியாராக்குதற்பொருட்டு நீ என்னை ஆட்கொண்டருளினாய். அறிவிலியாக இருக்கும் நான் உன்னால் ஆட்கொள்ளப்பட்ட பின்பு நான் ஞானியோ அல்லனோ என்று எனக்கு விளங்கவில்லை. எனது நிலையைத் தயவுசெய்து எனக்கு வெளிப்படுத்துவாயாக” என்கிறார். அதுபோலத்தான் அந்த எண்ணம் இல்லாதிருந்த உன்னை அவன் விரும்பி வரவைழைக்கிறான். சென்று உனது நிலையை அறிந்து கொள். சிவனின் அழைப்பு மிகவும் பெரியது. அர்த்தமுள்ளது. அதனால் அந்த வாய்ப்பைத் தவறவிட்டுவிடாதே. பொற்றாமரை வாவிக்கரையில் இருந்து சிவனைத் தொழுது கொண்டிருக்கும் சிவனடியார் கூட்டத்தோடு ஒரு சில நிமிடங்கள்

கூடியிருந்தாலும் அது சிவனோடு கூடியிருப்பதை ஒக்கும். திருப்பெருந்துறையில் கல்லாலமரநிழலில் வீற்றிருக்கும் சிவனைத் தரிசிப்பது பேரானந்தம்" என்றார் அம்பலவாணர்.

### 6. அநுபோககசுத்தி (அறுசீர் ஆசிரிய விருத்தம்)

**ஈசனேயென் எம்மானே யெந்தை பெருமான் என்பிறவி**

**நாசனே நான் யாதுமென் றல்லாப் பொல்லா நாயான**

**நீசனேனை ஆண்டாய்க்கு நினைக்க மாட்டேன் கண்டாயே**

**தேசனேஅம் பலவனே செய்வ தொன்றும் அறியேனே. 51**

கதிரேசன் மிகுந்த மகிழ்வோடு ஆச்சிரமத்திற்கு வந்து சிவனை வணங்கிவிட்டுச் சுவாமியாரைச் சந்தித்தார்; "சுவாமி, இவ்வளவு காலமும் உடல் உணர்வுகளில் மூழ்கியிருந்தேன். அதனால் எந்தப் பயனும் உண்டாகவில்லை. தமது தேவை கருதி என்னிடம் வருவோர் தமது தேவை முடிந்ததும் விலகிச் சென்று விடுகின்றனர். பின்பு ஏதாவது தேவை ஏற்பட்டால்தான் வருகின்றனர். இது உலகின் இயல்பு. இது போதும் என்று நினைக்கிறேன். அதனால் போலும் அம்பலவாணர் மூலம் தன்னைக் காண வருமாறு சிவன் அழைத்துள்ளான். மகாலிங்கமும் நல்லைநாதனும் மகிழ்வுடன் புறப்பட ஆயத்தமாகிக் கொண்டிருக்கின்றனர். தங்களை விட்டுவிட்டு நான் தனியே சென்றது கிடையாது. அதனால் தாங்களும் என்னுடன் கூட வந்தால் மகிழ்வேன்" என்றார்.

"கதிரேசு, சிவபோகத்தில் திளைத்திருந்தாலும் சிவனின் திருவிளையாடல்கள் நிகழ்த்தப்பட்ட திருத்தலங்களைத் தரிசித்து வணங்குவது பிறப்பையறுக்கும். மாணிக்கவாசக சுவாமிகள் திருப்பெருந்துறையில் திருச்சதகத்தை அருளியபோது, "ஈசனே, எம் தலைவா, பெருமை வாய்ந்த என் தந்தையே நீ என் பிறவிப் பிணியை அகற்றியுள்ளாய், சிற்றம்பலத்தில் ஒளிவீசும் பெரும் சுடரே. உணர்ச்சிமயமாகத் துன்பப்பட்டுக் கொண்டிருந்த என்னை நீ பரபோதமுடையவனாக்கினாய். இருப்பினும் உன்னைவிட்டு அகலும் தன்மையுள்ள மனதை என்ன செய்வதென்று எனக்குப் புரியவில்லை" என்கிறார். ஆத்மபோதம் அடையப் பெற்றவர்கள் தமக்குப் பிறப்பும் இறப்பும் இல்லை என்பதைச் சிவனின் அருளால் அறிந்து கொள்வர். அப்படியான நிலை சிவன் தனது திருவிளையாடல்களை நிகழ்த்திய திருத்தலங்களில்தான் உண்டாகும்.

நான் எனது இறுதிக்காலத்தை அங்குதான் கழிக்க விரும்புகிறேன். விரும்பினால் நீயும் வா" என்றார் சுந்தரமூர்த்தி சுவாமிகள்.

**செய்வ தறியாச் சிறுநாயேன் செம்பொற் பாத மலர்காணாப்**

**பொய்யார் பெறும்பே றத்தனையும் பெறுதற் குரியேன் பொய்யிலா**

**மெய்யர் வெறியார் மலர்ப்பாதம் மேவக் கண்டுங் கேட்டிருந்தும்**

**பொய்ய னேன்நான் உண்டுடுத்திங் கிருப்ப தானேன் போரேறே. 52**

"கதிரேசு, அக்ஞான இருளை அகற்றி மெய்ஞ்ஞானத்தை உண்டுபண்ணு-பவன் சிவன். அந்த அக்ஞான இருளை அகற்ற முயல்பவர்களே உண்மையான மெய்யடியார்கள். அவர்கள் தான் சிவனுக்கு விருப்புடையவர்கள். உடற்பற்றை ஒழிக்க முற்படுபவர்களே உண்மையாகச் சிவனை வழிபடுபவர்கள். இதற்கு ஒரு வீரமான போர்வீரனின் திடமான மனம் வேண்டும். முற்பிறப்பில் செய்த வினை உயிர்களைப் போகத்தில் ஈடுபடத் தூண்டுகிறது. அதை விலக்கிப் போகத்தில் ஈடுபடாதிருக்க கோவில்களின் தரிசனம் உதவும். அதனால்தான் அதை அறிந்தவர்கள் சிவத்தலங்களுக்குச் செல்கின்றனர். இதை இவ்வாறு மாணிக்கவாசக சுவாமிகள் சொல்கிறார்; "அக்ஞான இருளை முற்றாக அகற்றும் போர்வீரனாகிய சிவனே, அச்செயலை அறிந்து கொள்ளாத அறிவிலி நான். ஞானசொரூபியாகிய உன்னை வணங்காது அழியத்தக்க உடலைப் பேணிப்பாதுகாத்து அதிலிருந்து வரும் அற்பமான இன்பத்தை நாடிய நாய் போன்றவன் நான். பொய்யாகிய உடலின் மீதுள்ள பற்றை ஒழித்துவிட்டு மெய்ப்பொருளான உன்னை வணங்கும் சான்றோர்களைப் பார்த்தும், அவர்களின் பெருமைகளைக் கேட்டும், அவர்களைப் பின்பற்றி வாழாது உடலால் பெறும் இன்பத்தை விரும்புவதிலேயே ஈடுபட்டிருந்தேன். இது பெரும் இழிவைத்தரும் செயலல்லவா…?" என்கிறார். அவரைப்போல நாமும் இவற்றையெல்லாம் அறிந்தும், அவனைச் சென்று தரிசிக்காது இருப்பதும் இழி செயல்தான். வருடத்திற்குக் குறைந்தது ஒரு முறையாவது சென்று அப்போர்வீரனைத் தரிசித்திருக்கலாம்" என்றார் சுவாமியார்.

**போரேறேநின் பொன்னகர்வாய் நீபோந்தருளி இருள்நீக்கி**

**வாரே றிளமென் முலையாளோ டுடன்வந் தருள அருள்பெற்ற**

**சீரே றடியார் நின்பாதஞ் சேரக் கண்டுங் கண்கெட்ட ஊரே**

**றாயிங் குழல்வேனோ கொடியான் உயிர்தான் உலவாதே. 53**

“கதிரேசு, தெய்வத்திடம் ஒன்றைக் கோரும்போது மனிதனுடைய மனமும் செய்யும் செயலும் நேர்மையானதாக இருத்தல் வேண்டும். கோருபவன் தான் கோருபவைகளை இறைவன் செய்து வைப்பான் என்று முடிவெடுத்துக் கொண்டே கோர வேண்டும். அப்படியான முயற்சியாளருக்கு அப்பனும் அம்மையும் சேர்ந்து அருள்புரிவர். இதை உணர்பவர்கள் தான் உயர்வடைவார்கள். அதை மாணிக்கவாசக சுவாமிகள் இவ்வாறு சொல்கிறார்; “அக்ஞான இருளை அகற்றும் போரில் ஆண் சிங்கமான சிவனே அருள்புரிவதற்காகப் பரமார்த்திகப் பெருநிலையில் இருந்து பிரபஞ்சச் சிறுநிலைக்குத் தனது சக்தியான அம்மையோடு கீழிறங்கி வருகிறார். தவத்தால் பரிபக்குவநிலையை அடைந்த உனது அன்பர்கள் உன்னருளால் உன்னை வந்தடைவதைக் காண்கிறேன். ஆயினும் குருட்டு ஊர்ப்பன்றிபோல நான் கீழ்மையில் உழல்கிறேன். இப்படி இருப்பதைவிட இறப்பது மேலானதல்லவா..?” என்கிறார். இறைவன் தனது சக்தியான உமையுடன் பக்தர்களுக்கருளுவதற்காகத் தான் திருவிளையாடல்கள் புரிந்த தலங்களிலேயே வீற்றிருக்கிறான் என்ற உண்மையை மாணிக்கவாசக சுவாமிகள் இத்திருப்பாட்டின் மூலம் சொல்கிறார். இதைப் புரிந்து நாம் நடக்க வேண்டும்” என்றார் சுவாமிகள்.

**உலவாக் காலந் தவமெய்தி உறுப்பும் வெறுத்திங்**

**குனைக்காண்பான் பலமா முனிவர் நனிவாடாப் பாவி யேனைப்**

**பணிக்கொண்டாய் மலமாக் குரம்பை யிதுமாய்க்க மாட்டேன்**

**மணியே உனைக்காண்பான் அலவா சிற்கும் அன்பிலேன்**

**என்கொண்டெழுகேன் எம்மானே. 54**

“கதிரேசு, தேகத்தில் பற்று வைத்திருப்பது கீழானநிலை. அதைக் கடந்து சென்று மேலான நிலையை அடைதல் வேண்டும். இதை விளக்க மாணிக்கவாசக சுவாமிகள் இவ்வாறு கூறுகிறார்; “பெரும் பெரும் முனிவர்கள் உடல் உணர்வுகளை அகற்றிவிட்டு உன்னைத் தரிசிப்பதற்காகக் காத்திருந்தனர். கடுந்தவம் செய்தனர். ஆனால் நீ அவற்றில் எதையும் செய்யாத என்னை ஆட்கொண்டாய். நான் அழுக்கான உடலின்மீது நீங்காத பற்றைக் கொண்டவன். அருள்ச்சோதியே, உன்னைக் காண்பதற்கான தகுதியும் எனக்கில்லை. இறவைா, நான் உய்வடைவது எப்படி…?” என்று சிவனைக் கேட்கிறார். உடல் எப்பொழுதும் அழுக்கானது. அதைச் சுத்தஞ் செய்ய முடியாது என்பதைப் புரிந்து கொண்டமையால்தான் மாணிக்கவாசக சுவாமிகள்

இவ்வாறு கூறுகிறார். மனம் உடலைவிடப் பலமடங்கு அசுத்தமானது. அதை இறைநினைவாலும், ஒழுக்கமான வாழ்வாலும் தான் சுத்தப்படுத்த முடியும். மனம் சுத்தமடைந்தவன் இறைவனை அடைந்தவனாவான். மனச்சுத்தம் தவம் செய்வதாலோ அல்லது சிவனைப்பற்றி நினைப்பதாலொ, அவனைப் புகழ்ந்து பாடுவதாலோ வராது என்பதை உணர்த்தவே அவர் இவ்வாறு சொல்கிறார். உடலை நீக்கிய பின்புதான் உடல் சுத்தமாகும். மனதை நீக்கமுடியாது. அதை இறைவனிடம் கொடுத்தல் வேண்டும். அதுவும் சுத்தமாகக் கொடுத்தல் வேண்டும். அம்பலவாணருக்கு எந்த நினைவும் இல்லை. அதனால் அவர் எதையெதையோ கூறுகிறார். அதனால் அவரை விசரன் என்கின்றனர். எந்தவிதமான யோசனையும் இல்லாதவன் தான் விசரன். அவனுக்கு நன்மை, தீமை தெரியாது. பெறுமதி தெரியாது. உறவைப்பற்றித் தெரியாது. அதனால் தான் மாணிக்கவாசக சுவாமிகள் மன அழுக்கைப்பற்றிக் குறிப்பிடுகிறார்" என்றார் சுந்தரமூர்த்தி சுவாமிகள்.

**மானேர் நோக்கி உமையாள் பங்கா வந்திங் காட்கொண்ட**

**தேனே அமுதே கரும்பின் தெளிவே சிவனே தென்தில்லைக்**

**கோனே உன்தன் திருக்குறிப்புக் கூடு வார்நின் கழல்கூட**

**ஊனார் புழுக்கூ டிதுகாத்திங் கிருப்ப தானேன் உடையானே. 55**

"கதிரேசு, எதைப் பெருவிருப்புடன் விரும்புகின்றானோ அதற்கு அவன் அடிமையாகிவிடுகிறான். அதனால்தான் தீயவர்களும், குடிகாரர்களும் திருந்தமுடியாது தவிக்கின்றனர். மாறாக நல்லவற்றில் தனது சிந்தனையைச் செலுத்தினால் அவர்கள் தீயவற்றைச் செய்யமாட்டார்கள் என்று உபநிடதங்களும், கீதையும் சொல்கின்றன. அதனால் தான் மாணிக்கவாசக சுவாமிகள்; "மானின் விழிகளைப் போன்ற அழகிய விழிகளையுடைய அம்பிகையின் வலப்பாகத்தில் இருப்பவனே. சிதம்பரநாதா, நீ சகுனப் பிரமமாகத் தோன்றி உன்னடியார்களை மகிழ்விக்கிறாய். அடியவர்களுக்கு நீ அமிர்தமாகிறாய். உன்னை நினைந்து உருகுவதே எனது வாழ்க்கையின் குறிக்கோளாகும். அதனால்தான் உன் அடியவர்கள் உன்னை நினைந்து உன்னை வந்தடைந்தனர். உன்னால் ஆட்கொள்ளப்பட்ட நானோ உடலை நினைப்பதால் நிலவுலகில் வாழ்கிறேன். உன்னை அடைய முடியவில்லை" என்கிறார். மாணிக்கவாசக சுவாமிகளை ஆட்கொள்ளவென்று முனிவர்களுடன் கயிலாயத்தில் இருந்து வந்து அவரை ஆட்கொண்டபின் தன்னுடன் கூட வந்த முனிவர்களையும் அழைத்துக் கொண்டு கயிலாயத்திற்குச் சிவன் திரும்பியபோது மாணிக்கவாசக சுவாமிகளும் அவருடன்

செல்லப் புறப்பட்ட போது” உனக்குப் பூவுலகில் இன்னும் வேலை இருக்கிறது. அது நிறைவடைந்ததும் நான் உன்னை வந்து அழைத்துச் செல்வேன்” என்று கூறி விட்டுச் சென்றுவிட்டார். அதனால் தான் திருவாசகத்தில் ஒவ்வொரு பாட்டிலும் தன்னை அழைத்துச் செல்லும்படி மாணிக்கவாசக சுவாமிகள் இரக்கிறார்” என்றார் சுந்தரமூர்த்தி சுவாமிகள்.

**உடையா னேநின்றளையுள்கி உள்ளம் உருகும் பெருங்காதல்**

**உடையா ருடையாய் நின்பாதஞ் சேரக் கண்டிங் கூர்நாயிற்**

**கடையா னேன்நெஞ் சுருகாதேன் கல்லா மனந்தேன் கசியாதேன்**

**முடையா புழுக்கூ டிதுகாத்திங் கிருப்ப தாக் முடித்தாயே. 56**

சுவாமியாரும் கதிரேசனும் பேசிக் கொண்டிருக்கும் போது அம்பலவாணர் மிக்க மகிழ்ச்சியுடன் அங்கு வந்தார். “சுவாமியாரும் எம்முடன் வருவதாக அறிந்தேன். மிக்க மகிழ்ச்சி. நான் விரைவாகப் புறப்பட வேண்டும். எனது மகள் தனது மகளுக்கு இந்த வாரம் குழந்தை பிறக்குமாம். அதைக் கண்டு களித்துவிட்டுச் செல்லுங்கள். பிள்ளை பிறந்தால் துடக்கல்லவா” என்கிறாள். நான் எல்லாப் பற்றுக்களையும் அறுத்து விட்டேன். எனக்குச் சிவனைத் தவிர வேறு யாரும் இல்லை. மாணிக்கவாசக சுவாமிகள்; “உயிர்கள் அனைத்தும் இறவைா உனக்குச் சொந்தமானவை. இருப்பினும் பேரன்புடன் உன்னை நினைப்பவர்கள் தான் உன்னை வந்தடைகின்றனர். இவற்றையெல்லாம் நான் கண்டிருந்தும் எனது மனம் உருகவில்லை. எனக்கு விவேகம் வரவில்லை. உள்ளம் பக்குவம் அடையவில்லை. துர்நாற்றம் வீசும் உடலின்மீது அன்பு கொண்டு தெருநாய்க்கும் கீழ்ப்பட்டவனாக வாழ்கிறேன்” என்கிறார். இறைவனுக்குச் சொந்தமான நான் எப்படி பற்றுக்கள் நிறைந்த மனிதர்களுக்குச் சொந்தமாக முடியும். பற்றுக்களோடு வாழ்ந்தபோது அவர்கள் சொன்னால் அது சரி. இப்போ நான் சிவனின் சொத்து. என்னையாரும் உரிமை கொண்டாட முடியாது. உயிர்கள் யாவும் இறைவனின் உடைமை என்னும்போது அவன் அவைகளின் நன்மை தீமைகளைக் கவனிப்பான் தானே” என்றார்.

ஆச்சிரமத்தில் இருந்த ஒருவர் மற்றவருக்குச் சொன்னார்; “எல்லோரும் அம்பலவாணருக்கு விசர் என்றவை. அது உண்மை” என்று சொன்னான்.

சுவாமியார் சிரித்தார். அதைக் கண்ட மற்றவன் சொன்னான். “அம்பலவாணரின் கதையைக் கேட்டுச் சுவாமியாரும் சிரிக்கிறார். அப்போ அவருக்கு விசர் தான்” என்றான்.

“இறைவா, உன்னைப் புரிந்து கொள்ளவே முடியாது. ஒருபக்கத்தால் புரிய மறுபக்கத்தால் அதைக் குழப்புவாய்” என்றார் சுவாமியார்.

**முடித்த வாறும் என்றைக்கே தக்க தேமுன் னடியாரைப் பிடித்த**

**வாறுஞ் சோராமற் சோரா னேனிங் கொருத்திவாய் துடித்த வாறுங்**

**துகிலிறையே சோர்ந்த வாறும் முகங்குறுவேர் பொடித்த வாறு**

**மிவையுணர்ந்து கேடென்றனக்கே சூழ்ந்தேனே. 57**

“மாணிக்கவாசக சுவாமிகள்; “இறைவா, உன்னை வழிபட்டு உன்னை வந்தடையவே எமக்கு இவ்வுடலைக் கொடுத்தாய். அது பொருத்தமானது. அதன்பின் உன் அடியாரோடு நான் சேர்ந்திருந்ததும் பொருத்தமானது. நீ தந்த உடல் யோகத்திற்குரியது. அதைப் போகத்துக்குரியதாக நான் நினைத்தேனானால் அது பொருந்தாது. அது திருட்டுச் செயல்” என்கிறார். இளமையில் அதை நான் அறியாததால் தான் நீ தந்த உடலைப் போகத்துக்குரியதாக்கி விட்டேன். அதனால் மனைவி, மக்கள், உற்றார், உறவினர் என்று பற்றுப் பெருகிவிட்டது. அந்தப் பற்றின் உந்தலால் பெருமுயற்சி செய்து அவற்றையெல்லாம் நீக்கிவிட்டேன். இப்போது எனது உறவில் உள்ளது நீயும் எனது மனைவியும் தான். இப்போ நான் எனது மனைவியை எனது உறவென்று கொள்ளவில்லை. ஏனென்றால் எனது ஐந்து பிள்ளைகளும் சிவனின் அருளால் மேன்மையாக வசிக்கின்றனர். அவர்களுக்கு எதற்கும் எனது உதவி தேவையில்லை. அவர்கள் தமது தாயை நல்லமுறையில் கவனிப்பார்கள். அதைவிட அவளின் செலவுக்காக வங்கியில் போதியளவு பணம் சேர்த்து வைத்திருக்கிறேன். அவளையும் என்னுடன் அழைத்துச் செல்ல விரும்புகின்றேன். அவள் பாசிசவாத நோயாளி. அதனால் அவளால் பிரயாணம் செய்ய முடியாது. அதனால் அவளை விட்டுவிட்டுச் செல்லப் போகிறேன். இப்போ எனக்குள்ளது ஒரே ஒரு உறவு மட்டும்தான். அது சிவனின் உறவு. தற்போது இந்த உடலில் குடியிருக்கும் உயிரைப் படைத்தவன் சிவன். இவ் உயிர் இந்த உடலைவிட்டுச் சென்றாலும் அதனுடன் கூடச் செல்பவன் சிவன். இடையில் வந்த உறவுகள் இடையிலே அற்றுப் போகின்றன. நிரந்தர உறவு அவன் மட்டும்தான் அதனால் உயிர் உள்ளபோதே நான் எனது உறவுகளை அறுத்துவிட்டேன்” என்றார் அம்பலவாணர்.

**தேனைப் பாலைக் கன்னலின் தெளியை ஒளியைத்**

**தெளிந்தார்தம் ஊனை உருக்கும் உடையானை உம்ப ரானை**

**வம்பனேன் தானின் னடியேன் நீயென்னை ஆண்டா**

**யென்றால் அடியேற்குத் தானுஞ் சிரித்தே யரளலாந் தன்மை**

**யாமென் தன்மையே. 58**

"சுவாமியார் கதிரேசனுக்குச் சொன்னார்; "கதிரேசு, மனம் தெளிந்தவர்களுக்குப் பரமானந்தத்தை ஊட்டும் ஞானப் பிரகாசன் நீ. ஆனால் பக்குவமடையாத நான் உனக்கு அடிமையென்றும், நீ எனக்குத் தலைவன் என்றும், சொந்தம் பாராட்டினால் ஒரு புன்சிரிப்பின் மூலம் அதை மறுப்பாய் உனது அருளுக்குத் தகுதியற்றநான் அதற்குத் தகுதியுடையவன் என்று சொல்வது தகாது" என்று மாணிக்கவாசக சுவாமிகள் சொன்னதை நினைத்துப் பார்த்தேன். மெய் சிலிர்க்கிறது. மனம் தெளிந்தவர்களுக்கு பரமானந்தத்தை ஊட்டும் ஞானப்பிரகாசன் நீ. அவர்களுக்கு மேலான பொருளும் நீ என்பது அம்பலவாணரைப் பார்த்தபோது உனக்குப் புரியவில்லையா…? இறைவனது அருளுக்குத் தக்கவர் யார்? தகாதவர் யார் என்பது அவரவர் நிலை காட்டிக் கொடுக்கும். அம்பலவாணரின் நிலையைப் பார். அவர் விசரன் என்று கூறுவதும் சரி, ஞானி என்று சொல்வதும் சரி. எவ்வளவு ஆனந்தமாக இருக்கிறார். பூட்டப்பிள்ளையைக் காண்பது அபூர்வமானது. மிகுந்த பாசத்துடன் அவர் வாழ்ந்தது எமக்குத் தெரியும். ஒருமுறை அவரது பேர்த்தி பாடசாலை விளையாட்டுப் போட்டியில் களைப்பால் மயங்கியபோது அவர் ஆச்சிரமத்திற்கு வந்து பாசத்தால் துடிதுடித்ததை நாம் கண்டோம். அது முழுமையான பற்றுள்ள நிலை. இப்போ அதே பேர்த்திக்குக் குழந்தை பிறக்கப் போவதை அவர் உணரவில்லை. மகிழ்ச்சியடையவில்லை. இது தான் பற்றற்ற நிலையோ?" எனக்குப் புரியவில்லை என்றார் சுவாமியார்.

**தன்மை பிறரல லறியராத தலைவா பொல்லா நாயன**

**புன்மை யேனை ஆண்டையா புறமே போக விடுவாயோ**

**என்மை நோக்கு வார்யாரே என்நான் செய்கேன் எம்பெருமான்**

**பொன்னே திகழுந் திருமேனி எந்தா யெங்குப் புகுவேனே. 59**

"சுவாமி, ஈசனை நீங்கள் அறிந்தீர்களா…? கதிரேசண்ணா நீ அறிந்தாயா…? யாராவது அறிந்தீர்களா..? யாரும் அறியமாட்டார்கள். அவனை அறியமுயடிாது. அப்படியிருக்க அவனை முழுமையாக அறிந்தவர் யார்? மாணிக்கவாசக சுவாமிகள்; "இறைவா உனது இயல்பு முழுவதையும் நீயே அறிவாய். உனது அடியார்கள் உட்பட வேறு யாரும் உன்னை அடையமாட்டார்கள். அப்படியிருக்கும்போது தகுதியற்ற என்னை ஆட்கொண்டு உனது அடியவனாக்கினாய். இனி நீ கைவிட்டால் எனக்குப் புகலிடமில்லை. பொன்போன்ற மேனியை உடையவனே, நீதான் என்னைக் காத்தருள வேண்டும்" என்கிறார். மெய்யடியார்கள் இறைவனை மெய்யன்போடு வணங்கினாலும் அவனை அறிந்து கொள்ள மாட்டார்கள். மெய்யடியார்போல வேடமிட்டு நடிப்போர் தமது வேடப் பொலிவால் உன்னை முழுமையாகத் தாம் அறிந்ததாக மேடைகளில் பிதற்றித் தமது வயிற்றை நிரப்புகிறார்கள். இதைப் புரியாதவர்கள் நம்புவார். புரிந்தவர்கள் நம்புவார்களா…? உன்னை நான் அறியவில்லை. ஆனால் என்னை நீ அறிந்துள்ளாய். அதனால் தான் எனக்கும் எனது குடும்பத்தினருக்கும் நன்மை செய்துள்ளாய். அவர்கள் மேம்பட்டிருப்பது உனதருளால்தான். அதனால்தான் அவர்கள் மீதிருந்த பற்றுக்களை உன்மீது வைத்துவிட்டேன். அதனால் இனி நான் உனது பொறுப்பில் வாழ்ந்து உன்னை அடையவே விரும்புகிறேன்" என்றார் அம்பலவாணர்.

**புகுவே னெனதே நின்பாதம் போற்றும் அடியா ருள்நின்று**

**நகுவேன் பண்டு தோணோக்கி நாண மில்லா நாயினேன்**

**நெடுமன் பில்லை நினைக்காண நீயாண்டருள் அடியேனுந்**

**தகுவ னேயென் தன்மையே எந்தாய் அந்தோ தரியேனே. 60**

அம்பலவாணர் முதலில் திருவாசகத்தை நினைத்துப் பார்த்தார். பின் திருச்சதகத்தில் உள்ள "புகுவேன் நின்பாதம்" என்ற பாடலை ஆச்சிரமத்திலுள்ள சிவனுக்கு அருகில் சென்று பாடினார். சிவனின் பாதங்களில் ஏராளமான பூக்கள் கொட்டிக் கிடந்தன. அழகிய மாலைகள் பல சூடப்பட்டிருந்தன. மீண்டும் அந்தத் திருவாசகத்தைப் பாடினார். அம்பலவாணர் வந்தால் அத்திருப்பதிகத்தை விரும்பிப் பாடுவார். அது சுந்தரமூர்த்தி சுவாமிகளுக்கும், கதிரேசனுக்கும் தெரியும். சில பாடல்களை அவர்களும் விரும்பிப் பாடுவதுண்டு. அதனால் அவர்கள் அதனைப் பெரி தாக எடுப்பதில்லை. அப்பாடலில் மாணிக்கவாசக சுவாமிகள் சொன்ன கருத்தை நினைத்துப் பார்த்தார். "இறைவா வெட்கங்கெட்ட நான் முன்பு உன் அடியார் திருக்கூட்டத்தில் இருந்து கொண்டு எனது தோளின் வலிமையையும், எனது மேனி

அழகையும் பார்த்து இறுமாந்திருந்தேன். அப்போது உனது சொரூபத்தைக் கண்டு பரவசமடைவதற்கான பேரன்பு என்னிடம் இருக்கவில்லை. இந்நிலையில் நீ என்னை ஆள, உனக்கு அடிமையாக இருக்க நான் தகுந்தவனா என்று சிறிதும் எண்ணவில்லை. என் தந்தையே எனது இயல்பு இப்படியும் சிறுமையுறுமா…? இக் கீழ்நிலையை நான் சகிக்க மாட்டேன். எனக்கு சொந்தமாகிய உனது திருவடியை நான் அடைய வேண்டும்" என்கிறார். நான் திருமணமான புதிதில் ஆச்சிரமத்திற்கு வந்து சிவனடியார்களுடன் சேர்ந்து திருவாசகம் படிப்பேன். எனது தந்தை தனவந்தர். நான் பலமுள்ள அழகன். அதைவிட நல்ல தொழிலிலும் இருந்தேன். அப்போது ஆச்சிரமத்திற்கு வரும் சிவபக்தையான சுவர்ணாவின் அழகு என்னை மெய்மறக்கச் செய்தது. அவள் தினமும் ஆச்சிரமத்திற்கு வந்து தொண்டு செய்பவள். அவளை நான் பார்த்து ரசித்து மகிழ்வது அவளுக்குத் தெரிந்தபோது அவள் சொன்னாள்; "அம்பலவாணா, நீ ஒரு சிவபக்தன். நானும் ஒரு சிவபக்தை. உனது அழகு என்னை மிகமிகக் கவர்ந்தது. ஆனால் நீ திருமணமானவன் என்பதைத் தெரிந்ததும் உன்னைப் பார்க்க அருவருப்பாக உள்ளது. சிவபக்தையான நான் உன்னை நாயைவிடக் கேலவமாகக் கருதுகிறேன்" என்றவள். இருப்பினும் அவளது அழகு என்னைத் துன்புறுத்தியது. அப்படியவனான என்னை உன் அடியவனாக ஏற்றுக் கொண்டாய். அதற்கு நான் தகுந்தவன் அல்ல என்று தெரிந்தும் கருணை உள்ளம் படைத்த நீ என்னை உன் அடிமையாக ஏற்று அருள்புரிந்தாய். அதை நினைத்தால் அவமானமாகவும், வேதனையாகவும் உள்ளது. இத்தகைய சிறுமைக்குணம் படைத்த என்னை ஏற்றருள்" என்று அழுதார் அம்பலவாணர்.

### 7. காருண்யத்திரங்கல் (அறுசீர் ஆசிரிய விருத்தம்)

"பிரபஞ்சம் எங்கும் இருக்கும் உயிர்கள் தாம் இருக்கும் நிலையில் இருந்து மேல்நிலைக்குப் போக இறைவன் வழிவகுத்து வைத்துள்ளான். இதற்குத் தூண்டுகோலாக அமைவது துன்பங்களாகும். இது சிவனின் இரக்கம்மிக்க காருண்யம். அதைப் புரிந்து கொண்டவர்கள் இறைவன்மீது மாறாத அன்பு வைத்து அவனை அடைய முயற்சிக்கின்றனர். அக்கோட்பாட்டை மாணிக்கவாசக சுவாமிகள் விரிவாக எடுத்துரைக்கிறார். உயிருக்கு வரும் இன்பங்கள் பொதுவாகத் துன்பங்களுடனேயே வருகின்றன. சில சமயம் இன்பத்திற்கு முன்பு வரலாம். இல்லாவிட்டால் பின்பு வரலாம். இது இயல்பு. அதை இறைவனது கருணையால் அகற்றுபவன்தான் முத்தியடைகிறான்.

**தரிக்கிலேன் காய வாழ்க்கை சங்கரா போற்றி வான**

**விருத்தனே போற்றி எங்கள் விடலையே போற்றி ஒப்பில்**

**ஒருத்தனே போற்றி உம்பர் தம்பிரான் போற்றி தில்லை**

**நிருத்தேனே போற்றி எங்கள் நின்மலா போற்றி போற்றி. 61**

அம்பலவாணர் வந்து சுவாமியாருக்குச் சொன்னார்; "சுவாமி, எனது இளமைக்காலம் துன்பமானது. எனது தாயார் எனக்கு எட்டுவயதாக இருக்கும்போது தற்கொலை செய்துவிட்டார். எனக்குக் கீழ் இரண்டு தம்பிகள். எனது தந்தை மறுமணம் செய்தார். அதனால் பட்ட துன்பங்கள் கணக்கில் அடங்காதவை. போதும், போதுமெனத் துன்பத்தை அனுபவித்தேன். திருமணமான பின்பு மகிழ்ச்சியாக வாழவில்லை. எனக்குப் பிறந்த இரண்டு பிள்ளைகள் இறந்தே பிறந்தன. பின்பு தொழிலில் போட்டிகள் காரணமாகத் துன்பப்பட்டேன். இப்போ நானும் எனது பிள்ளைகளும் வசதியாக இருக்கிறோம். ஆனால் அதனால் பயனில்லை. சலரோகம் பத்து வருடங்களாக வாட்டுகிறது. இருதயநோயும் இருக்கு. முதுமை பெருந்துன்பப்படுகிறது. விரும்பிய உணவுகளை இளமையில் வறுமை காரணமாக உண்ண முடியவில்லை. எல்லா வழிகளாலும் துன்பம்தான். துன்பத்தைப் போக்கத்தான் சிவனை வணங்கி வருகின்றேன். இறப்பதற்கு முன் சிவன் கோவில் கொண்டிருக்கும் தலங்களைத் தரிசித்தல் வேண்டும். பிறப்பே இல்லாதபடி அவனை வேண்ட வேண்டும். மாணிக்கவாசக சுவாமிகள் கூறுவதுபோன்று; "இந்த உடல் வாழ்க்கை எனக்கு வேண்டாம். சங்கரா பழமையும், புதுமையும் ஒன்றாக வாய்க்கப்பட்டவனே, முழுமுதற் பொருளே, உன்னையே வணங்குகின்றேன். என்னை உன்னோடு சேர்த்துக் கொள்" என்று தான் வணங்குகிறேன். தமிழ்நாட்டில் உள்ள ஒரு சிவத்தலத்தில் இறந்தால் நான் பெருமகிழ்வடைவேன்" என்று கூறித் தனது கண்களை முடினார் அம்பலவாணர். அவரது விழிகள் கலங்கி நீர் வழிந்தது.

**போற்றியோ நமச்சி வாய புயங்களே மயங்கு கின்றென்**

**போற்றியோ நமச்சி சாய புகலிடம் பிறிதொன் றில்லை**

**போற்றியோ நமச்சி வாய புறமெனப் போக்கில் கண்டாய்**

**போற்றியோ நமச்சி வாய சயசய போற்றி. 62**

"உண்மைதான் சுவாமியார். இளமையில் சிவனை வணங்குவதற்கிருந்த உற்சாகம் இப்போது இல்லை. குனியமுடியவில்லை, நிமிர முடியவில்லை. அட்டாங்க நமஸ்காரம் செய்ய முடிவதில்லை. தோப்புக்கரணம் போட முடியவில்லை. இவை யாவும் அம்பலவாணர் கூறுவதுபோலத் துன்பம் தானே. அதனால் நானும் மாணிக்கவாசக சுவாமிகள் சொல்வதுபோல, "ஓம் நமசிவாய என்ற மந்திரமயமானவனே, பாம்பை அணிந்திருப்பவனே, உலக வாழ்க்கையில் மயங்கி அதனால்பட்ட துன்பங்கள் போதும். அதிலிருந்து என்னை உன்னைத்தவிர வேறு எவராலும் காப்பாற்ற முடியாது. என்னை உன்னோடு சேர்த்துக்கொள்" என்று தான் வணங்குகின்றேன். எனது மனைவி அன்பானவள். எனது மீது உயிரை வைத்திருப்பவள். இப்போ அவளுக்கு என்னை யாரென்று தெரியாத நிலை. தனித்து இயங்க மாட்டாள். அவள் படும் துன்பத்தை என்னால் சகிக்க முடியவில்லை. வாழ்க்கை துன்பமானது. அதைவிடப் பலமடங்கு துன்பமானது முதுமை. நினைவுகளோடு கை, கால்களும் இயங்கும்போது அவனை அடைந்துவிடல் வேண்டும் என்று தீவிரமாக அவனை வேண்டுகிறேன். இந்த நிலையில் அவன் என்னைத் தான் வாழும் நாட்டிற்கு அழைத்துள்ளான். அது பெரும் மகிழ்ச்சியைத் தருகிறது" என்றார் கதிரேசன்.

**போற்றியென் போலும் பொய்யர் தம்மைஆட் கொள்ளும்**

**வள்ளல் போற்றிநின் பாதம் போற்றி நாதனே போற்றி போற்றி**

**போற்றி நின் கருணை வெள்ளம் புதுமதுப் புவனம் நீர்தீக்**

**காற்றிய மானன் வானம் இருசுடர்க் கடவுளானே. 63**

"இது தான் வாழ்க்கை. இதைத்தான் மனிதர்கள் எல்லோரும் விரும்புகின்றனர். இவற்றை அகற்ற வேண்டும் என்று எம்போன்ற சிலரே விரும்புகின்றனர். நேற்று ஓர் அடியார் வந்தார். அவருக்கு எண்பது வயது. புற்றுநோய் அவரைத் தாக்கிவிட்டது. இருப்பினும் நோயால் உண்டாகும் துன்பத்தை அவர் பெரிதாகப் பொருட்படுத்தாது தனது பூட்டிக்கு வயது பதினைந்து. அவள் திருமணமாகி ஒரு குழந்தையைப் பெறும்வரை தான் இறக்கக்கூடாது என்று சிவனை நாள்தோறும் வணங்குகிறாராம். ஆனால் வசதிகளும், திடமான உடலிருந்தும் அம்பலவாணர் முதுமையால் வரும் துன்பங்கள் தன்னைத் தாக்குமுன் சிவனே என்னை உன்னோடு சேர்த்துவிடு என்கிறார். அவர் மாணிக்கவாசக சுவாமிகள் மீது கொண்ட அதீத பற்றின் காரணமாக அவர் சொன்னதையே சொல்லிச் சிவனை வணங்குகிறார்; "இறைவா,

பொய்யான இந்த உடலில் பெருவிருப்புக் கொண்டு அதைப் பேணிக்காத்துவரும் என்போன்றவர்களுக்கும் அருள் புரிவதால் நீ வள்ளலாகிறாய். உனது கருணை புதிய தேனைப் போன்றது. ஐம்புலன்களாகவும், சூரியனாகவும், சந்திரனாகவும், சீவனாகவும் நீ இருக்கிறாய். இவற்றிற்குத் தலைவன் நீ என்பதால், உன்னை அட்டமூர்த்தி என்பர். இப்படிக் காட்சிதரும் உன்னை நான் போற்றிப் புகழ்ந்து வணங்குகிறேன். எனது பிறவிப்பிணியை அகற்று" என்று வணங்குகிறார். சாகும் நிலையில் உள்ள பற்றுள்ளவனுக்குச் சாகவிருப்பமில்லை. அவன் தனது ஆயுளை நீடிக்கும்படி பிரார்த்திக்கிறான். வசதியுள்ள இளமையானவன் அவனைச் சென்றடைய விரும்புகின்றான். அப்படியான அதிசயம் நிறைந்தது மனிதவாழ்வு" என்றார் சுந்தரமூர்த்தி சுவாமிகள்.

**கடவுளே போற்றி யென்னைக் கண்டுகொண் டருளு போற்றி**
**விடவுளே உருக்கி யென்னை ஆண்டிட வேண்டும் போற்றி**
**உடலிது களைந்திட் டொல்லை உம்பர்தந் தருளு போற்றி**
**சடையுளே கங்கை வைத்த சங்கரா போற்றி போற்றி. 64**

"சுவாமி, அம்பலவாணர் தமிழ்நாட்டிலுள்ள சிவன்கோவில்களுக்கு வருமாறு அழைத்த பின்பு எனக்கு உலக வாழ்க்கை வெறுத்துவிட்டது. சிவன் என்மீதுள்ள அன்பின் காரணமாகத்தான் என்னை அழைக்கிறான் என்ற நினைவு மனதில் எழுந்து விட்டது. அதனால் இதுவரை காலமும் அவனை வணங்க வேண்டும் என்ற நினைப்பு இப்போ அவனை அடைய வேண்டும் என்று மாறிவிட்டது. அதனால் இப்போ அவன் என்னை அழைத்தாலும் சென்று விடுவேன். அவ்வளவு அவசரம் எனக்கு. மாணிக்கவாசக சுவாமிகள் சிவனோடு சேர ஆவற்படுகிறார், அவதிப்படுகிறார். அவர், "நான் தகுதியில்லாதவன் என்று உனக்குத் தெரியும். அதனால் என்னை ஆட்கொள். எனது உள்ளத்தை உருக்கி உயிரை விலக்கிவிடு. உடலை ஒதுக்கிவிட்டு நான் விரைவில் உன்னை வந்தடையும்படி செய். கங்காதரா உன்னை நான் மீண்டும் மீண்டும் போற்றி இரக்கிறேன்" என்கிறார். அந்நிலையில்தான் நானும் இருக்கிறேன். இந்தப் பொய்யான உடலை நீக்கி விட்டுச் சிவனை அடைய வேண்டும். இந்த எண்ணத்தை எனக்கு ஊட்டியவா அம்பலவாணர். அதனால் அவரை நான் போற்றி வணங்குகிறேன்" என்றார் கதிரேசன்.

**சங்கரா போற்றி மற்றோர் சரணிலேன் போற்றி கோலப்**

**பொங்கரா அல்குற் செவ்வாய் வெண்ணைக் கரிய வாட்கண்**

**மங்கையோர் பங்க போற்றி மால்விடை யூர்தி போற்றி**

**இங்கிவ்வாழ் வாற்ற கில்லேன் எம்பிரான் இழித்திட்டேனே. 65**

"அம்பலவாணர் தனது பேர்த்தி, மனைவி, மக்கள் பற்றிச் சொன்னபின்பு எனக்கு அவர் சொன்னது சரியாகத் தெரிகிறது. இளமையில் எவ்வளவு ஆர்வத்துடன் பிள்ளைகளைப் பெற்று வளர்த்தேன். அவர்கள் மீது மட்டற்ற பற்றுக்களை வைத்திருந்தேன். ஆனால் அவர்கள் தமது நலனைத்தானே விரும்புகின்றனர். தாயார் எழுந்து நடக்கமாட்டாள். அவளைக் கவனிக்க ஒரு ஆளைச் சம்பளத்திற்கு வைத்துள்ளேன். அந்தப்பெண் அயலூரில் வசிக்கும் தனது மகள் பிள்ளைகளைப் பெற்றமையால் பேர்த்தியைப் பார்த்துவிட்டு வரச் சென்றாள். இரண்டு நாட்களில் திரும்பி வருகிறேன் என்றவள் இரண்டு வாரமாகியும் வரவில்லை. அதனால் நான்பட்ட துன்பத்திற்கு அளவேயில்லை. இப்போதுதான் முதுமையின் கொடுமை தெரிகிறது. பிள்ளைகள் எம்மைப் பராமரிப்பார்கள் என்ற நினைவுடன் தானே பெற்றோர் அவர்களை அன்பாக வளர்க்கின்றனர். பாசம் பற்று யாவும் இப்போ இல்லை. பணம் இருந்தும், பொருள் இருந்தும், சாப்பாட்டுக்கு இருவரும் பெரும் சிரமப்பட்டோம். இதை அறிந்த மடத்தில் சமைப்பவன் தனது மனைவியை அனுப்பினான். இல்லாவிட்டால் நான் பெரும் துன்பப்பட்டிருப்பேன். மூத்தமகன் தொழில்விடயமாக அமெரிக்காவுக்குச் சென்றுவிட்டானாம். மகள் புரிசனின் தாய்க்குச் சுகமில்லையாம். இதெல்லாவற்றையும் அனுபவிக்க வேண்டும் என்று எனது தலையில் எழுதி இருக்கிறது. மாணிக்கவாசக சுவாமிகள் சொல்வது போல, "சங்கரா, உமாதேவியாரின் மணாளா, ரிஷபவாகனா, உன்னைத் தவிர வேறு யாரின் உதவிகளும் எனக்கில்லை. அதனால் நீ தான் எனக்கு அடைக்கலம் தருதல் வேண்டும். உடல்வாழ்க்கையில் வெறுப்பும் அருவருப்பும் ஏற்பட்டுவிட்டது. இதை என்னால் சகித்துக்கொள்ள முடியவில்லை. என்னைக் காத்துக் கொள்" என்று தினமும் இரக்கிறேன். இதைத்தவிர என்னால் என்ன செய்ய முடியும்?" என்றார் கதிரேசன்.

**இழித்தனன் என்னை யானே எம்பிரான் போற்றி போற்றி**

**பழித்தனன் உன்னை என்னை ஆளுடைப் பாதம் போற்றி**

**பிழைத்தவை பொறுக்கை எல்லாம் பெரியவர் கடமை போற்றி**

**ஒழித்திடில் வாழ்வு போற்றி உம்பர்நாட டெம்பி ரானே 66**

“சுவாமி, ஆற அமர இருந்து யோசித்துப் பார்த்தால் மாணிக்கவாசக சுவாமிகள் சொல்வது உண்மையென்று புரிகிறது. அவர்; “என்னை வேறு யாரும் கெடுக்கவில்லை. என்னை நானே கெடுத்துக் கொண்டேன். அதனால் என்னால் உன்னையொ, பிறரையோ குறைகூற முடியாதுள்ளது. என்னை என்றும் ஆள்பவனான உன்னை வணங்குகிறேன். சிறியேனாகிய நான் செய்த பிழையை பெரியோனாகிய நீ பொறுத்தருளல் வேண்டும். முத்தியைக் கொடுத்தருளும் இறைவா, இப் பிரபஞ்ச வாழ்வில் இருந்து என்னை விடுவிப்பாயாக. அப்படி விடுவித்தால் உன்னை நான் மறக்காது போற்றிப் புகழ்ந்து வணங்குவேன்” என்கிறார். அவர் கூறுவது போல நான் இவ்வளவு காலமும் அவரைப் போற்றிப் புகழ்ந்து வணங்கினேன். என்னைப்பற்றி நினைக்காது, என் துன்பத்தைப் போக்கு என்று கேளாது ஊரவரின் துன்பங்களைப் போக்கியருள் என்றே வணங்கினேன். இப்போ பல்வேறு துன்பங்களைத் தரும் பிறவிப்பிணியை அகற்று. என்னை உன்னோடு சேர் என்று இரக்கிறேன்” என்றார் கதிரேசன்.

**எம்பிரான் போற்றி வானத் தவரவர் ஏறு போற்றி**

**கொம்பரார் மருங்குல் மங்கை கூறவெண் ணீற போற்றி**

**செம்பிரான் போற்றி தில்லைத் திருச்சிற்றம் பலவ போற்றி**

**உம்பரா போற்றி என்னை ஆளுடை ஒருவ போற்றி 67**

“கதிரேசு, இரண்டு நாட்களுக்கு முன் இருந்த நிலையில் நீ இல்லை. அம்பலவாணர் தமிழநாட்டில் உள்ள சிவத்தலங்களுக்கு உன்னையும் சிவன் அழைத்து வரும்படி கூறியபின் உனது போக்கு முற்றாக மாறிவிட்டது. இறைபக்தி மேலிட மேலிட ஏனைய பற்றுக்கள் அற்று விடும். முன்பு உனது மனைவியையும் பிள்ளைகளையும் நேசித்த நீ இப்போ அவர்களை வெறுக்கிறாய். இதற்குக் காரணம் சிவனின் அருள் உன் மீது அதிகரித்தமையே. சிவனில் பற்றேற்பட்டால் உலக விடயங்களில் உள்ள பற்றுப் படிப்படியாக அகன்றுவிடும். அதனால் தான் மாணிக்கவாசக சுவாமிகள தன்னை ஆட்கொள்ளும்படி கேட்கிறார். “இறைவா உன்னை அல்லாது எனக்குக் கதியில்லை. என்னைக் காத்தருள் என்று வேண்டுகிறார். ஒரு மனிதனின் இறுதிநிலை அது தான் உடலில் வலு உள்ளவரை இறைவனைப் பற்றி அக்கறை கொள்ளாத மனிதர்கள் தாங்கமுடியாத துயரங்கள் வந்ததும் பற்றுக்களையெல்லாம் விட்டு விட்டு இறைவனைச் சரணாகதியடைகின்றனர். சிலர் உணர்ந்து சரணடைகின்றனர். இவர்கள் என்றும் சிவ நினைவுடன் இருப்பர். துன்பங்களுக்காச் சரணடைவோர் துன்பம் அகன்றதும் மீண்டும்

செருக்குற்றுத் தனது பலத்தால் அல்லது பணத்தால் தான் துன்பங்கள் நீங்கின என்று நினைப்பர். மீண்டும் துயரம் வந்தால் மீண்டும் இறைவனைச் சரணடைவர். இந்நிலை மாறினால் தான் மனிதன் மேன்மை அடைய முடியும்?" என்றார் சுந்தரமூர்த்தி சுவாமிகள்.

**ஒருவனே போற்றி ஒப்பில் அப்பனே போற்றி வானோர்**
**குருவனே போற்றி எங்கள் கோமளக் கொழுந்து போற்றி**
**வருகவென் றென்னை நின்பால் வாங்கிட வேண்டும் போற்றி**
**தருகநின் பாதம் போற்றி தமியனேன் தனிமை தீர்த்தே. 68**

கதிரேசனும் சுவாமியாரும் அம்பலவாணரும் வேறும் பல அடியார்களும் தமிழ்நாட்டில் உள்ள சிவத்தலத்திற்குச் செல்லப் போகிறார்கள் என்பதை அறிந்த ஊரவர் பலர் ஆச்சிரமத்திற்கு வந்து அவர்களை வணங்கினர்.

"சிவனடியார்களே, சிவன் பலவாகத் தோன்றுகின்ற போதும் அவன் ஒருவன் தான் என்று உணர்பவனே சிவனை உணர்ந்து கொள்பவனாவான். உயிர்கள் அனைத்திற்கும் தலைவனாகவும், தந்தையாகவும் இருக்கின்ற சிவன் தேவர்களுக்கு எல்லாம் மூத்தவன். அத்துடன் உயிர்களின் உள்ளத்தில் என்றும் மகிழ்வுடனும் இளமையுடனும் அவன் இருக்கிறான். உயிர், "உனக்கும் எனக்கும் உள்ள உறவை நீ உறுதிப்படுத்த வேண்டும். அப்படி உறுதிப்படுத்தினால் நான் உன் மயமாகிவிடுவேன். அதனால் எனது சீவபோதம் அழிந்துவிடும். உனது மகிமையை எண்ணி நான் மகிழ்வுடன் போற்றிப் புகழ்கிறேன்" என்று மாணிக்கவாசக சுவாமிகள் திருவாசகத்தில் கூறுகிறார். அவர் திருவாசகத்தை அருளிய திருத்தலங்களுக்குச் சென்று அவற்றைத் தரிசித்து எமது பிறவிப்பணியை அகற்றுமாறும், ஆச்சிரமத்திற்கு வரும் சிவனடியார்களின் குறைகளைப் போக்குமாறும் நாம் அவனைப் பிரார்த்திப்போம்" என்றார் சுவாமியார்.

**தீர்ந்தஅன் பாய அன்பர்க் கவரினும் அன்ப போற்றி**
**பேர்ந்துமென் பொய்மை யாட்கொண் டருளும் பெருமை போற்றி**
**வார்ந்தநஞ் சயின்று வானோர்க் கமுதமீ வள்ளல் போற்றி**
**ஆர்ந்தநின் பாதம் நாயேற் கருளிட வேண்டும் போற்றி. 69**

“சிவனே உனது அடியார்கள் உன்மீது பேரன்பு வைத்திருக்கிறார்கள். ஆனால் நீ அவ்வடியார்கள் வைத்திருக்கும் அன்பை விட அவர்கள் மீது அதிக அன்பு வைத்துள்ளாய். எனது சிவபோதமாகிய பொய்மையை அழித்து சிவபோதமாகிய மெய்மையை அருளிய பெருமை உனக்குண்டு. பாற்கடலைக் கடைந்தபோது கிளர்த்தெழுந்த விசத்தை நீ அருந்தவும் தேவர்களுக்கு அமிர்தத்தைக் கொடுக்கவும் செய்த பெருங்கொடையாளன் நீ. உனது அகண்டகாரச் சொரூபத்தில் என்னை ஏற்றருள்வாயாக என்று வணங்குகிறேன்” என்று மாணிக்கவாசக சுவாமிகள் கேட்பதையே நாம் கேட்கப் போகிறோம். அப்படிக் கேட்கும்போது அடியார்களே உங்களுக்கும் நல்வாழ்வைக் கொடு என்றும் கேட்போம்” என்றார் சுவாமியார்.

**போற்றியிப் புவனம் நீர்தீர்க் காலொடு வான மானாய்**

**போற்றியெவ் வுயிர்க்குந் தோற்றம் ஆகிநீ தோற்ற மில்லாய்**

**போற்றியெல் லாவுயிரக்கும் ஈறாயீ றின்மை யானாய் போற்றியைம்**

**புலன்கள் நின்னைப் புணர்கிலாப் புணர்க்கை யானே. 70**

“சிவனடியார்களே, மாணிக்கவாசக சுவாமிகள் சொல்கிறார்; “இறைவா ஐம்பூதங்களும், எல்லா உயிர்களும் உன்னிடமிருந்தே தோன்றின. அவை தோன்றியதால் நீ விகாரப்படவில்லை. பாதிக்கப்படவில்லை. அவை பிரளயத்தின்போது உன்னிடம் ஒடுங்குகின்றன. ஆனால் நீ எதிலும் ஒடுங்குவதில்லை. ஐம்பொறிகள் உன்னை அறியமாட்டாது. ஆனால் ஐம்பொறிகளுக்கான இயல்புகள் யாவும் உன்னிடமிருந்தே வருகின்றன. அத்தகைய அதீதப்பொருளே உன்னை நான் போற்றுகிறேன்” என்கிறார். உயிர்கள் உலகங்கள் யாவும் அவனிடமிருந்தே தோன்றும். ஆனால் நீ அவற்றால் பாதிப்படைவதில்லை. ஆனால் மனிதர்கள் பாதிப்படைகின்றனர். சாதாரண ஆசிரியராக இருந்த ஒருவர் உதவிக் கல்விப்பணிப்பாளரானார். அவர் திருவாசகத்திற்கு பொருள் சொல்பவர். ஆசிரியராக இருக்கும்போது அவரை யாரும் கவனிப்பதேயில்லை. உதவிப் பணிப்பாளரானதும் அவரை போற்றுகின்றனர். புகழ்கின்றனர். விருதுகள் கொடுக்கின்றனர். பொன்னாடை போர்த்துகின்றனர். அவருக்கு பெரும் மகிழ்ச்சி. தான் பெரிய அறிஞன், அறிவாளி என்ற நினைப்பு. தலை கால் புரியாது வாழ்ந்தார். சேவைக்காலம் முடிய அவரை மதிப்பாரில்லை. தேவையிருக்கும்வரை மதிப்பும் மரியாதையும் உச்சத்தில் இருக்கும் தேவையை நிறைவேற்றப் பலரும் வருவர். தேவை முடிந்த பின் அவர் செல்லாக்காசு ஆவார். சங்க காலப் புலவர்களைப் போன்ற நிலை. அவர் இறந்துவிட்டார் தேடுவாரில்லை. இந்த நிலை சிவனுக்கு இல்லை. அவர் தானே தோன்றியவர். அவரது

தோற்றம் பற்றி யாரும் அறியமாட்டார்கள். மாற்றமும் இல்லை. மாறவும் மாட்டார். மனிதரில் பலரும் மாறுவர். சிலர் மாறார். மாறாதவர் பல்லாயிரமாண்டுகள் கடந்த பின்பும் வள்ளுவர், ஔவையார் போல் வாழ்வர்" என்றார் சுந்தரமூர்த்தி சுவாமிகள்.

## 8. ஆனந்தத் தழுத்தல் (எழுசீர் ஆசிரிய விருத்தம்)

ஆனந்தத்தை நாடுவது மனிதரது முக்கியமான செயலென்று யாரும் எண்ணக்கூடாது. உயிர்கள் வாழும்போது அவை ஆனந்தத்தையே மிகவும் விரும்புகின்றன. ஆனால் இவை ஒருபோதும் ஆனந்தத்தை பெற்றதில்லை. சிவானந்தமே மெய்யான ஆனந்தம். அதை வீடுத்து பிரகிருதியோடு சேர்ந்து அனுபவிக்கும் சிற்றின்பங்களையே உயிர்கள் உண்மையான ஆனந்தமென்று நினைக்கின்றன. பிரகிருதியோடு சேராத ஆனந்தமே நித்திய ஆனந்தம். அது தான் சிவானந்தம். அதில் திளைத்திருப்பது தான் வாழ்க்கையின் குறிக்கோளாகும்.

**புணர்ப்பது ஒக்க எந்தை உன்னை ஆண்டு பூண நோக்கினாய்**
**புணர்ப்பது அன்று இது என்றபோது நின்னொடு என்னொடு**
**என்இது ஆம் புணர்ப்பது ஆக அன்று இது ஆக அன்பு நின்கழல்**
**கணே புணர்ப்பது ஆத கே அம் கனாள் புங்கம் ஆன போகமே. 71**

"சிவனடியார்களே, இத்திருவாசகத்தின் மூலம் மாணிக்கவாசக சுவாமிகள் தனது நிலையை வெளிப்படுத்துகிறார். "என் தந்தையே, என்னை ஆட்கொள்ளுதலில் நீ காட்டிய காருண்யம், நீ என்னை விருப்புடன் ஏற்றுக் கொண்டாய் போலத் தோன்றியது. ஆனால் இவ்வுடலோடு சிலகாலம் நீ வாழவேண்டும் என்று பணித்திருக்கிறாய். அதனால் நான் உன்மீது வைத்துள்ள பேரன்பால் உடல் வாழ்க்கை மீது அக்கறை கொள்ளாது உன்னை நினைந்து உனது நினைவால் உண்டாகும் ஆனந்தத்தில் மயங்கிக் கிடக்கிறேன்" என்கிறார் மாணிக்கவாசக சுவாமிகளை ஆட்கொள்ளச் சிவன் சில முனிவர்களோடு திருவாவடுதுறைக்கு வந்தார். அவரை ஆட்கொண்டபின் அவர் கைலாயத்திற்குப் புறப்பட்டபோது மாணிக்கவாசக சுவாமிகளும் அவருடன் புறப்பட ஆயத்தமானார். அப்போ, "சிவன் உனக்கு இங்கு பல வேலைகள் உண்டு. அவை முடிந்ததும் நான் வந்து உன்னை அழைத்துச் செல்வேன்" என்றார். அதனால்தான் சிவபேரின்பத்தைத்தரும் திருவாசகம் நமக்குக் கிடைத்தது. சிவன் மனித மேம்பாட்டிற்காகச் சிலரைப் பிறப்பிப்பார். சிலரைப் பூமிக்கு அனுப்புவார். தான் வருவார்.

பெரும் பெரும் புலவர்கள் அறிஞர்கள் யாபேரும் சிவனின் அருள் பெற்றவர்கள். அவர்கள் சிவவேடம் போடாது அமைதியாக இருந்து சிவனிட்ட பணியைச் செய்வர். பேர், புகழ், பொன்னாடைகள், பணத்திற்கு அடிமையாக மாட்டார்கள். மற்றவர்கள் தமது சிவானந்தத்தைக் கெடுத்துவிடுவார்கள் என்பதற்காக யாருடனும் சேரமாட்டார்கள். அவர்கள் ஆக்கங்கள் சிவன் அருளால் சிவன் இருக்கும்வரை வாழும் என்றார் சுந்தரமூர்த்தி சுவாமிகள்.

**போகம் வேண்டி வேண்டிலேன் புரந்தரஆதி இன்பமும்**

**ஏகநின் கழல் இணை அலாது இலேன் எம்பிரான்**

**ஆகம் விண்டு கம்பம் வந்து குஞ்சி அஞ்சலிக் கணே**

**ஆக என் கை கண்கள் தாரை ஆறு அது ஆக ஐயனே. 72**

“சிவனடியார்களே, இத்திருப்பாடலில் தனது நிலையைப்பற்றி மாணிக்கவாசக சுவாமிகள் கூறுகிறார். ஆணவம் இன்றிப் புகழுக்கு ஆசைப்படாது படோபமாக வாழாது அமைதியாக வாழ்ந்து சிவசேவை செய்வதே தனது நோக்கம் என்கிறார். அதை மக்களும் பின்பற்றுதல் வேண்டும். அதனால் சிவனை இவ்வாறு பிரார்த்திக்கிறார்; “ஏகனே, எம் பிரானே, எம் ஐயனே சுகபோகத்தின் பொருட்டு இந்திரலோகம் போன்ற போக பூமிகளையும், அவற்றால் வரும் போகங்களையும் நான் விரும்பவில்லை. உன்னையல்லாது வேறு யாரும் எனக்குதவுவதில்லை. உடல் மெலிந்து நடுங்கிக் கொண்டிருக்கிறது. கைகளைத் தலைமீது வைத்த உன்னை வணங்குகிறேன். கண்ணீர் ஆறாகப் பெருகி எனது ஆனந்தத்தை அதிகரிக்கிறது” என்கிறார். சங்ககாலப்புலவர்கள்’ அரசனையும், அரசசபையில் உள்ள முக்கியமான பிரமுகர்களையும் சிவனைப்போல மதித்து வணங்குவார்கள், புகழ்வார்கள், ஏனைய நாட்டு அரசர்களை இகழ்வார்கள். இவையே அவர்களது ஆக்கங்களாக இருக்கும். பொருளையும், புகழையும் கருத்திற் கொண்டு எவர்க்கும் உதவாத உலோபிகளையும் கொடைவள்ளல்கள் என்பார்கள். இதைக் காளமேகம் போன்ற புலவர்கள் பரிகசிப்பர். ஆனால் புகழுக்காசைப்பட்ட அரசரும், பணக்காரரும் உண்மையான கவிஞரை வெறுப்பர். அதுபோல அவர்களைப் புகழமாட்டார்கள். மாணிக்கவாசக சுவாமிகள் திருவாசகத்தை எழுதினாரே தவிர அரசசபையில் அரங்கேற்றவில்லை. அதை அரசனின் பாதங்களில் வைத்து வணங்கவில்லை. பாராட்டப்படவில்லை. அதில் உண்மை இருந்தது. கருத்து இருந்தது. மேன்மை இருந்தது. அதனால் அது இன்றல்ல ஊழிக்காலம் முடிந்த பின்னும் வாழும்” என்கிறார் சுவாமியார்.

**ஐய நின்னது அல்லது இல்லை மற்று ஓர் பற்று வஞ்சனேன்**

**பொய் கலந்தது அல்லது அல்லை பொய்மையேன் என்பிரான்**

**மை கலந்த கண்ணி பங்க வந்து நின் கழல் கணே**

**மெய் கலந்த அன்பர் அன்பு எனக்கும் ஆகவேண்டுமே. 73**

"சிவனடியார்களே, மாணிக்கவாசக சுவாமிகள் சிவனைத் தவிர வேறு எவரையும் போற்றவுமில்லை. புகழவும் இல்லை, அவர்களிடம் செல்லவுமில்லை. திறமை மிக்கவனை அரசனானாலும் தேடி வருதல் வேண்டும். அதுதான் முறை. அரசவாழ்வு, அரச போகம், பணத்திமிர் யாவும் உடலில் தைரியம் இருக்கும் வரைதான் இருக்கும். உடல் தளர்ந்துவிட்டால் ஒரு சிற்றுயிர்கூட மதிக்காது. இதைப் புரிந்து கொள்ளாதவர்கள் தான் நிலையில்லாதவற்றைச் சேமித்து மகிழ்கின்றனர். மாணிக்கவாசக சுவாமிகள் சிவனை; "ஐயனே, எம்பிரானே கண்களுக்க மைதீட்டிய உமாதேவியாரின் வலது பக்கத்தில் இருப்பவனே, பொய்யான உடல் வாழ்க்கையில் பற்று வைத்தால் நான் வஞ்சகனாவேன். அப்படி நான் பொய்மையில் மூழ்கி வாழேன். மெய்ப்பொருளான உன்மீது உனது அடியார்கள் பற்றுவைத்துள்ளனர். நான் வேண்டுவதுவும் அதுவே" என்கிறார். திருவாசகத்தில் ஒருவரிகூடத் தவறாக எழுதப்படவில்லை. சிவனைத் தவிர வேறு எவரும் போற்றப்படவும் இல்லை. ஓர் ஊரில் ஒரு சுவாமியார் வாழ்ந்து வந்தார். அவ்வூரில் ஒரு தனவந்தரும் வாழ்ந்து வந்தார். தனவந்தருக்குச் சுவாமியாரைப் பிடிக்காது. அவரை எந்நாளும் அவமதிப்பார். அதைப்பற்றிச் சுவாமியார் கவனத்தில் கொள்ளாததால் தனவந்தரின் செருக்கு அதிகரித்தது. ஒரு நாள் அரசசபைக்கு அரசன் சுவாமியாரை அழைத்தான். அத்துடன் அந்தத் தனவந்தரையும் அழைத்தான். அரசன் அந்த தனவந்தரின் செயல்களைப் புகழ்ந்து பேசினான். பிரமுகர்களும் புகழ்ந்தனர். இறுதியாகச் சுவாமியாரைப் பேசுமாறு அரசன் கேட்டான். சுவாமியார் சொன்னார்; "நான் மனிதனைப் பற்றிப் பேசுவதில்லை. அவர்கள் வேடமிட்டுப் பிழைப்பு நடத்துகின்றனர். ஒரு செயலைச் செய்தால் பலருக்கும் அதை அறிவிப்பதில் கண்ணாக இருக்கின்றனர். அத்தனவந்தர் பத்துக் கோவில்களைக் கட்டியதாகக் கூறுகின்றனர். ஊர்முழுவதும் பணத்தைப் பெற்று கோவில்களைக் கட்டினார். தனது பணம் எவ்வளவு போட்டார்..? திருமூலர் காலத்தில் உலகெங்கும் ஒரு கோடி சிவன்கோவில்கள் இருப்பதாகவும், இனிமேல் கோவில் கட்டவேண்டாமென்றும், உள்ள கோவில்களை உரிய முறைப்படி

வணங்குமாறும் கூறியுள்ளார். நீ ஒரு பாடசாலையைக் கட்டினாயா...? தானம் செய்வதற்கும் இரக்கிறாய். சிவனுக்கு ஒரு பூப்போட்டு பஞ்சாட்சர மந்திரத்தை ஓதினால் போதும் என்று திருமூலர் சொல்கிறார். செய்த வேலைகளை விளம்பரப்படுத்தி பணத்தையும், புகழையும் பெறுவது சேவை அல்ல. யார் யாரிடமோ பணம் வாங்கி கட்டிவிட்டு தானதர்மம் செய்துவிட்டு நான் தான் செய்தேன் என்று எப்படிச் சொல்வாய்...? ஒருவன் சிவசேவை செய்யுமுன் அவனிடம் இருந்த செல்வம் சிவசேவை செய்யச் செய்ய குறைவடைய வேண்டும். நீ புதிதாக ஆடம்பரமான வீடு கட்டியுள்ளாய். அதற்கு எங்கிருந்து பணம் வந்தது?" என்று சுவாமியார் சொல்ல அச்சிவபக்தன் எழுந்து சென்றான்" என்றார் சுந்தரமூர்த்தி சுவாமிகள்.

**வேண்டும் நின் கழல் கண் அன்பு பொய்மை தீர்த்து மெய்மையே**
**ஆண்டு கொண்டு நாயினேனை ஆவ என்று அருளு நீ பூண்டு**
**கொண்டு அடியனேனும் போற்றி போற்றி என்றும் என்றும் மாண்டு**
**மாண்டு வந்து வந்து மன்ன நின் வணங்கவே. 74**

"சிவனடியார்களே, மாணிக்கவாசக சுவாமிகள் தவறிக் கூடக் கேட்கக்கூடாத-வற்றைச் சிவனிடம் கேட்கவில்லை. பணம் தா, பொருள் தா, புகழ் தா என்றுதான் எல்லோரும் கேட்பர். ஆனால் மாணிக்கவாசக சுவாமிகள்; "இறைவா எனது சீவபோதத்தை ஒழித்து சிவபோதத்தை உறுதியாக்கு. என்மீது இரக்கங் கொண்டு உனது பேரருளை எனக்குத்தா. பேரன்பு கிடைத்து என்னைப் போற்றும் வாய்ப்புக் கிடைத்தால் பிறப்பு இறப்பு எத்தனை வந்தாலும் அதனால் எனக்குக் கேடு வராது" என்கிறார். இறைவனிடத்தில் அன்பைத்தவிர வேறு எதையும் அவர் எதிர்பார்க்கவில்லை. இறைவனின் அன்பால் பிறவிப்பிணி அகலும். அது அகன்றால் பேரின்ப வாழ்வான முத்தி கிடைக்கும் என்பதே அவரது நோக்கமாக இருந்தது. அவர் அரசசபையில் அமைச்சராக இருந்தார். அவர் அதை விரும்பியிருந்தால் சுகபோகங்கள் அனைத்தையும் அனுபவித்திருக்கலாம். ஆனால் அவர் அதை விரும்பவில்லை. இதை அனைவரும் உணர்ந்து கொள்ள வேண்டும்" என்றார் சுந்தரமூர்த்தி சுவாமிகள்.

**வணங்கும் நின்னை மண்ணும் விண்ணும் வேதம் நான்கும்**

**ஓலம் இட்டு உணங்கும் நின்னை எய்தல் உற்று மற்று ஓர்**

**உண்மை இன்மையின் வணங்கியாம் விடேங்கள் என்ன**

**வந்து நின்று அருளுதற்கு இணங்கு கொங்கை மங்கை பங்க**

**என் கொலோ நினைப்பதே. 75**

"சிவனடியார்களே, நாம் தமிழ்நாட்டிலுள்ள சிவன் கோவில்களைத் தரிசிக்க செல்லவுள்ளதால் எம்மை வழியனுப்ப பெருந்தொகையான மக்கள் வந்திருக்கிறார்கள். இது மார்கழி மாதம் திருப்பள்ளியெழுச்சியும், திருவெம்பாவையும் பாடும் காலம். அதனால் தான் சிவனைப் பற்றியும், மாணிக்கவாசக சுவாமிகளைப் பற்றியும் கூறுகிறேன். மாணிக்கவாசக சுவாமிகள் சிவனை நினைப்பதே ஆனந்தம் என்று கூறுகிறார். அதை உங்களுக்குப் பலமுறை சொல்லியிருக்கிறேன். நான் திரும்பி வரும்வரை தினமும் ஆச்சிரமத்திற்கு வந்து சிவனைத் துயிலெழுப்பங்கள். திருவெம்பாவைப் பாடல்களைப் பாடுங்கள். அதைத்தான் சிவன் விரும்புவார். அவர் கட்டடங்களை விரும்பவில்லை. தானதர்மங்களை விரும்புவதில்லை. ஏனெனில் அதைச் செய்வோர் தமது பணத்தில் செய்வதில்லை. ஊராரின் பணத்தில் செலவு செய்துவிட்டுத் தாம் தாம் செய்ததாகப் பறை அடிக்கின்றனர். யார் யாரையோ இரக்கிறார்கள். ஆனால் நாயன்மார்கள் சிவனிடம் இரந்து பெற்றே தானதர்மம் செய்தனர். அதனால் நீங்கள் எதைச் செய்ய வேண்டுமானாலும் சிவனைக் கேளுங்கள். அவன் தருவான். அவன் தராவிட்டால் அவன் தெய்வமல்ல. எம்மைப் போன்ற வியாபாரி. அதனால் தான் மாணிக்கவாசக சுவாமிகள், இறைவா, "நீயே மெய்ப்பொருள். அதனால் தான் மண்ணுலகத்தவர்களும், விண்ணுலகத்தவர்களும் உன்னை வணங்குகின்றனர். நான்கு வேதங்களும் சொல்லின் மூலம் உன்னை அடைய முயன்று அது முடியாமற்போக அது தளர்வுற்று நிற்கின்றன. பக்தர்களாகிய நாங்கள் உன்னை விடமாட்டோம் என்று பற்றிப் பிடித்திருக்கும் நிலையில், பார்வதியின் நாயகனே, நீ எம்மைக் கவனிக்காதிருப்பது நியாயமா…?" என்று மாணிக்கவாசக சுவாமிகள் உரிமையோடு கேட்கிறார். அது மனிதரின் உரிமை. அதை உணராதவர்கள் தான் துன்பப்படுகின்றனர். அதைத் தவறாக உணர்ந்தோர் தமது வேண்டுதல்களைத் தவறாகப் பயன்படுத்துகின்றனர். நீதியானவற்றைக் கேளுங்கள். சிவன் தந்துதவுவான். தராவிட்டால் நியாயம் கேளுங்கள். அவன் எமது தந்தை. நாம் பேசலாம், புகழலாம், கண்டிக்கலாம்" என்றார் சுந்தரமூர்த்தி சுவாமிகள்.

**நினைப்பது ஆக சிந்தை செல்லும் எல்லை ஆய வாக்கினால்**

**தினைத் தனையும் ஆவது இல்லை சொல்லல் ஆவ கேட்பவே**

**அனைத்து உலகும் ஆய நின்னை ஐம்புலன்கள் காண்கிலா**

**எனைத்து எனைத்து அது எப்புறத்தது அது எந்தை பாதம்**

**எய்தவே. 76**

"சிவனடியார்களே, "உலகெல்லாமாய் ஆகி இருக்கின்ற உன்னைச் சொல்லால் விளக்கவும் முடியாது. இவற்றால் பயனும் இல்லை. மனதிற்கு எட்டுவதெல்லாம் எண்ணங்களாக உருவெடுக்கின்றன. அதனால் ஐம்பொறிகளாலும் உன் வடிவை ஏற்படுத்த முடியாது. இவை யாவும் சிற்றின்பத்தை அனுபவிக்கவே உதவுகின்றன அதனால் வீணான பகைகளை, குரோதங்களை விட்டுவிடுங்கள். பொருளுக்கும் புகழுக்கும் ஆசைப்படாதீர்கள். வருவன வந்தே தீரும். அது வந்து சேரும்வரை சிவனின் நினைவுடன் வாழுங்கள். உங்களுக்கு எந்தக் குறைகளையும் சிவன் விடமாட்டான் என்று நம்புங்கள். நம்பிக்கை தான் வாழ்க்கை. அதனால் தான் இன்பம் ஏற்படுகிறது என்று நம்பி முழுமனநிறைவுடன் சிவனை வணங்குங்கள்" என்றார் சுந்தரமூர்த்தி சுவாமிகள்.

**எய்தல் ஆவது என்று நின்னை எம்பிரான் இவ்வஞ்சனேற்கு**

**உய்தல் ஆவது உன் கண் அன்றி மற்று ஓர் உண்மை**

**இன்மையின் பைதல் ஆவது என்று பாதுகாத்து இரங்கு**

**பாவியேற்கு ஈது அல்லாது நின்கண் ஒன்றும் வண்ணம்**

**இல்லை ஈசனே. 77**

அதைக்கேட்ட கதிரேசன் பூரிப்புடன் சிரித்தார். எல்லாவற்றிற்கும் காலம் வரவேண்டும். நான் பலகாலமாகத் தமிழ்நாட்டிற்குச் செல்ல வேண்டும் என்று நினைத்தேன். நினைக்காத வேளையில் அது நிறைவேறியுள்ளது. அவசரப்படுவதில் உயிரினங்கள் ஈடுபடுகின்றன. நினைப்பவையெல்லாம் உடனே நடந்துவிட வேண்டும் என்பது அவர்களது ஆசை. அதற்குக் காலம் வரவேண்டும் என்பதை உணர மாணிக்கவாசக சுவாமிகளாலேயே முடியவில்லை. அவர்; "இறைவா நான் உன்னை அடைவது எப்போது…? கர்மத்தில் சிக்கியுள்ள நான் அதிலிருந்து விடுபட உன்னைச்

சாருவதன்றி வேறு வழியில்லை. அதனால் பெரும் தன்பப்படும் என்னைக் கருணைகூர்ந்து காப்பாற்று. சிவனே உன்னோடு ஒன்றுபடுதலைவிட வேறு மார்க்கம் எனக்கு இல்லை" என்கிறார். அதனால் அவர் அவதிப்படுவது புரிகிறது. இப்போது எனக்கு அந்த நினைவு வந்துவிட்டது. உலகம் பாரமாகவும், வெறுமையாகவும் தெரிகிறது. நேற்று எனது முத்தமகனும் மனைவியும் பேரப்பிள்ளைகளும் வந்தனர். எனது பேரன் என்னோடு மிகவும் மகிழ்வாக விளையாடுவான். அவனைக் கண்டதும் நான் உலகை மறந்துவிடுவேன். ஆனால் இம்முறை அவனைக்கண்டும் பெரிதாக ஆர்வம் ஏற்படவில்லை. அவனும் அக்கறைப்படவில்லை. வீட்டுக்குச் செல்வோம் என்று தகப்பனுக்குத் தொல்லை கொடுத்துக் கொண்டிருந்தான். மருமகள் பிள்ளைகளின் படிப்பு பாழாகிறது என்று கவலைப்பட்டாள். வயது செல்லச் செல்ல உணர்வுகளும் மாற்றமடையும். ஏழெட்டு வயதில் அவன் என்னையே விரும்பியிருந்தான். இப்போ பதினெட்டு வயது. அவனுக்கு அவனது நண்பர்கள் பற்றிய நினைவுகள் அதிகரித்துவிட்டன. கைத்தொலைபேசியோடுதான் காலங்கழிக்கிறான். அதனால் அவன்மீது எனக்கிருந்த பாசம் குறைந்துவிட்டதுபோலத் தெரிகிறது. அதனால்தான் சிவனின் மீதிருந்த பற்று அதிகரித்தது. விரைவில் அவனைச் சென்றடைய வேண்டும் என்ற நினைப்பும் அதிகரிக்கிறது" என்றார் கதிரேசன்.

**ஈசனே நீ அல்லது இல்லை இங்கும் அங்கும் என்பதும்**

**பேசினேன் ஓர் பேதம் இன்மை பேதையேன் என் எம்பிரான்**

**நீசனேனை ஆண்டுகொண்ட நின்மலா ஓர் நின் அலால்**

**தேசனே ஓர் தேவர் உண்மை சிந்தியாது சிந்தையே. 78**

"கதிரேசு, மாணிக்கவாசகர் ஒரு ஞானி. உலகை உய்விக்க வந்த பெருமகன். அதனால் தான் அவர் எழுதிய திருவாசகத்திற்கு மேலான ஒரு நூல் இதுவரை வெளிவரவில்லை. அவர் சொல்கிறார்; "ஈசா, இவ்வுலகம், அவ்வுலகம் ஆகியவை எல்லாம் நீ. அதனால், உனக்கு வேறான பொருள் உலகில் எவையும் இல்லை என்று எனது சிற்றறிவுக்கு எட்டியுள்ளது. உனக்குப் புறம்பானாவனாக என்னை நான் கருதினால் என்னைப்போல ஒரு நீசன் வேறுயாரும் இல்லை. அத்துடன் உனக்குப் பிறம்பானவை எவையும் இல்லாததால் நீ நிர்மலன். எங்கும் ஒளிப்பிரவாகமாக நீ ஒளிர்வதால் நான் பார்ப்பதற்கோ சிந்திப்பதற்கோ வேறோர் ஒளி உலகில் இல்லை" என்கிறார். சிவனால் ஆட்கொள்ளப்பட்டு சிவமயமாக இருக்கும் மாணிக்கவாசக சுவாமிகள் தம்மை அறியாமை மிக்கவனாகவே கருதி வாழ்ந்திருக்கிறார். கடவுள்

உலகைக் கடந்தும் இருக்கிறார். உலகில் ஊடுருவியும் இருக்கிறார். இருந்தும் பரிபூரணனான அவர் பிரபஞ்சமாகவும், அதிலுள்ள உயிர்கள் அனைத்துமாகவும் இருக்கிறார். அதனால் பற்றும் அவன் தான். பற்றின்மையும் அவன்தான். பற்றின்மையால் பற்றை அகற்ற வேண்டும். உங்களுக்கு உங்களின் பேரனில் உள்ள பற்றுக் குறையக் காரணம் முதிர்ச்சி. அதாவது சிவனில் உள்ள பற்று. அவன் உங்களைக் கவனிக்காததற்குக் காரணம் வயது முதிர்ச்சி. குழந்தைப்பருவம் பற்றுக்களில்லாததால் பாசத்தை உணர்கிறது. வாலிபப்பருவம் பற்றுக்கள் மாற்றமடைவதால் பாசமும் மாற்றமடைகிறது. இது இயல்பு. சிவனின் திருவிளையாடல். பற்றை அகற்றினால்தான் பற்றற்றவனை அடையலாம். அது வயது முதிர்வால் உண்டாகும்” என்றார் சுந்தரமூர்த்தி சுவாமிகள்.

**சிந்தை செய்கை கேள்வி வாக்குச் சீர் இல் ஐம்புலன்களால்**

**முந்தை ஆன காலம் நின்னை எய்திடாத மூர்க்கனேன்**

**வெந்து ஐயா விழுந்திலேன் என் உள்ளம் வெள்கி**

**விண்டிலேன் எந்தை ஆய நின்னை இன்னம் எய்தல் உற்று**

**இருப்பனே. 79**

“இப்போது சிவனடியார்கள் என்றிருப்போரில் பெரும்பான்மையானவர்கள் போலி வேடதாரிகளாகவே காணப்படுகின்றனர். மாணிக்கவாசக சுவாமிகள் கூறுவதைப்போல யார் இருக்கிறார்கள். அவர், “மனம், கர்மம், கேள்வி, மொழி ஆகியவற்றை உன்னைத் தொழுவதற்கே பயன்படுத்தியிருக்கலாம். ஐம்பொறிகளின் தாக்கத்திற்குட்பட்டவன் எனினும் அவைகளையும் உன்னை வழிபடப் பயன்படுத்தியிருக்க வேண்டும். இதை நான் நெடுநாட்களுக்கு முன்பே பயன்படுத்தியிருத்தல் வேண்டும். அப்படிச் செய்யாதது எனது குற்றம். உன்னை அடையப் பெறாத நான் தீயில் விழுந்து வெந்து போகவில்லை. எனது மனம் வெட்கப்பட்டுக் குழம்பவில்லை. அத்துடன் எனது தந்தையாகிய உன்னை அடைய விருப்பம் உடையவன் என்று போலியாகச் சொல்லி நடித்து வீண்வார்த்தைகள் பேசி வாழ்கிறேன்…” என்கிறார். இது முழுமையாகச் சிவனை அடைந்த நிலையென்று அவர் தன்னை வெளிப்படுத்தவில்லை” என்றார் சுந்தரமூர்த்தி சுவாமிகள்.

**இருப்பு நெஞ்சம் வஞ்சனேனை ஆண்டு கொண்ட நின்னதாள்**

**கருப்புமட்டு வாய் மடுத்து எனைக் கலந்து போகவும் நெருப்பும்**

**உண்டு யானும் உண்டு இருந்தது உண்டது ஆயினும்**

**விருப்பும் உண்டு நின்கண் என்கள் என்பது என்ன**

**விச்சையே. 80**

“மாணிக்கவாசக சுவாமிகளின் போக்கை யாராலும் புரிந்து கொள்ள முடியாது. முதல் பாட்டில் வேறுபாடாகச் சொல்கிறார். இப்பாட்டில் இரும்பு போன்ற வலிமையான மனதையுடைய வஞ்சகனாகிய என்னை ஆட்கொண்ட உனது திருவடிகள் கரும்பை விடச் சுவையானவை. அவை எனக்கு ஆனந்தத்தைக் கொடுக்கின்றன. அதை விட்டுப் பிரிந்திருக்கும் நான் நெருப்பிருந்தும் இன்னும் சாகாதிருக்கின்றேன். உயிர் வாழ்வதற்காக உணவை உண்ணும் நான் உன்னிடம் அன்பு வைத்திருக்கிறேன் என்று சொல்வது மாய வித்தை” என்கிறார். இது சிவனோடு சேர வேண்டும். இல்லாவிட்டால் சாகவேண்டும் என்ற நிலையைக் கொண்டது” என்றார் சுந்தரமூர்த்தி சுவாமிகள்.

### 9. ஆனந்தத் தழுத்தல் (கலிநிலைத்துறை)

**விச்சுக் கேடு பொய்க்கு ஆகாது என்று இங்கு இனை வைத்தாய்**

**இச்சைக்கு ஆனார் எல்லாரும் வந்து உன்தாள் சேர்ந்தார்**

**அச்சத்தாலே ஆழ்ந்திடுகின்றேன் ஆரூர் எம்**

**மிச்சைத் தேவா என் நான் செய்தேன் பேசாயே. 81**

அம்பலவாணர் ஆச்சிரமத்திற்கு வந்தபோது அங்கே பெருந்தொகையான மக்கள் சுவாமியாரிடம் ஆசிபெற வந்திருந்தனர். அவர் திரும்பிவரச் சில மாதங்கள் செல்லும் என்று மக்கள் அறிந்தமையால் அவர்கள் சுவாமியாரைச் சூழ்ந்து நின்றனர். சுவாமியார் மிகமிகப் பொறுமையானவர். எல்லோரையும் சமமாக மதிப்பவர். துன்பப்படுபவர்களுக்காகச் சிவனிடம் பிரார்த்திப்பவர். ஆச்சிரமத்தில் தொண்டு துரவு செய்வதும், சமைத்தும் கொடுக்கும் சங்கரப்பிள்ளையின் பேரனுக்குத் திடீரென்று கடும் சுகவீனம் ஏற்பட்டதால் அவனை வைத்தியசாலையில் அனுமதித்திருந்தனர். மக்கட் கூட்டத்தில் மிகவும் வேதனையுடன் நின்ற சங்கரப்பிள்ளையைச் சுவாமியார் அன்புடன் பார்த்து வருமாறு சைகை செய்தார். அவர் வந்ததும், “அடியவனே, கலங்காதே. உனது

பேரனின் நினைவாகவே நான் எவ்வேளையிலும் இருக்கிறேன். அவனுக்கு எதுவும் நடைபெறாது. நாம் திருப்பெருந்துறைக்குச் செல்கிறோம். அங்கு கோவில் கொண்டருளியிருக்கும் தியாகராசனுக்கு உனது பேரனைப்பற்றிக் கட்டாயம் சொல்வேன். திருவாரூரில் பிச்சாடனாய் எழுந்தருளியிருக்கும் தியாகராசப் பெருமான் பக்குவப்பட்ட ஆன்மாக்களுக்கு இவ் உலகப்பற்று வேண்டாமென்று புகட்டியருள்கின்றவன். அப்படியானவன் குடும்பத்தவர்களின் குறைகளைக் கேட்டறிந்து ஆவன செய்பவன். இவ்வாறு நான் சொல்லவில்லை. மாணிக்கவாசக சுவாமிகள் சொல்கிறார்; நீ சிவனடியான். உனது பேரனும் பெற்றோரும் சிவனின் அடியார்கள். அவர் உன்னைக் காப்பார்; மாணிக்கவாசக சுவாமிகள், "மாயையான பிரபஞ்சத்திற்கு வித்தாக இருக்கும் எனது அக்ஞானம் அழிந்து போகாதிருக்கும்படி இப் பிரபஞ்சவாழ்வில் என்னை வைத்திருக்கிறாய். உனது திருவருளுக்குப் பாத்திரமான அனைவரும் உன் சொரூபத்தில் லயமாயினர். இந்த மாயப் பிரபஞ்சவாழ்வு வேண்டாமென்று துயரத்தில் உள்ளேன். நான் என்ன செய்வது என்று சொல்" என்று கேட்கிறார். அதன்படி யாரும் எதையும் சிவனிடம் கேட்கலாம். நீ சிவபக்தன். அதனால் உனது பேரனைச் சுகப்படுத்துமாறு கேள். நானும் கேட்கிறேன்" என்றார் சுந்தரமூர்த்தி சுவாமிகள்.

**பேசப்பட்டேன் நின் அடியாரில் திருநீறே**

**பூசப்பட்டேன் பூதலரால் உன் அடியான் என்று**

**ஏசப்பட்டேன் இனிப்படுகின்றது அமையாதால்**

**ஆசைப்பட்டேன் ஆட்பட்டேன் உன் அடியேனே. 82**

அடுத்து குமாரவேல் என்ற சிவனடியார் வந்து; "சுவாமி, என்னை உங்களுக்குத் தெரியும். நான் ஓர் அற்பனான சிவபக்தன். என்னிடம் எதுவும் இல்லை. மனைவி, பிள்ளை, உறவினர் என்று யாரும் இல்லை. வயதும் முதிர்ந்து விட்டது. இறக்குமுன் சிவத்தலங்களைத் தரிசிக்க வேண்டுமென்ற ஆசை இருக்கிறது. அதனால் என்னையும் அழைத்துச் செல்லுங்கள்" என்றான்.

"சுவாமி, அவன் எனது இனத்தவன். அவனது உபதேசத்தால் தான் நான் சிவனை வணங்க ஆரம்பித்தேன். அதனால் அவன் என்னுடன் வரட்டும்" என்றான் மகாலிங்கம்.

சுவாமியார் சிரித்தார். பின் எல்லாம் அவனின் திருவிளையாடல். மாணிக்கவாசக சுவாமிகள்; சிவனே உனது அன்பர்களில் நான் ஒருவன் என்று

நல்லோரால் பாராட்டிப் பேசப்பட்டேன். ஞானகுருவால் நீறு பூசப்பெற்றேன். அறிவிலிகளாகிய உலகத்தவர்களால் உனது அடியவன் என்று இகழப்பட்டேன். இவ்வாறு உலகில் வாழ்வது எனக்குப் பிடிக்கவில்லை. உன்னையே அடைந்தாக வேண்டும் என்று நான் ஆசைப்படுகிறேன். எனது ஆசையை நிறைவேற்று" என்று துயரத்தோடு கேட்கிறார். அதுபோலத்தான் குமாரவேலு என்னைச் சாட்டிச் சிவனைக் கேட்கச் சிவனடியாரான மகாலிங்கம் அவரது விருப்பத்தைப் பூர்த்தி செய்ய இணங்கிவிட்டார். இது புதுமையல்ல. இயல்பானது. ஒருவர் ஆசைப்படுவதைச் சிவன் கொடுப்பார் என்பதால் தான் மாணிக்கவாசக சுவாமிகள் உன்னை அடைய வேண்டும் என்று கேட்கிறார். இதைத்தான் கதிரேசனும், அம்பலவாணரும், குமாரவேலுவும் கேட்கின்றனர். நாம் நினைப்பவையே சிவனுக்குக் கேட்கும். அதனால் தான் ஞானிகள் வாய் திறவாதிருந்து தாம் நினைத்ததைச் சாதிக்கின்றனர். இப்போ குமாரவேலு கேட்டது சிவனுக்குக் கேட்டுவிட்டது. அதனால் தான் மகாலிங்கம் ஒப்புக் கொண்டார்" என்றார் சுந்தரமூர்த்தி சுவாமிகள்.

**அடியேன் அல்லேன் கொல்லோ தானெனை ஆட்கொண்டு**

**இலை கொல்லோ அடியார் ஆனார் எல்லாரும் வந்து உன்தாள்**

**சேர்ந்தார் செடிசேர் உடலம் இது நீக்கமாட்டேன் எங்கள்**

**சிவலோகா கடியேன் உன்னைக் கண்ணாரக் காணுமாறு**

**காணேனே. 83**

"சிவனுக்கு நாம் நினைப்பதும் கேட்கும் என்பதை நான் அறிவேன். அதனால்தான் மாணிக்கவாசக சுவாமிகள், "எங்கள் சிவலோகநாதா, உனது மெய்யடியார்கள் உன்னை வணங்கி உன் திருவடியை அடைகின்றனர். கல்நெஞ்சம் உடைய நான் இந்தத் துன்பம் தரும் உடலையும் பிரிய மாட்டேன். உன்னை அடைவதற்கான மார்க்கத்தைப் பின்பற்றவும் மாட்டேன். இத்தகைய நான் உனது அடியவன் அல்லனோ..? நீ என்னை ஆட்கொள்ளவில்லையோ என்று கேட்கிறார். அதேநிலையில் தான் நானும் இருக்கிறேன் என்று எண்ணத் தோன்றுகிறது. என்னால் இந்த உடலைவிட்டுப் பிரிய முடியவில்லை. உன்னை அடைவதற்கான மாற்றமும் தெரியவில்லை" என்றார் கதிரேசன்.

"அப்படி நினைக்காதே, சிவன் மாணிக்கவாசக சுவாமிகளின் மேல் பேரன்பு பூண்டது உண்மை. ஆனால் மாணிக்கவாசகரின் எண்ணம் அதுவல்ல. அவர் சிவனை அடைய அவசரப்படுகிறார். சிவன் அவரது சேவை முடியட்டும் என்று காத்திருக்கிறார்.

இது தான் நடக்கிறது. இதை விளங்காதவர்கள் எதை எதையோ சொல்ல நீயும் அதையே சொல்கிறாய். வீணான சந்தேகங்களை விட்டுவிட்டுச் சிவனைத் தொழு" என்றார் சுந்தரமூர்த்தி சுவாமிகள்.

**காணுமாறு காணேன் உன்னை அந்நாள் கண்டேனும்**

**பாணே பேசி என் தன்னைப் படுத்தது என்ன பரஞ்சோதி**

**ஆணே பெண்ணே ஆர் அமுதே அத்தா செத்தே போயினேன்**

**ஏண் நாண் இல்லா நாயினேன் என்கொண்டு எழுகேன்**

**எம்மானே. 84**

"மாணிக்கவாசக சுவாமிகள் தன்னை மிகவும் பலவீனப்பட்டவனாக இப்பாடலில் கூறுகிறார், "உன்னையடையும் வழி எனக்குத் தெரியாது. அன்று உன்னைக் கண்டபோது தேவையில்லாதவற்றை எல்லாம் பேசி நல்ல சந்தர்ப்பத்தை இழந்து விட்டேன். செத்துப்போன நிலையில் தான் நான் இப்போது இருக்கிறேன். இந்தக் கீழான நிலையையிட்டு நான் வருந்தவில்லை. மேல்நிலை அடைவதற்கான ஆற்றலை எனக்குக் கொடு" என்று சிவனை இரக்கிறார். இவ்வாறு உயிர்கள் சிவனை இரக்க வேண்டும். அப்படி இரந்தால் தான் மேல்நிலை அடையலாம் என்று விளக்குகிறார்" என்றார் சுந்தரமூர்த்தி சுவாமிகள்.

**மான் நேர் நோக்கி உமையாள் பங்கா மறை ஈறு அறியா**

**மறையானே தேனே அமுதே சிந்தைக்கு அரியாய் சிறியேன்**

**பிழை பொறுக்கும் கோனே சிறிதே கொடுமை பறைந்தேன்**

**சிவம் மாநகர் குறுகப் போனார் அடியார் யானும் பொய்யும்**

**புறமே போந்தோமே. 85**

"மாணிக்கவாசக சுவாமிகள், மனித மேம்பாட்டிற்காகத் தன்னில் பெருங் குறைகள் இருப்பதுபோலக் காட்டிக் கொள்கிறார். சிவனால் ஆட்கொள்ளப்பட்டவர்-களுக்குத் துன்பமிராது. அத்துடன் யாராலும் துன்பம் செய்ய முடியாது. நான் முன்பு சொன்னதைப்போல அவரது தேவை முடியவில்லை. உனக்கு உனது வினை முடியவில்லை. வினை முடிவடைந்ததும் உயிர் தானாகப் பிரிந்துவிடும். "மான்விழி போன்ற கண்களையுடைய உமாதேவியின் மணாளா, வேதத்திற்கும், வேதாந்தத்திற்கும்

எட்டாத மறைபொருளே, தேனே, அமிர்தமே, மனதிற்கு எட்டாதவனே, எனது குற்றங்களை மன்னித்தருளும் அரசே, எனது குறைபாடுகளை நான் உன்னைவிட யாரிடம் முறையிடுவேன். உனது அடியார்களை உனக்குரியவர்களாக்கினாய். நானும் பிரபஞ்சமும் உனக்கு வேறாக இருந்து வருகிறோம்" என்கிறார். இது ஒரு காதலி தனது காதலனிடம் வேண்டுவது போலுள்ளது. நான் உங்களை விரும்பவில்லை. நீங்கள் யாரென்று எனக்குத் தெரியாது. எனது நினைவுகள் யாவும் சிவனிடமே உண்டு. வேறு யாரையும் நினைக்கமாட்டேன் என்று கூறுவதை ஒத்தது. காதலிப்பதற்கு முன்பும் சொல்லலாம். காதலித்து இருவரின் மனமும் கலந்தபின் அவ்வாறு சொல்வது ஊடல். அது உணர்வைத் தூண்டும் விளையாட்டு. அது போன்றது தான் இது" என்றார் சுவாமியார்.

**புறமே போந்தோம் பொய்யும் யானும் மெய் அன்பு**

**பெறவே வல்லேன் அல்லா வண்ணம் பெற்றேன் யான்**

**அறவே நின்னைச் சேர்ந்த அடியார் மற்று ஒன்று அறியாதார்**

**சிறவே செய்து வழிவந்து சிவனே நின்தான் சேர்ந்தாரே 86**

"சீவனாகிய நானும், உலகமாயையாகிய மாயையும் உனக்குப் புறம்பானோம். உன்னிடத்தில் எனக்கு மெய்யான அன்போ, பக்தியோ இல்லை. உன்னைத்தவிர வேறு எவரையும் அறியாத பக்தர்கள் தம்முடைய உலகப் பற்றை அகற்றி உன்னோடு சேர்த்து விடுகின்றனர். அதற்காக அவர்கள் உன்மீது அழியாதபக்தி செலுத்த நினைக்கின்றனர்" என்று கதிரேசனுக்குச் சொன்னார் சுந்தரமூர்த்தி சுவாமிகள்.

**தாராய் உடையாய் அடியேற்கு உன்தாள் இணை அன்பு**

**பேரா உலகம் புக்கார் அடியார் புறமே போந்தேன் யான்**

**ஊர் ஆ மிலைக்கக் குருட்டு ஆமிலைத்து இங்கு உன்தாள்**

**இணை அன்புக்கு ஆராய் அடியேன் அயலே மயல் கொண்டு**

**அழுகேனே. 87**

சுந்தரமூர்த்தி சுவாமிகள் கதிரேசனுக்குச் சொன்னார்; "சிவனின் மீது முழுமையான அன்பு கொண்டவர்கள் சிவனை உயர்த்தியும், தம்மைத் தாழ்த்தியும் கதைப்பர். இது சாதாரணமாக மனித வாழ்விலும் நடைபெறுகிறது. மகாலிங்கத்தைவிட அறிவில், புத்தியில், தொழிலில் அவரது தகப்பன் குறைந்தவர். மகாலிங்கம் உழைக்கத்

தொடங்கிய பின்புதான் மகாலிங்கத்தின் குடும்பம் படிப்படியாக முன்னேறி உச்சநிலையை அடைந்தது. அவன் குடித்துக் கொண்டிருந்த காலத்திலும் தகப்பனை மதித்தவன். தகப்பனின் ஆசியால்தான் முன்னேறியதாகச் சொல்பவன். இதற்குக் காரணம் அன்பு. அதுபோலச் சிவனில் பெரும் அன்பு வைத்துள்ள மாணிக்கவாசக சுவாமிகள் தன்னை மிகமிகத் தாழ்ந்தவனாகவே நினைக்கிறார். அதனால் அவர், "எனக்கு எப்போதும் உரிமையானவனே, உன்மீது பெரும் அன்பு கொண்டு உன்னை முறைப்படி வணங்கிய அடியார்கள் முத்தியடைந்தனர். ஆனால் நான் அதற்கு ஏற்றவன் இல்லை. தன் கன்றைப்பார்த்து பசுவானது பொருள்படக் கத்துகிறது. அதைக்கேட்ட குருட்டுப்பசு பொருளற்ற கூச்சல் போடுகிறது. குருட்டுப்பசு போல நான் உனது அன்பு தேவையென்று நான் வீணான ஓலமிடுகிறேன். மயக்கமடைந்து செந்நெறியைப் பின்பற்றாது வாழ்கிறேன்" என்கிறார். இது சாப்பிட மறுக்கும் பிள்ளையை சாப்பிடாவிட்டால் நரிக்குக் கொடுத்துவிடுவேன் என்று தாய் சொல்வது போலுள்ளது" என்றார் சுந்தரமூர்த்தி சுவாமிகள்.

**அழுகேன் நின்பால் அன்பாம் மனம் ஆய் அழல் சேர்ந்த**

**மெழுகே அன்னார் மின்ஆர் பொன் ஆர் கழல் கண்டு**

**தொழுதே உன்னைத் தொடர்ந்தாரோடும் தொடராதே**

**பழுதே பிறந்தேன் என் கொண்டு உன்னைப் பணிகேனே. 88**

"மாணிக்கவாசக சுவாமிகள் ஒவ்வொரு திருவாசகப் பாடல்களிலும் தன்னைத் தாழ்த்தியும், சிவனடியார்களை உயர்த்தியும் கூறுகிறார். அவர், "சிவனே, உன்னிடத்தில் மெய்யன்புடையவர்கள், உனது ஒளிபொருந்திய பொன்போன்ற திருவடிகளைக் கண்டு, தீயில் இட்ட மெழுகைப்போல உருகுகின்றனர். உன்னைத் தொழுகின்றனர். உன்னைப் பின்பற்றுகின்றனர். இவ்வாறு செய்யாமல் நான் பொய்யாகக் கண்ணீர் விட்டுக் கொண்டிருக்கிறேன். அதனால் நான் வீணில் பிறந்தவனாகிவிட்டேன். இதனால் எப்படி உன்னை அடைவது என்று சொல்" என்கிறார். ஏற்கெனவே ஆட்கொள்ளப்பட்டவர் எப்படி உன்னை அடைவதென்று சிவனைக் கேட்பது வியப்புக்குரியது" என்றார் சுந்தரமூர்த்தி சுவாமிகள்.

**பணிவார் பிணி தீர்ந்து அருளிப் பழைய அடியார்க்கு உன்**

**அணி ஆர் பாதம் கொடுக்கி அதுவும் அரிது என்றால்**

**திணி ஆர் மூங்கில் அனையேன் வினையைப் பொடி ஆக்கித்**

**தணி ஆர் பாதம் வந்து ஒல்லை தாராய் பொய்தீர் மெய்யானே. 89**

அம்பலவாணர் மிகவும் மகிழ்வுடன் வந்து ஆச்சிரமத்துச் சிவன்கோவில் மண்டபத்தில் அமர்ந்திருந்தார். அவருக்கருகே மகாலிங்கமும் கதிரேசனும் கவிதாவும் இருந்தனர்.

“களங்கமில்லாத சிவன் தன்னைப் பணிபவர்களது பிணிகளைத் தீர்த்து வைப்பவன். பழைய அடியார்க்கு அருள்பவன். அப்படியிருக்கச் சிவனின் பழம்பெரும் அடியாரான கதிரேசன் இரண்டு மூன்று தினங்களாக மனம் குழம்பியிருப்பதைச் சிவன் உணர்ந்து என்னோடு சேர்ந்து வருத்தப்பட்டான். நானிருக்க அவருக்கு ஏன் குழப்பம் உண்டாகிறது. எனக்கு ஒரு பூப்போட்டு வணங்கச் சொல் அவரது குறைகள் யாவும் அற்றுப்போம்” என்றவர். அப்படி உங்களுக்கு என்ன குறை. அதைச் சிவனிடம் சொல்லுங்ககள். சிவனடியார்களிடம் சொல்லுங்கள். நீங்கள் குறைப்படுவதைச் சிவன் விரும்பவில்லை. உங்களது இளைய மகளின் கணவனுக்கு ஆறு மாதங்கள் விடுமுறை கொடுக்கப்பட்டுள்ளது. அதனால் அவர்கள் ஆறுமாதம் வந்து உங்களோடு தங்கப் போகிறார்கள். அதனால் நீங்கள் கவலைப்படாது திருவாவடுதுறைக்கு வரலாம். உங்களது இயங்க முடியாத மனைவியை உங்கள் மகள் பார்த்துக் கொள்வாள்” என்றார் அம்பலவாணர்.

கதிரேசன் திகைப்புடன் அம்பலவாணரைப் பார்த்தார். எனக்குத் தெரியாத விடயம் அம்பலவாணருக்கு எபர்படித் தெரிய வந்தது என்று யோசித்தார்.

“ஆச்சரியப்படாதே, சிவன் தனது முதிர்ந்த சிவனடியார்களை வருந்த விடமாட்டான். மாணிக்கவாசக சுவாமிகள் சொல்வது போன்று, நான் முதிர்ந்த அடியவன் அல்ல. அப்பெருநிலைக்கு நான் இன்னும் தகுதியாகவில்லை. கெட்டியான மூங்கில்போல வளையாதிருக்கும் எனது வினையைச் சாம்பலாக்கி இன்பம் நிறைந்த உனது திருவடிக்கு ஆளாக்கு” என்கிறார். அதுபோலத்தான் கதிரேசனையும் நினைக்கிறார். ஆனால் சிவன் உங்களைத் தனது முதிர்ந்த அடியவனாக நினைத்துச் செயற்படுகிறார். இரவு முழுவதும் சிவன் கனவில் வந்து பல கதைகள் பேசினார். அப்போது நீங்கள் காரணமின்றித் துன்பப்படுவதாகக் கூறி, அவனுக்கு மனைவி மீது பிரியம். அதனால் வருத்தப்படுகிறான். அவன் என்னைச் சந்தித்துத் திரும்பும் வரை அவரின் மகளின் குடும்பம் அவரின் வீட்டுக்கு வரும்” என்றவர்.

அம்பலவாணர் கதைத்துக் கொண்டிருந்தார். கதிரேசன் விறைத்துப் போயிருந்தார்.

**யானே பொய் என்நெஞ்சும் பொய் என் அன்பும் பொய்**

**ஆனால் வினையேன் அழுதால் உன்னைப் பெறலாமே**

**தேனே அமுதே கரும்பின் தெளிவே தித்திக்கும்**

**மானே அருளாய் அடியேன் உனை வந்து உறுமாறே. 90**

''கதிரேசண்ணை, மாணிக்கவாசக சுவாமிகள் சொல்வது போல, "நானும் பொய்யானவன். எனது மனமும் பொய்யானது. அப்படியான பொய்யான மனதால் நான் உன்னைப் போற்றிப் புகழ்வதும் பொய்யானவையே. ஆனால் மெய்யன்பு வைத்து உன்னைப் போற்றித் துதித்தேனேயானால் நித்தியமானவனான உன்னைச் சேரலாம். உன்னை நினைத்தால் எனக்குப் பரமானந்தம் ஏற்படுகிறது. அதனால் உன்னை அடைவதற்கான உறுதியான வழிமுறைகளை எனக்குச் சொல்" மாணிக்கவாசக சுவாமிகள் சொல்வதைப் போலத்தான் உனது மனமும் குழம்பியுள்ளது. நீயும் பொய், உன் மனமும் பொய். நீ சிவனை வணங்குவதும் பொய் என்று நினைத்தாலும் எம்பெருமானான சிவன் அதை மெய் மெய் மெய் என்று கருதுகிறான. உனது மருமகனுக்கு அரசாங்கம் ஆறு மாத காலம் விடுமுறை கொடுத்துப் பிற நாடொன்றுக்கு அனுப்பவுள்ளது. மருமகன் தனது மனைவியை உங்களுடன் விட்டு விட்டுப் போக நினைக்கிறார். அதெல்லாம் உனது துன்பத்தை நீக்குவதற்காகச் சிவன் செய்த திருவிளையாடல். இனியும் மனம் குழம்பப் போகிறாயா…? மகிழ்வுடன் சிரி. சிவனுக்கு நன்றி சொல்" என்றார் அம்பலவாணர்.

அப்போது அங்கு வந்த நல்லைநாதன். "அண்ணை, உங்களது மகளும் கணவனும் பிள்ளைகளும் வீட்டுக்கு வந்துள்ளனர்" என்றான். கதிரேசன் திகைத்துப போனார். சிவனின் பேரருளை நினைத்துக் கண்களை மூடினார்.

### 10. ஆனந்த அதீதம் (எண்சீர் ஆசிரிய விருத்தம்)

சிவன் ஆனந்தமயமானவன். சீவனானது சிவனான மெய்யன்புடன் நினைத்து சித்தசுத்தியடைந்து ஆனந்தம் மயமாகிறான். ஆனந்தாதீதம் எனப்படுவது சிதம்பர ரகசியம் எனவும் சதாசிவம் எனவும் அழைக்கப்படுகிறது. சிதம்பரத்திற்குச் சென்றவர்கள் திரும்பிவருவதில்லை என்பது நம்பிக்கை. ஆனந்தாதீதம் சொல்லில் அடக்கமுடியாது. ஆனால் மாணிக்கவாசக சுவாமிகள் அதைச் சொல்கிறார்.

**மாறு இலாத மாக் கருணை வெள்ளமே வந்து**

**முந்தி நின்மலர் கொள்தாள் இணை**

**வேறு இலாப் பதம் பரிசு பெற்ற நின்**

**மெய்ம்மை அன்பர் உன் மெய்ம்மை மேவினார்**

**ஈறு இலாத நீ எளியை ஆகி வந்து**

**ஒளி செய் மானுடம் ஆக நோக்கியும்**

**கீறு இலாத நெஞ்சு உடைய நாயினேன் ஆயினன்**

**கடையன் நாயினன் பட்ட கீழ்மையே. 91**

"கருணைக்கடலே, முன்நாளில் முற்றிலும் பரிபக்குவமடைந்த உனது மெய்யடியார்கள் உனது அருளால் உன்னோடு கலந்துவிட்டனர். பற்றற்றவனாகிய நீ மானிட வடிவெடுத்து என்னை ஆட்கொண்டாய். அதனால் பற்றுக்கள் யாவும் அகன்று உன்னோடு ஒன்றுபட்டேன. அதற்கு முன் மாயையின் வசப்பட்டிருந்தபோது எண்ணிறைந்த பிறவிகள் எடுத்து நான் கீழ்ப்பட்டிருந்தேன" என்று மாணிக்கவாசக சுவாமிகள் சொல்கிறார். இந்த ஒரு பிறப்பிலேயே ஆயிரமாயிரம் துன்பங்கள் சூழ்ந்து என்னை வாட்டி வதைத்து விட்டன. இப்போது எனக்கு அந்த நிலை இல்லை. காரணம் படைத்த சிவன் அவற்றையெல்லாம் கவனிப்பன் தானே. மனிதன் உழைத்து உண்கிறான். ஏனைய உயிர்கள் கடவுள் கொடுப்பதை உண்கின்றன. மிக்க மகிழ்வுடன் வாழ்கின்றன. நேற்றுக் காலையில் யாரோ ஒரு புண்ணியவான் தனது நாயீன்ற குட்டியொன்றைத் தெருவில் விட்டுவிட்டுச் சென்று விட்டான. அதைக் காகங்கள் கொத்தின. அது என்னைக் கண்டதும் என்னிடம் வந்து தனது வாலை ஆட்டியபடி தன்னைக் காப்பாற்றுமாறு கோரியது. நான் சிவனைத் தான் நினைத்தேன். பற்றுக்களை அகற்ற முடியாதா? நான் சிவத்தலங்களுக்குக் செல்லப் போகிறேன். இதை எப்படிக் கவனிப்பது என நினைத்தேன் அப்போது வீதியால் வந்த ஒருவர் அந்த நாய்க்குட்டியைத் தனக்குத் தருமாறு கேட்டார். நான் ஆனந்தத்துடன் அதைக் கொடுத்துவிட்டேன். சிவன் தான் உயிர்களைக் காப்பவன். அதனால் அந்த நாயைக் காக்க ஒருவனை அனுப்பிவிட்டான்" என்றார் அம்பலவாணர்.

**மை இலங்கு நல் கண்ணிப் பங்கனே**

**வந்து என்னைப் பணிகொண்ட பின்மழக்**

**கை இலங்கு பொன் கிண்ணம் என்று அலால்**

**அரியை என்று உனைக் கருது கின்றிலன்**

**மெய் அலங்கு வெண் நீற்று மேனியாய்**

**மெய்ம்மை அன்பர் உன் மெய்ம்மை மேவினார்**

**பொய் இலங்கு எனைப் புகுதவிட்டு நீ**

**போவதோ சொலாய் பொருத்தம் ஆவதே. 92**

"ஆத்மா என்பது ஒன்று. அது ஓசையில்லாதது, தொட்டு உணரமுடியாதது, கர்வமில்லாதது, அழிவற்றது, சுவையற்றது, எப்போதும் இருப்பது, நாற்றமில்லாதது, தொடக்கமும் முடிவும் இல்லாதது, மூலப்பிரகிருதிக்கும் மேலானது. அசையாதது. அந்த ஆத்மாவைச் சிவனின் அருளால் அறிபவன் மரணத்தில் இருந்து விடுதலை அடைவான் என்று மாணிக்கவாசக சுவாமிகள் சொல்கிறார். ஓர் உயிர் பல்வேறு பிறவிகளை எடுக்கிறது. அப்படியாயின் அந்த நாய் முன்பு மனிதப்பிறவி எடுத்திருக்கும். அல்லது பின்பு எடுக்கும். உயிா் எல்லா உடலுக்கும் வினைப்படி சிவனால் அனுப்பப்படுவது என்று வைசவமயம் சொல்கிறது. அதை உண்மையானது என்று உணர்பவர்கள் உயிரின் பெறுமதியை உணர்ந்து அதற்குத் தீமைகள் செய்யார். இதை உணராதவர்கள் சிவனைக் காலம் முழுவதும் வணங்கினாலும் உரிய பலனை பெறமாட்டார். அந்த நாய்க்குட்டி எனது இனத்தவரின் உயிராகவும் இருக்கலாம் என்று நினைப்பவன் தான் மெய்யடியான். சிவனை வணங்கத் தகுதியுடையவன்" என்றார் அம்பலவாணர்.

**பொருத்தம் இன்மையேன் வஞ்சம் உண்மையேன்**

**போதஎன்றுஎனைப் புரிந்து நோக்கவும்**

**வருத்தம் இன்மையேன் வஞ்சம் உண்மையேன்**

**மாண்டிலேன் மலர்க் கமல பாதனே**

**அரத்த மேனியாய் அருள் செய் அன்பரும்**

**நீயும் அங்கு எழுந்தருளி இங்கு எனை**

**இருத்தினாய் முறையோ என் எம்பிரான்**

**வம்பனேன் வினைக்கு இறுதி இல்லையே. 93**

“படைத்த கடவுளாகிய பிரமன் இந்திரியங்களைப் புறத்தே செல்லும்படி படைத்தமையால், புறத்தில் இருப்பவற்றையே ஒரு உயிர் காண்கிறது. உள்ளே இருக்கும் ஆன்மாவை யாரும் காண்பதில்லை. அதை உணரும் ஒருவன் தான் ஆன்மாவைத் தரிசிக்கின்றான். மாணிக்கவாசக சுவாமிகள் இந்திரியங்களைப் புறத்தே செல்லவிடாது தடுத்தமையால் அவர் ஆன்மாவைத் தரிசித்தார். அதனால் சொல்கிறார்; “சிவனே, நீ என் முன் தோன்றி; “வா வா என்று நீ விரும்பி அருளோடு அழைக்கவும். நான் அதைக் கவனிக்காது இருந்தேன். நான் ஒரு வஞ்சகன். ஏனென்றால் நான் உன்னை மெய்யன்புடன் உணராததால் பற்றுக்களுடனேயே இருக்கின்றேன். ஆனால் மெய்யன்பர்களோடு நீ ஒன்றுபட்டிருக்கிறாய். அப்படியிருக்க இந்த நிலையற்ற தன்மையில் நீ என்னை விட்டு வைத்திருப்பது முறையானதா? இங்கு வீண்பொழுதைக் கழிக்கும் எனக்கு முடிவு இல்லையா?” என்று கேட்கிறார். இது கதிரேசண்ணையைப் போன்ற நிலை. சிவத்தலங்களுக்குச் செல்ல முடிவு கட்டிய பின்பும் கவலைப்படுவதில் அர்த்தம் இல்லை என்று தெரிந்தும் கவலைப்படுவது போல மாணிக்கவாசக சுவாமியார் சிவனால் ஆட்கொள்ளப்பட்ட பின்பும் புலம்புகிறார்” என்றார் அம்பலவாணர்.

**இல்லை நின் கழற்கு அன்பு அது என் கணே**

**ஏலம் ஏலும் நல் குழலி பங்கனே**

**கல்லை மென்கனி ஆக்கும் விச்சை கொண்டு**

**என்னை நின் கழற்கு அன்பன் ஆக்கினாய்**

**எல்லை இல்லை நின் கருணை எம்பிரான்**

**ஏதுகொண்டு நான் ஏது செய்யினும்**

**வல்லையே எனக்கு இன்னும் உன் கழல்**

**காட்டி மீட்கவும் மறு இல் வானனே. 94**

“அம்பலவாணா, நீ நினைப்பது தவறு. மலர்களை அணிந்த அழகிய கூந்தலை உடைய அம்பிகையின் பாகனான சிவன் ஒரு கணமேனும் அம்பிகையைப் பிரிந்ததில்லை. அது ஏன் தெரியுமா சிவனது முன்னிலையில் அக்கினியைச் சாட்சியாக வைத்தே எனது மனைவியைக் கைப்பிடித்தேன். அது சிவப்பாசம் போன்று இறுதிவரை நீடிக்க வேண்டும். ஒரு கணவன் மனைவி மீது வைக்கும் அன்பும் மனைவி கணவன் மீது வைக்கும் அன்பும் சிவசக்தியாகச் சிவத்தை அடைகிறது. கணவனும் மனைவியும்

உடலால் பிரிந்திருந்தாலும் உள்ளத்தால் ஒன்றுபடாதிருப்பது தான் சிவ வாழ்க்கை. அதை உடல் மீது திணிப்பதாகக் கருதக் கூடாது. மனைவி இறக்கும் வரை கணவன் சிவனைப் போலப் பிரியாதிருத்தல் வேண்டும். இப்போ அவள் நோய்வாய்ப்பட்டிருப்பதால் தான் மனம். சிவனை நாடியது. அது சரியாக பட்டது. மாணிக்கவாசக சுவாமிகள் சொல்வது போல, உனது திருவடி மீது நான் அன்பு வைக்கவில்லை. இருப்பினும் எனது கல் போன்ற மனதை உருக்கிப் பக்குவப்படுத்தினாய். அதனால் உனது திருவடி இன்பம் கிடைத்தது. நான் எதை நினைத்தாலும், செய்தாலும் நீ விரும்பி ஏற்றுக் கொண்டாய். அப்படியிருந்தும் என்னை உன்னோடு சேர்த்துக் கொள்ளவில்லை. இது ஏன்?" என்று கேட்பதைப் போல நான் கேட்கமாட்டேன். எனது நினைவு, கனவு யாவும் உனக்குத் தெரியுமாதலால் எனது நியாயமான விருப்பங்களைப் பூர்த்தி செய் என்று நினைப்பேன். நினைப்பதைக் கேட்டறியும் தன்மை வாய்ந்த சிவன் அதைக் கேட்டுத் தெரிந்து கொண்டான். அது எனக்கு மனநிறைவைத் தருகிறது" என்றார் கதிரேசன்.

**வான நாடரும் அறி ஒணாத நீ**

**மறையில் ஈறும் முன் தொடர் ஒணாத நீ**

**ஏனை நாடரும் தெரி ஒணாத நீ**

**என்னை இன்னிதாய் ஆண்டு கொண்டவா**

**ஊனை நாடகம் ஆடு வித்தவா**

**உருகி நான் உனைப் பருக வைத்தவா**

**ஞான நாடகம் ஆடு வித்தவா**

**நைய வையகத்து உடைய விச்சையே. 95**

மாணிக்கவாசகர் சொல்லுகிறார்; "சிவனே உன்னைத் தேவர்கள் அறிந்து கொள்ளவோ புரிந்து கொள்ளவோ மாட்டார்கள். உபநிடதங்களால் உன்னை விளக்க முடியாது. மெய்யடியார்களன்றி மற்ற யாரும் உன்னை அறியமாட்டார்கள். உன்னை நான் அறிவதற்காகவே என்னை நீ ஆட்கொண்டாய். அத்துடன் என்னைப் பக்குவப்படுத்துவதற்காகவே என்னைக் கொண்டு சிவசேவை செய்வித்தாய். பக்தியால் உன்னை மெய்மறக்கச் செய்து உன்னையே நினைக்க வைத்தாய். ஞானம் எனது மனதில் பெருகுமாறு செயற்பட்டாய். அதனால் அறியாமையிலிருந்து விடுபட்டுச் சிவஞானத்தைப் பெற்றேன்" என்கிறார். இது உண்மையான வாக்கியம்.

இது உனது வாழ்வில் அடிக்கடி நடைபெறுகிறது. இப்போதும் அவனை நினைத்துக் கவலை கொண்டு முறையிட்டேன். முறையிட்டதால் அது நடந்துவிட்டது. அதனால் அவனின் மீதுள்ள பற்று உள்ளத்தில் பொங்கி எழுகிறது. மாணிக்கவாசக சுவாமிகள் சொல்வது போல நான் சிவசேவை செய்தமையால் பலரும் நன்மையடைந்து சிவனின் அருளைப் பெற்றனர். சிவச்சேவை என்னைத் தூய்மைப்படுத்தியது. உலகைப் புரிய வைத்தது. அத்துடன் சிவனின் நினைவு பெருகியது. சிவன் என்னைப் புரிந்து அருள ஆரம்பித்தான். இது மாணிக்கவாசகரது உண்மையான கூற்று. இதை உணர்ந்து மக்கள் பின்பற்ற வேண்டும்" என்றார் கதிரேசன்.

**விச்சு அது இன்றியே விளைவழு செய்குவாய்**

**விண்ணும் மண்ணகம் முழுதும் யாவையும்**

**வைச்சு வாங்குவாய் வஞ்சகப் பெரும்**

**புலையனேனை உன்கோயில் வாயிலிற்**

**பிச்சன் ஆக்கினாய் பெரிய அன்பருக்கு**

**உரியன் ஆக்கினாய் தாம் வளர்த்தது ஓர்**

**நச்சு மாமரம் ஆயினும் கொலார்**

**நானும் அங்கனே உடைய நாதனே.** **96**

"மாணிக்கவாசக சுவாமிகள் சொன்னதெல்லாம் உண்மையான வாக்கியங்கள் என்று உணர்ந்தவர்கள் அதைப் பின்பற்றுவர். அவர் சொல்கிறார்; "விண்ணுலகம் மண்ணுலகம் அண்டங்கள் அனைத்தையும் விதை விதைக்காமலே தோற்றுவித்தாய். நிலை பெறச்செய்தாய். காத்தாய். ஆனால் உனக்கே உரிய நான் அந்தப் பிரபஞ்சத்திற்கு உரியவனாக என்னை ஆக்கிக் கொண்டமையால் நான் வஞ்சகன். புலால் ஆன உடம்பை நான் வைத்துக் கொண்டிருப்பதால் நான் புலையன். உடலில் பற்று வைத்திருப்பதால் நான் உன்னை அடைய முடியாது. என்னைப் பக்குவப்படுத்துவதற்காக உன்மீது பித்துப் பிடிக்க வைத்தாய். அத்துடன் என்னை உனது கோவிலின் வாயிலில் வைத்தாய். உனது அன்பர்களுக்குத் தொண்டு செய்யும் தொண்டனாகவும் என்னை வைத்தாய். இவை யாவும் என் மீது நீ கொண்ட கருணையினால் செய்தவை. உலகத்தவர் வளர்த்த மரம் நஞ்சாகி பயனற்றுப் போனாலும் அதை வெட்டி அகற்ற மாட்டார்கள். அவ்வாறு நீ என்னைப் புறக்கணித்து

விடாதே" என்கிறார். விதையில்லாமல் விளையும் பூமியுண்டு. அதை என் வாழ்நாளில் நான் கண்டேன். ஒரு முறை மழை பெய்துவிட்டது. ஆடி மாதம் சிறு தூறலாக மழை பெய்யும். அதை நம்பி எல்லோரும் விதைத்து விட்டனர். அதன் பின் மழை பெய்யவில்லை. அதனால் பயிர்கள் அழிந்து விட்டன. பின் மழை பெய்ய ஆரம்பித்தது. பொதுவாக விவசாயிகள் விதைக்கும் நெல் பிழைத்து விட்டால் திருப்பி விதைப்பதற்கு விதை நெல் சிறிதளவு வைத்திருப்பர். எனக்கு விதைக்க ஐந்து புசல் நெல் தேவை. நல்லைநாதனுக்கு மூன்று புசல் தேவை. என்னிடம் ஒரு புசல் விளைநெல்லும் நல்லைநாதனிடம் அரைப் புசல் நெல்லும் தான் இருந்தன. அதுபோலத்தான் ஏனைய விவசாயிகளிடமும் இருந்தது. சிவனிடம் முறையிட்டு விட்டு விதைத்தோம். வழமையாக விளையும் விளைச்சலைவிட இரு மடங்கு விளைச்சலைப் பெற்றோம். இது விதையில்லாமல் விளைந்த விளைச்சல் தானே. மாணிக்கவாசக சுவாமிகள் சொன்னதைப் போலவே சிவன் எனக்கு அருள்வதற்காகவே எதை எதையெதையோவெல்லாம் செய்தான்" என்றார் கதிரேசன்.

**உடைய நாதனே போற்றி நின் அலால்**

**பற்று மற்று எனக்கு ஆவது ஒன்று இனி**

**உடையனே பணி போற்றி உம்பரார்**

**தம் பராபரா போற்றி யாரினும்**

**கடையேன் ஆயினேன் போற்றி என் பெரும்**

**கருணையாளனே போற்றி என்னை நின்**

**அடியன் ஆக்கினாய் போற்றி ஆதியும்**

**அந்தம் ஆயினாய் போற்றி அப்பனே. 97**

"நீ எனக்குரியவன். ஆதலால் எனக்கு உன்னையல்லாது வேறு யாரின் உதவிகளும் இல்லை. இருந்தால் சொல். தேவர்களின் அதிபதியே, உன்னை நான் வணங்குகிறேன். எல்லோரையும் விடக் கீழானவனான என்னை நீ உனது பெருங்கருணையினால் அடிமையாக்கினாய். எனக்குத் தொடக்கமும் முடிவும் நீயே. அப்பனே உன்னை நான் போற்றி வணங்குகிறேன்" என்கிறார். உலகத்தில் உள்ளவர்களுக்கு உதவி செய்யச் சிவன் இருக்கிறான். இல்லாவிட்டால் அவன் உதவி செய்யக்கூடிய ஒருவனை அனுப்புவான். இதுவும் எனது வாழ்க்கையில் அடிக்கடி நடைபெற்றது. அண்மையில் கொடிய பாவி ஒருவனால் கெடுக்கப்பட்ட ஒரு பெண்ணுக்கு

வாழ்வு கொடு என்று சிவனைக் கெஞ்சி மன்றாடினேன். ஓர் உயர்ந்த பதவி வகிக்கும் ஒரு சிவனடியானைச் சிவன் அப்பெண்ணுக்குக் கணவனாக அனுப்பி வைத்தான். அவனுக்கு நடந்தவற்றைக்கூறித் திருமணம் செய்து வைத்தேன். இப்போ அவர்களுக்கு இரண்டு பிள்ளைகள். மிகவும் மகிழ்வுடன் சிவனுக்குச் சேவை செய்கின்றனர். இது சிவனின் இயல்பு. அதை நான் உங்களுக்குச் சொல்லத் தேவையில்லை" என்றார் கதிரேசன்.

**அப்பனே எனக்கு அமுதனே ஆனந்தனே**

**அகம்நெக அள் ஊறு தேன்**

**ஒப்பனே உனக்கு அரிய அன்பரில்**

**உரியனாய் உனைப் பருக நின்றது ஓர்**

**துப்பனே சுடர் முடியனே துணை**

**யாளனே தொழும்பாளர் எய்ப்பனில்**

**வைப்பனே எனை வைப்பதோ சொலாய்**

**நைய வையகத்து எங்கள் மன்னனே. 98**

"எனக்குத் தந்தையே, அமிர்தமே, ஆனந்தமே, தேனே உனது மெய்யன்பர்களைப்போல நானும் உரிமையாளனாகி உன்னைப் புசித்து உயிர் வாழ்வதற்கான உணவே, ஒளிபொருந்திய திருமுடியை அணிந்தவனே, என்றும் மாறாத துணையாக இருப்பவனே, சிவனடியார்கள் துன்பப்படும்போது உதவுபனே. இவ் பொய்யுலக வாழ்க்கையில் நான் துன்புற்றிருப்பது நியாயமா…?" என்று மாணிக்கவாசக சுவாமிகள் கேட்கிறார். அது உண்மை. நான் துன்பப்படும் போதெல்லாம் எனது துன்பங்களை நீக்கியவன் சிவன். ஒரு முறை வயல் விளையவில்லை. பெருங் கஷ்டம் பிள்ளைகள் பல்கலைக்கழகத்தில் படித்துக் கொண்டிருந்தனர். பணமில்லாததால் பெரும் சிரமப்பட்டேன். வெளிநாட்டில் இருந்து வந்த இனத்தவர் ஒருவர் எனக்கு பண உதவி செய்தார். சிவன் தான் அதைச் செய்கிறார் என்று நினைத்துச் சிவனுக்கு நன்றி செலுத்தினேன். இரண்டு வருடங்கள் கழிய அவர் மீண்டும் வெளிநாட்டில் இருந்து வந்தார். அவர் தந்த பெரும் தொகையான பணத்தையும், வட்டியையும் கணக்குப் பார்த்து அவரிடம் கொண்டு சென்றேன். அவர் தான் முன்பு இங்கு வரவில்லை என்று சிவன்மீது சத்தியம் செய்தார். தான் வந்ததை நிரூபிக்கும்படி கேட்டார். நான் நல்லைநாதனோடு சென்றுதான் பணத்தைப் பெற்றேன். நான் நல்லைநாதனுடன் சென்று

அவரைச் சந்தித்தபோது அவர் தனக்கு நல்லைநாதனைத் தெரியாது என்றார். நல்லைநாதனும் தனக்கு அவரைத் தெரியாது என்றான். நான் இன்றுவரை யோசித்தும் என்னால் எதையும் தீர்மானிக்க முடியவில்லை. எனது நெருங்கிய உறவினர் அவர். அதனால் சிவன் அவருருவில் வந்திருக்கலாம் என்று நினைக்கிறேன்" என்றார் கதிரேசன்.

"எனக்கு அவரை முன்பின் கண்ட ஞாபகம் இல்லை. அத்துடன் நான் கதிரேசண்ணையுடன் சென்றதும் இல்லை. மாணிக்கவாசக சுவாமிகள் கூறுவதைப் போலச் சிவன் துன்பப்படும் அடியார்களுக்கு உதவுவான்" என்றார் நல்லைநாதன். அப்போதும் கதிரேசனின் மனம் அமைதியடையவில்லை.

**மன்ன எம்பிரான் வருக என் எனை**

**மாலும் நான்முகத்து ஒருவன் யாரினும்**

**முன்ன எம்பிரான் வருக என் எனை**

**முழுதும் யாவையும் இறுதி உற்ற நான்**

**பின்ன எம்பிரான் வருக என் எனைப்**

**பெய் கழற் கண் அன்பாய் என் நாவினால்**

**பன்ன எம்பிரான் வருக என் எனைப்**

**பாவ நச நின் சீர்கள் பாடவே. 99**

"மாணிக்கவாசக சுவாமிகளைச் சிவன் நேரில் வந்து ஆட்கொண்டபோதே அவர் சிவமயமாகிவிட்டார். அதன்பின் அவருக்குப் பூமியில் வாழப் பிடிக்கவில்லை. அதனால் திருவாசகத்தின் ஒவ்வொரு பாடலிலும் தன்னை உடனே ஏற்றுக் கொள்ளும்படி சிவனை வலியுறுத்தி இரக்கிறார். இப்பாடலில் அவரது இரத்தல் மேலோங்கியுள்ளது; "சிவனே, உலகத்தின் தலைவனே, அடியேனை வருகவெனக் கட்டளையிடுவாயாக. மாலுக்கும் அயனுக்கும் மூலப்பொருளே என்னை வருகவென்று அன்போடு அழைத்து ஏற்றுக் கொள்வாயாக. ஊழிக்காலத்தின்போது நீ ஒடுங்கியிருக்கும்போது எல்லாவற்றையும் உன்னுள் ஒடுக்கித் தளைத்திருக்கும் ஒப்புயர்வில்லாத் தலைவனே, என்னை வருகவென்று அழைப்பாயாக. உன்னை வந்தடைந்தவர்களது வினையைப் போக்குபவனே, நான் உன்னைப் புகழ்ந்து போற்றி வணங்கவும், உனது மகிமையைப் பாடவும் என்னை உன்னோடு சேர்த்துக் கொள்வாயாக" என்று இரக்கிறார். இப்போ எனது நிலையும் அதுதான். மனைவியின் நோயும் பிரிவும்கூட என்னை வாட்டவில்லை. உலக வாழ்க்கை கசந்து விட்டது. தொண்ணூறு வயதுவரை வாழ்ந்து என்ன சுகத்தைக்

கண்டேன். சிவனை வழிபட்டதால் அவரின் அருளால் வசதியாக வாழ்ந்தும், மனக்குறைகள், குழப்பங்கள், கவலைகள், குறைபாடுகள் எவையும் நீங்கவில்லை. என்னைத் தேடிவந்த இன்பங்களும் நெடுநேரம் நீடிக்கவில்லை. அதன் பலன் துன்பம் தான். துன்பமான உடலை மாணிக்கவாசக சுவாமிகள் வெறுக்கிறார். யாருக்கு எதைச் செய்தாலும் குறையைத் தானே காண்கின்றனர். அதைத்தானே பெரிதுபடுத்துகின்றனர். எதைச் செய்தாலும் தன்னையும் தன்னைச் சூழ உள்ளவர்களையும் தானே மதிக்கின்றனர். புகழ்கின்றனர். தமது நன்மைக்காகத் தானே சிவசேவையும் செய்கின்றனர். பலர் சிவவேடமிட்டுக் கொள்ளை அடிக்கின்றனர். பதவிகளையும், விருதுகளையும் பெறுகின்றனர். தம்மையே மேலாளராகக் காட்டிக் கொள்கின்றனர். அப்படியான உலக வாழ்க்கை எனக்கு வேண்டாம்" என்றார் கதிரேசன்.

**பாடவேண்டும் நான் போற்றி நின்னையே**

**பாடிநைந்துநைந்துருகி நெக்குநெக்கு**

**ஆடவேண்டும் நான் போற்றி அம்பலத்**

**தாடுநின்கழற்போது நாயினேன்**

**கூடவேண்டும் நான்போற்றி யிப்புழுக்**

**கூடு நீக்கெனைப் போற்றி பொய்யெலாம்**

**வீடவேண்டும் நான் போற்றி வீடுதந்**

**தருளு போற்றிநின் மெய்யர் மெய்யனே. 100**

"சிவனே, உன்னை எந்நாளும் போற்றிப் புகழ்ந்து பாட வேண்டும். உள்ளம் உருக உருகப் பாடிப்பாடி ஆடிப் பரவசமடைய வேண்டும். சிதம்பரத்தில் கூத்தாடும் உனது அரிய காட்சியைக் கண்குளிரக் கண்டு அதனுடன் இணைந்து கலக்க வேண்டும். இந்த புழுக்கள் நிறைந்த உடலை நீக்கி உன்னோடு கலந்து நித்திய இன்பம் பெற வேண்டும். அந்த நித்திய பேரின்பமான முத்தி எனக்கு வேண்டும்" என்கிறார் மாணிக்கவாசக சுவாமிகள். "நான் தமிழ்நாட்டிற்குச் சென்று எல்லாச் சிவன்கோவில்களையும் தரிசித்த பின்பு அம்பலத்தில் கூத்தாடும் அம்பலவாணரின் சன்னிதியில் எனது உயிர் போகவேண்டும். அப்படிப் போனால் எனது இறுதிக் கிரியைகளை அங்கேயே செய்து, எனது அஸ்தியைக் கங்கையில் கரையுங்கள்" உணர்ச்சிவசப்பட்டார் கதிரேசன். சுவாமியாரும் அங்கு கூடியிருந்தோரும் திகைத்துப் போனார்கள்.

*திருச்சிற்றம்பலம்.*